உ

கடவுள் துணை.

---

வித்வசிரோன்மணியாகிய

# புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

# மின்னொளியாள்குறம்.

இஃது

மணிமங்கலம்,

வடிவேலுமுதலியா ரவர்களால்

பார்வையிடப்பட்டு.

---

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

P. N. C. கடைகாரியம்.

M. கிருஷ்ணப்பிள்ளையவர்களால்

---

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியா ரவர்களது

சென்னைக் குயப்பேட்டை,

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1912

சென்னை குயப்பேட்டை படவேட்டம்மன் கோயில்வீதி 64.

வ

மகாகணபதிதுணை.

புதிதாயச்சிட்ட

# வள்ளியம்மை சுயம்வரம்.

இஃது வள்ளியம்மை மான்வயிற்றிற் ஜெனித்து குறவர்க்கரசனாகிய நம்பிராஜன் கிரகத்தில் வளர்ந்து கன்னிப்பருவங்கழித்து தக்க பருவதிசையடைந்து வனஞ்சென்று செந்தினைக்கதிரைப் பக்ஷிஜாதிகள் கொய்யாது காவல்புரிந்து நாரதமா முனிவரோடு வாதுகூறிச் சுப்ரமண்ய வேடவனோடு வாதுபேசிப் பண்டாரக் கிழவனோடு மனமகிழ்ந்து பரண்மீதிருந்து அன்னவருக்குத் தொண்டுசெய்து சுனையையடுத்து யானையாற் சிவசுப்பிரமணியரை காந்தர்வமணம்புரிந்து தினைக்கதிரறுத்து அண்ணமார்களோடு சிற்றூர் சென்று குகனினைந்தனை சோகித்துப் பின்னர்ச் சிவசுப்பிரமணியரைப் பாணிக்கிரகணஞ்செய்து திருப்பரங்குன்றஞ் செல்லுதல். இப்பாகங்களில் சாஸ்திரயுக்தப்படி நவரசங்களாலும் இந்துஸ்தான், பாரீஸ், கெஜல், டோமரி, துக்கடா, சிந்து, கீர்த்தனை, கலிப்பா, வெண்பா, விருத்தப்பா, ஓரடிப் பதம் முதலிய வர்ணமெட்டுகளினாலியற்றப்பெற்று நல்ல கிளேஸ் கடிதத்தில் ஆங்காங்கு ஐதீகப்படங்களமைத்து அச்சிட்டுத் தயாராயிருப்பதாலும் காப்பி சொற்பமாய் அச்சிட்டிருக்கிறபடியாலும் வேண்டுவோர் என்விலாசத்திற் கெழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணா 0 12 0

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

பி. நா. சிதம்பரமுதலியார்.

பிரம்பூர் பாரெக்ஸ்போஸ்டு மதராஸ்.

உ

கடவுள்துணை.

# மின்னொளியாள் குறம்.

### விநாயகர் தோத்திரம்.

ஐந்துகரத்தோனே அருள்சடையான்புத்திரனே
ஆனைமுகப்பிள்ளையாரே ஆறுமுகர்க்குமூத்தோரே
வேறுவினைவாராமல் விநாயகரேமுன்னடவீர்
ஆதிசிவன்தன்மகனே ஆயன்மருகோனே
பேழைவயிற்றோனே பெருமாள்மருகோனே
முன்னடக்கம்பிள்ளையற்குக் கண்ணடக்கம்பொன்னாலே
கண்ணடக்கம்பொன்னாலே காற்சிலம்புமுத்தாலே
முத்தானதண்டைகொஞ்ச முன்னடவும்பிள்ளையாரே
பாட்டுக்குகந்தருளும் பார்வதியாள்புத்திரனே
ஆலடியிற்பிள்ளையாரே ஐந்துகரத்தோனே
மூலமுதலேநீர் முன்னடக்கவேண்டுமையா

### சரஸ்வதிதோத்திரம்.

தாயேசரஸ்வதியே சதுர்முகனார்தேவியரே
சரஸ்வதியேவாணியரே தாயேவரங்கொடுப்பாய்
என்நாவிலேநீயிருந்து நல்லோசையருள்புரிவாய்
ஏடுதவறாமல் எழுத்தாணிசாயாமல்
தப்பிதங்கள்வாராமல் சரஸ்வதியேமுன்னடவாய்

### கதையின்வரலாறு.

பட்டணமாம்பட்டணமாம் இந்திராபுரிபட்டணமாம்
பட்டணத்தையாளுகிற பஞ்சவர்களைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளும்நாளையிலே
வில்வாங்கும்அர்ச்சுனனார் விசையனிடதேவியர்கள்
அர்ச்சுனனார்தேவியர்கள் ஐந்திரண்டுயேழுபேராம்
பாஞ்சாலன்பெற்றபெண்ணாம் பைங்கிளியாள்துரோபதையும்
நாகராசன்பெற்றபெண்ணாம் நாககன்னிமாதுஅவள்
சித்தாயன்தங்கையவள் சுபத்திரைநாயகியாள்

பாண்டியர்கள்பெற்றபெண்ணும் பைங்கிளியாளல்லியம்மாள்
மேகராசன்பெற்றபெண்ணும் மெல்லியந்தமின்னொளியாள்
அகஸ்தியனார்பெற்றபெண்ணும் அன்பானபோகவதி
சேரும்புராசன்பெற்ற செலவதியாள்பவளக்கொடி
எழுலட்சப்பெண்டுகளாம் அவர்களுக்குதாதியர்கள்
ஆண்டிருக்குநாளையிலே அருச்சுனராசதுரை
ஒற்றைவொருநாளில் உத்தமனும்அருச்சுனனார்
தருமர்தம்பியருச்சுனன் தனஞ்சயனுந்தானெழுந்து
முழுகிக்குளித்து முன்மயிரைபின்போட்டு
பூசைமுடித்தானே பொற்பூசைதான்முடித்து
ஆடையுமாபரணம் அலங்கிர்தஞ்செய்துக்கொண்டு
மல்லிகைப்பூமாலையது மார்பில்பிரண்டாட
கொற்றப்பூமன்னனுக்கு கொண்டையிலேபூவுதிர
பொன்னிழைத்ததுப்பட்டா பூமியில்புரண்டாட
சாந்தால்மிதியடியாம் சந்தனத்தால்மேற்குமிழாம்
முத்தால்மிதியடியாம் மேலானரத்தினமாம்
பூவால்மிதியடியைப் போட்டுநடந்தாரே
கோட்டைகடந்தாரே கொத்தளமுந்தான்கடந்தார்
தெத்துத்தெருகடந்தார் தேரோடும்வீதிவிட்டார்
மாளிகைகடந்தாரே மன்னரிடவீதிவிட்டார்
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிவிட்டார்
நெத்தடிப்பெண்களெல்லாம் தேரடிப்பெண்களெல்லாம்
ஆலஞ்சுழற்றுவார்கள் அப்புறத்தேவிட்டெறிவார்
திருஷ்டிகழுத்திடுவார் திசைநான்கும்விட்டெறிவார்
கன்னிமார்பெண்களெல்லாம் கண்டாசைபெற்றார்கள்
பட்டணத்துப்பெண்களெல்லாம் பார்த்தாசைபெற்றார்கள்
ஆகாயகன்னியர்கள் ஆசைகொண்டுநின்றார்கள்
என்னென்றுக்கேளாமல் யேறமுகம்பாராமல்
மின்னொளியாள்கோவிலுக்கு விருப்பமுடன்வாராராம்
மின்னொளியாள்செய்கிற விபரங்கள்சொல்லுகிறேன்
அன்னநடைமின்னொளியாள் அரிவையருந்தானெழுந்து
பாலைகொண்டுபல்விளக்கி வேலைகொண்டுநாவழித்து
முழுகிக்குளித்தலவோ முன்மயிரைப்பின்போட்டு
கோதிமயிராற்றி கோடாலிமுடிபோட்டு

ஈரத்துயிலுடனே யெழுந்தாளேமின்னொளியாள்
ஆசாரவாசலிலே அன்னநடைமாதியர்கள்
பூசைக்கிடம்வைத்தார் பொற்கொடியாள்வந்துநின்று
வட்டமணைமேலே வந்தமர்ந்துமின்னொளியும்
அரகராவென்றல்லோ அணிந்தாளேவெண்ணீறு
சிவசிவாவென்றல்லோ திருநீறுதானணிந்து
பண்ணைப்பூபோட்டு பகவானைப்பூசைசெய்து
புன்னைமலரொடுதறு பெருமானைப்பூசைசெய்து
கண்ணிரண்டுமூடியல்லோ கர்த்தன்மேல்நினைவானள்
ஆதிசிவனைநோக்கி அரும்பூசைசெய்திருந்தாள்
அந்தச்சமயத்தில் அர்ச்சுனனும்வாருரே
மின்னொளிகோட்டைதேடி விசயரும்வாருரே
பத்துகட்டு அரண்மனையும் பார்த்திபன்தான்கடந்து
ஆசாரவாசல்தேடி அருச்சுனரும்வாருரே
மின்னற்கொடியாள் மெல்லிநல்லாள்பூசையிலே
சித்திரப்பதுமையைப்போல் செல்வதியாள்நிற்கிறதை
காண்டீபனருச்சுனரும் கண்டாரேகன்னியரை
சூரியனைப்போலேயல்லோ துலங்குகிறாள்கன்னியரும்
உற்றுற்றுப்பார்த்தானே வொளிபிறங்ககண்ணாலே
கண்ணாலேபார்க்கையிலே காமரூபனருச்சுனற்கு
மன்மதனெய்தகணை மார்புருகிப்போகிறதாம்
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகிறதாம்
ஆறுருகுபாணமது மார்புருகிப்போகிறதாம்
ஆணழகுமன்னன் அர்ச்சுனவீரியரும்
அவள்-பக்கத்தில்வந்துநின்று பார்த்திபனருச்சுனரும்
நின்றுனவரைகாழி நினைத்தானேகோடிபுத்தி
பொறுத்துமுடிவதில்லை பொங்குதுதேகமெல்லாம்
ஏண்டிபெண்ணேமின்னொளியே யிந்நேரம்நிற்பேனே
ஆசையெல்லாமுன்மேலே அலையுதேயென்னசெய்வேன்
என்னிலும்பூசையென்ன யேந்திழையேயுந்தனுக்கு
பத்தாகாவிருக்கையிலே பரமன்பூசையுனக்கேண்டி
என்று-தாவியணைந்து சரசங்கள்செய்யலுற்றுன்
அப்போகோபம்பெருகிக் கொம்பனையுந்தான்சீறி
மதிப்பெற்றுபோச்சுதோதான் வாள்விசையாயுந்தனுக்கு
நான்-அர்ச்சனைசெய்து அரனைநினைந்துருகி

பூசையில்நானிருக்கப் போர்விசையாயுக்தனுக்கு
புத்தியில்லாமற்போச்சோ போர்விஜயாயுக்தனுக்கு
அப்படிக்கொற்ற அர்ச்சுனனேநீயெனக்கு
எதுக்குதவியென்ன பிணிவேண்டாமுன்னுசை
வேண்டாமென்றுசொல்லி விருதெடுத்துஊதிவைத்தாள்
ஆகாதவனென்று அருச்சுனனை ஊதிவைத்தாள்
அன்றுமுதலின்றளவும் அருச்சுனனும்வாரதில்லை
அன்றுமுதலாக அருஞ்சிறையில்தானிருந்தான்

## துரௌபதை தன்காதிபிடத்தில் அருச்சுனன் தேவிகளை விருந்துக்கழைத்து வரச்சொன்னது.

அப்படியாக அனேகநாட்சென்றபின்பு
மாதொத்தமங்கையர்கள் மயிலனையாள் துரௌபதையும்
தோராவடிவழகி துரோபதையுங்கூறிடுவாள்
வாள்விசையனருச்சுனற்கு மங்கையர்களாயிரமாம்
சொல்லிமுடியாது சுந்தரிமாராயிரம்பேர்
கூறவுங்கூறி முடியாதுகொம்பனைமார்
பாலானமேனிப் பனிபூக்குழலாளும்
பொன்னானமேனிப் புதுப்பொன்மடந்தையரும்
சொர்னவடிவழகியரும் சோழன்மடந்தையரும்
ஆறெங்குமோதும் அகஸ்தியனார்பாவையரும்
அங்கமலர்ப்பூவில் அவதரித்த அல்லியரும்
சங்குடையாள்தங்கை சுபத்திரைநாயகரும்
பரிவானமங்கையரைப் பார்க்கதந்தபாஞ்சாலி
சிறசோரமுதன்னுந் தேன்மொழிமாரெல்லவரும்
தோருவடிவழகி துரௌபதைநாயகியும்
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக்கி
முத்தின்கவரியிடும் மூப்பின்முகம்நோக்கி
அந்த-ஆனைலழருமன்னன் அருச்சுனர்தேவிகளை
அத்தனைபேரையும் அழைத்தோடிவாருமென்றான்
அப்படியேயென்னுச்சி அழைத்தோடிவருவேனென்று
ஆரிழைபாக்தாதி அதிவேகமாய்நடந்து
சித்திரவீதி தெருவும்பலகடந்து
தேரோடும்வீதி தெருவும்பலகடந்து
முத்தணிந்தவாசல் முகப்பிலேபோய்நின்று

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்காயகத்தை
தாமக்குழலாளுந் தாவிபோய்த்தெண்டனிட்டாள்
வைலகவளநாடி மாதவம்போல்போய்நடந்து
நீ-ஆருடையதாதி அரியவுரையுமென்றார்
நான்-ஆருடையதாதியல்ல அடியேன்திருப்பணிதான்
தென்மதுரையாளுகிற தேன்மொழியேவிண்ணப்பம்
அன்னமேகேளீர் அடியேன்வாய்விண்ணப்பம்
எங்கள்-தேன்மொழியாள்கோவிலிலே விருந்தமுதுண்பதற்கு
அஞ்சலருமும்மை அழைத்துவரச்சொன்னார்கள்

## அர்ச்சுனன்தேவிகள் துரௌபதையிடம்வந்தது.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
விருந்தமுதென்றுசொல்ல மெல்லியருஞ்சம்மதித்து
அவள்-பச்சைக்கடகம் பவழத்தாலாபரணம்
தக்கத்திலேலே சரப்பளிகோவையுடன்
தாளிப்பதக்கமும் சன்னத்தின்னற்றும்வடமும்
இசைந்தநல்லபாவாடை இளமாதுளம்பட்டுடுத்தி
மாணிக்கத்தண்டிகை வருகவருகவென்றாள்
வாவென்றுசொல்லவே தண்டிகைகொண்டுவந்தார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கோவிலிலே
மாணிக்கத்தண்டிகைமேல் ஏறியந்தமெல்லியரும்
வந்துபுகுந்தார்கள் மெல்லியர்களெல்லோரும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
நீருமண்டபத்தை சென்றார்கள்சேரிழைமார்
முல்லைவாரும்பெடுத்து மெல்லியர்கள்பல்விலக்கி
வாயோடுபல்லும் மதிமுகந்தான்கழுவி
ஆடைகளைந்து ஆபரணந்தான்களைந்து
சிவசங்கராவென்று ஸ்நானமதுசெய்தார்கள்
ஆசாரமண்டபத்தே வந்தாரணியிழைமார்
மாதின்குழல்நீண்ட வல்லமடமாதர்
சிறிமயிராற்றி சந்தணம்புகைகொடுத்து
ஒவ்வொருமயிருக்கும் ஒவ்வொருபொன்னிதழும்
மாணிக்கச்சிப்பாலே வாரிமயிர்முடித்து
ஆயிரம்பொன்பெற்ற அணிவயிரந்தான்முடித்து
மருக்கொழுந்துவைத்து முடித்தார்வல்மாக

ஆபரணப்பெட்டி அணியிழைமார்தான்திறந்தார்
விலைமதிக்கப்போகாத மெல்லியர்கள்தன்பதக்கம்
பூட்டியலங்கரித்துப் பொற்கைவளநாட்டியர்கள்
மாணிக்கத்தண்டிகையின்மேல் யேறியந்தமெல்லியரும்
மங்களவீதியிலே வந்தாரேமாதரெல்லாம்
இநில்-விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்மெல்லியரும்
கலங்குமனதுடனே காரிழையாள்நாயகியும்
திலதமணியாள் செஞ்சாந்துபொட்டுமிட்டாள்
கூந்தல்முடியாமல் கொம்பனைமின்னொளியாள்
பலவிதமாக முடித்தந்தமெல்லியரும
பைங்கிளியாளும் பல்லக்கின்மீதேறி
அக்க-வேற்பொருதுங்கண்ணாளும் வீதிபுறப்பட்டாள்
மின்னொளியாள்தாதியரும மெத்தமனஸ்தாபமதாய்
ஆச்சிமரெல்லாம் அனுபோகியாயிருக்க
நம்மிட-ஆச்சிசிறையிருக்க யார்செய்தபாவமென்றாள்
என்று-எல்லோருங்கூடி வேகமாய்த்தானடந்தார்
கவியர்கவிபாட கட்டியங்களார்ப்பரிக்க
வேதமெடுத்துரைக்கக் கின்னரிகள்மீட்டிவர
மேளம்புடைசூழ வீராணந்தான்முழங்க
பட்டுக்குடைகள் பவழநெடுங்குடைகள்
முத்துக்குடைகள முழுமாணிக்கப்பொற்குடைகள்
சங்கீதவெண்பரிசை யெங்குமுழங்கிவர
மாரிப்பிரம்படிக்க மண்டபம்சென்றேறினாள்
அன்னமுந்தாரவும் தன்னிற்பசுங்கிளியும்
கொம்பிற்பழுத்திருக்குங் கோதபடாமாங்கனிபோல்
வில்விஜயன்தேவியர்கள் மெல்லிமார்வந்தார்கள்
ஒன்றோடே ஒன்று உரவணைந்துமெல்லியர்கள்
தோருவழுவழகி துரோபதையாள்தன்னடிக்கே
தேவிதிருவடிக்கே தென்னுடிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை மாமியார்தானெடுத்து
வாழ்வீர்வளர்ந்திருப்பீர் மங்கிலியமீடேற
வாள்விஜயன்தன்னோடே மாறுமல்வாழ்ந்திருப்பீர்
என்றுதான்வாழ்த்தியே யேலங்கருங்குழலும்
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக்கி
மாணிக்கச்சிம்மாதனம் மங்கையர்க்குசோடியென்றாள்
மற்றுமொருபெண்களுக்கு வட்டமணைபோடுமென்றாள்

அந்த-வட்டமணைமேலே மங்கையர்கள்வீற்றிருந்தார்
சிங்காதனமேறித் தேன்மொழிமார்வீற்றிருந்தார்
அப்போ-தோறுவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
அழகிபூங்கொம்பனையாள் அல்லியரைத்தான்பார்த்து
வெல்லவல்லாள்வெட்ட வல்லாள் வீரவாளெடுக்கவல்லாள்
செருக்களங்கள்தான்புகுந்து சேவகமும்பண்ணவல்லாள்
மாணிக்கவாளெடுத்து மான்வேட்டையாடவல்லாள்
ஆரமுலையாள் அம்மானாராடவல்லாள்
நாயகியேயுன்னாட்டம் நான்பார்க்கவேணுமென்றாள்
அப்போ-தனக்குக்கவரியிடுந் தாதிமுகம்நோக்கி
அம்மானார்பந்துகொண்டு ஆரணங்கேவாருமென்றாள்
தங்கப்பொன்னம்மானார் தாதியர்கள்கொண்டுவந்தார்
ஆணிமுத்தம்மானார் அடவுடனேகொண்டுவந்தார்
பாரித்தஅம்மானார் பாஞ்சாலிகைகொடுத்தார்

அருச்சுனன் தேவிகள் அம்மானாராடினது.

பிரவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்பார்த்து
ஆரமுலையாளும் அம்மானார்தான்வாங்கி
அவள்-மார்பில்சரப்பளி மங்கையர்க்குத்தானசைய
குங்குமங்கள்தானொழுக கொம்பனையாளல்லியரும்
அங்கையற்கண்ணம்மையர் அவள்பாடியாடியே
பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிபட்டதுவும்
தக்கன்தலையறுத்து தான்நஞ்சையுண்டதுவும்
விறகுசுமந்ததுவும் வேடனெச்சில்தின்றதுவும்
நரியைப்பரியாக்கி நல்லபகமீந்ததுவும்
அந்தப்புகழ்பாடி அம்மானாராடினாள்
அப்போ-தோறுவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
ஆரமுலையாளும் அம்மானார் தான்வாங்கி
முத்துமுகம்வியர்க்க விழிகள்சிவப்பேற
சாய்ந்ததாழ்வடங்கள் சன்னல்பின்னலற்றுவிழ
கன்னிதுயிலெடுத்துக் கானகத்தில்சென்றதுவும்
ஆழிகடலிலே அமர்ந்துபள்ளிகொண்டதுவும்
அந்தவளம்பாடி ஆடினாளம்மானார்
நற்சாந்திளமுலையாள் நாககன்னித்தான்வாங்கி
சுற்றெங்குமாணிக்கம் சூழ்மதிலுமாணிக்கம்
கும்பத்தலையைக் குவிப்பதுமாணிக்கம்

அந்தப்புகழ்பாட ஆடினளம்மானை
அந்த-விளங்கியசிர்மாதவர்தூ மின்னொளியாள்கைகொடுத்தார்
அம்மானையாடாள் பள்ளாங்குழியாடாள்
பந்துபல்வாடாள் பைந்தொடியும்மின்னொளியாள்
சிந்தைகலக்கமதாய்த் தானிருந்தாள்மின்னொளியாள்
ஆரணங்குமாது அகஸ்தியனார்தான்வாங்கி
ஆரமுலையாளும் அம்மானைதான்வாங்கி
சந்திரனுஞ்சூரியனும் தானுதித்தபாவனைபோல்
பரந்தமுகங்களும் பார்வேந்தர்தீர்த்தங்களும்
அந்தப்புகழ்பாடி ஆடினளம்மானை
சோரவளநங்கை சுபத்திரையாள்தான்வாங்கி
உமையாள்தனக்கு ஒருபாகமீந்ததுவும்
திங்களிளம்பிறையைச் சிரசில்தரித்ததுவும்
பொங்கரவம்பூண்டு புலித்தோலுடுத்தினதும்
சிவசங்கராவென்று தையலருமாடினள்
மற்றுமுள்ளமங்கையர்கள் வாங்கிப்போ அம்மானை
ஆடினார்தங்களிட ஆபரணஞ்சோதிமின்ன
பாடினார்தங்களிட பஞ்சவர்ணக்கிளிபோலே
கோலங்களாட குழைகளசைந்தாட
கொக்குதனங்கள்ரெண்டும் குலுங்கக்குழலியர்கள்
கன்னியர்கள்ஸ்தனங்கள்ரெண்டுங் கனக்கநோகிம்பிடவே
அன்னநடைமாதரெல்லாம் ஆடினாரம்மானை
அம்மானையாடி அணியிழைமார்வீற்றிருந்தார்
அந்த-தோருவடிவழகி துரோபதைநாயகியும்
தனக்குகவரியிடும் தாதிமுகம்நோக்கி
அடிசில்சமையுமென்றாள் ஆனந்தவாழ்மாரி

தாதிகள்சமையல்செய்தது.

அந்தமொழிகேட்டு ஆரணங்குதாதியர்கள்
அடிசில்சமைக்கவென்று அல்லவருந்தாமெழுந்து
அடுப்புமெழுகுவார்கள் அட்சதைக்காப்பிடுவார்
எங்குமலங்கரித்து எத்திசையும்நீர்தெளித்து
பானைகழுவி பனிநீருமேல்வார்த்து
பாலுமேல்வார்த்து பண்பானமேல்முடியிட்டு
வடகடலில்முத்தை வாரியெடுத்தாற்போல்
தென்கடலில்முத்தை திரட்டியெடுத்தாற்போல்

சன்னசம்பாதன்னரிசி தீட்டியுலையிலிட்டார்
அரிசியலம்பி அமுதாகசமைத்தார்கள்
செம்பொன் அருவாமணை திட்டிப்பதப்படுத்தி
வாழைக்காய்கொய்வார்கள் வழுதலங்காய்காம்பரிவார்
ஈழப்பலாக்காயை இளமுன்னுபோக்கிடுவார்
கனிக்கிறமாங்காயும கருணைக்கிழங்கெடுத்து
பொற்பதமாகவே பொரிக்கரிக்குத்தானறிவார்
கந்தியென்னும்பூசினிக்காய் காய்காய்ப்பகுந்திடுவார்
கோதையர்கள்பூசனிக்காய் சொய்வார்குழம்பிடுவார்
பாவற்காய்கொய்வாரும் பயிற்றங்காய்நறுரிப்பார்
பொரிக்கரிக்காகவே புடலங்காய்கொய்திடுவார்
வாழைக்காய்வாழைத்தண்டு வாழைப்பூவாழைக்கட்டை
அவரைக்காய்பீர்க்கங்காய் ஆய்வார் அரிந்திடுவார்
செம்பொன்னின் கும்மியை தென்பிழக்காய்த்தான் திருப்பி
சம்வாரங்கூட்டுவர்க்கம் தானரைகதுவைப்பார்கள்
பத்துவகைக்கறியும் பதினெட்டுபச்சடியும்
நல்லபொறிக்கறியும் இருசாக்கள்போசனமும்
வடகம்பொடிபோட்டு மணிசிரகம்போட்டு
காராவிநெய்வார்த்து கறிவேப்பிலைபோட்டு
தாளித்துஇறக்கினர் சகலபதார்த்தங்களை
மணங்கள்குழுகுமென்ன மாதர்கட்குபுகைக்கேற
செம்பொன்பிரியணைமேல சேரஇறக்கிடுவார்
காய்ச்சியபாலும் கச்சாயமுப்பழமும்
அடிசில்சமைத்துவைத்து அன்னநடைமாதரெல்லாம்
அடிசில்சமைத்ததென்று அருஞ்சின்னமணைதிவைத்தான்
ஊதினசின்னத் தொனிகேட்டுடனுத்தமியாள்
சிங்காதனத்தைவிட்டுத கீழக்குதித்திறங்கி
முத்துமிதிபடியைத் தொட்டுநடந்தசைந்து
அருச்சுனனார்தேவியர்கள் அவர்களிடத்தில்வந்து
தோருவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
மெத்தப்பசிப்பாடே மெல்லியரேயிருக்கிறீர்கள்
போசனமுண்ணுதற்குப் போதவெழுந்தருள்வாள்

அர்ச்சுனன்தேவிகள் போசனமுண்ணது.

என்றதுகேட்டு எழுந்தார்களல்லவரும்
அர்ச்சுனனார்தேவியர்கள் அனைவருந்தானெழுந்தார்
கொம்பனைகளெல்லாங் கூடிபொன்மூய்கைகொடுத்து

தேன்மொழிமாதரெல்லாம் சிரித்துவிளையாடி
ஆரணங்குமாதரெல்லாம் அரண்மனையிற்போய்புகுந்து
கட்டிபசைத்து துலங்கும்வளைகுலுங்க
வாசங்கள்மிஞ்சும் மலர்க்குழலில்பூவுதிர
காலோடெக்கையும் கனிவாயுங்கொப்பளித்து
வாயோடுபல்லும் மதிமுகமுஞ்சுத்திசெய்து
ஆரிளமுலையாள் அரண்மனையிற்போய்புகுந்தார்
தாமக்கருங்குழலார் தாதியர்களோடிவந்து
மங்கையர்கள்தானிருக்க வட்டமணைபோட்டார்கள்
பாவையர்கள்தான்வரவே பஞ்சவர்ணப்பாய்போட்டார்
இருவர்க்கொருதெண்டிகையும் வைத்தாரிளங்கொடியும்
தலைவாழையிலைபோட்டு தண்ணீர்தெளித்தார்கள்
மல்லிகைமொக்குபோல மாற்றுவெள்ளிநிறம்போலே
தும்பைமலர்போலே சொரிந்தார்கள்போசனத்தை
பொன்போல்பருப்பைவைத்து புத்துருக்குநெய்சொரிந்தார்
ஆசைபடைச்சலுடன் அன்பானபோசனமும்
எடுத்துப்படைத்தார்கள் இளங்கொடிமாதருக்கு
போசனங்களுண்டார்கள் பொற்கொடிமாதரெல்லாம்
காய்ச்சியபாலும் கனிவர்க்கமுப்பழமும்
வடைதோசைபாயசம் வகையறவேயுண்டார்கள்
போசனங்களுண்டவர்கள் பொடியிட்டுக்கைநிமிறி
கனிவாயுங்கொப்பளித்து கைகாலுஞ்சுத்திசெய்து
அலங்காரமண்டபத்தில் அனைவரும்வந்தார்கள்
அப்போதுமின்னொளியாள் ஆனருசியுண்டறியாள்
எல்லோரும்போலே எழுந்துவந்துதான்காத்தாள்
தங்கத்தாம்பாளத்தில் தாம்பூலந்தானெடுத்து
காச்சாக்களிப்பாக்கு கைம்மாறுவெற்றிலையும்
மோரங்கிப்பாக்கும் முத்துசுட்டசுண்ணாம்பும்
பன்னீருஞ்சந்தனமும் பரிமளமும்பூமலரும்
தாதிமார்கொண்டுவந்து தையல்மார்முன்னேவைத்தார்
அன்னநடைதுரோபதையாள் அள்ளிக்கொடுத்தாளே
தாம்பூலந்தான்வாங்கி சந்தோஷமானார்கள்

## அர்ச்சுனன்தேவிகள் அவரவர்கள் அரண்மனைசென்றது.

அத்தண்டபெண்களும் அனைவோருந்தானெழுந்தார்
அவரவர்கள்தோழிகளும் அவரவர்கள்பாங்கிகளும்

அனலிற்பிறந்தாட்கும் அல்லிப்பெருமாட்கும்
போய்வாரோமென்று பொன்னடிக்கீழ்தெண்டனிட்டார்
இருவருக்குந்தெண்டனிட்டு யேறினார்தண்டிகைமேல்
விடைபெற்றுப்பெண்கள் வெளிப்பட்டார்மாதரெல்லாம்
மின்னேரிடையாளும் முகக்கருகிறாள்படிந்து
கோதிமுடியாத கூந்தல்சடைபற்றினதால்
ஏங்கிமனந்தளர்ந்து யேறினாள்தண்டிகைமேல்
அவரவர்மாளிகைக்கு அனைவோரும்போய்ச்சேர்ந்தார்

## அல்லியும்துரௌபதையும் ஆலோசனைசெய்தது.

அனைவரும்போனபின்பு அல்லிமலர்நாயகியும்
தோளுவடிவழகி துரோபதையாள்தன்னுடனே
இருவருமாக யேகாந்தமாயிருக்க
துரௌபதைனைத்தான்பார்த்து சொல்லுகிறாளல்லியம்மாள்
அனலிற்பிறந்தவளே ஆச்சியரேநீர்கேளும்
என்மனதில்கவலைபொன்று யிருக்கிறதுவடிவுடையே
பொறுத்துமுடியவில்லை பொற்றணலில்பிறந்தவளே
சொல்லவிடைகொடுத்தால் சொல்லுகிறேனாச்சியரே
திருவாய்மலர்ந்தருளி திருவுளம்பற்றினால்
மனதில்நினைத்தவரம் மயிலனையேசொல்லுகிறேன்
உத்தரவோவென்றால் உலகத்தையாண்டகன்னி
என்றதுகேட்டுயேதுசொல்வாள்துரௌபதையும்
ஆறாயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
மாள்கிறோமென்று மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாய்
வீரானசெங்கோலும் மெல்லியரேநீசெலுத்த
மன்னன்விசையனவர் மருவுகின்றமாதேவி
பொன்னணிந்தமார்பன் புலந்திரனைப்பெற்றவளே
வம்பலர்ந்தகோவே வடிவுசூடாமணியே
அம்பலர்ந்தபெண்ணே அருக்காணிபெண்மயிலே
மனம்பொருந்துஞ்சிருலகில் மற்றொருவரில்லாதே
வர்திருந்தவாளெடுத்து வையகத்தையாண்டவளே
தன்பெயருஞ்செல்வம் தையலுடையவளே
உன்பெயருக்கொப்பானார் வுலகத்தில்யாருமில்லை
பூங்களமுகமுங் கனிமுறுவல்செவ்வாயும்

திலாதமிடுதலும் செங்கரும்புபோல்விழியும்
உன்னழகுக்கொப்பானோர் வுலகுதனில்யாருமில்லை
ஒத்தணைந்துபுல்கி ஒளிமுகத்தைமுத்தமிட்டு
கட்டழகிநீநினைத்த காரியத்தைசொல்லுமென்றாள்
பிவறாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுவாள்
அருச்சுனனார்தேவிமார் ஆரணங்குமாதர்களில்
வாள்விசையன்தேவிமார் மங்கையர்கள்பெண்களிலே
நம்முடனேயொத்ததொரு நாயகியார்சக்களத்தி
அனைவரும்வாழ்ந்து அதிகசுகமாயிருக்க
அதிலேயொருத்தி அதிகதுக்கமாவதென்ன
வாழாதபெண்ணாகி மடந்தைசிறைகாப்பதென்ன
புருஷனைப்பறிகொடுத்தாற் பெருஞ்சிறைகாப்பார்கள்
புருஷனிருக்கையிலே பெருஞ்சிறைகாப்பதென்ன
கணவனைப்பறிகொடுத்தார் கைம்பெண்டாயிருப்பார்கள்
கணவனிருக்கையிலே கைம்பெண்டாயிருப்பதென்ன
மஞ்சளிழந்து மணமிழந்துபோவானேன்
இப்படிச்குமுண்டோ யிரக்கமுள்ளஆச்சியரே
காவேரிநாடன் கட்டழகன்பயின்றெடுத்த
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்மெல்லிகல்லாள்
மாதரிளங்கொடியாள் வாழாதிருப்பதென்ன
குடியில்பெண்வாழாமல் கொம்பனையேயிருந்தாலும்
மாலையிட்டகன்னியவள் மஞ்சலித்தாளாமாகில்
பழுதல்லோதன்குடிக்கு பாஞ்சாலன்சீர்மகளே
முந்தானைதான்போட்டு முடக்கினால்தோஷமல்லோ
நாயகிசுபத்திரைக்கு நாலுமுறையாவானேன்
சுவாமியுடதங்கை சுபத்திரையாள்தன்முறையை
அதை-பாதிபகுந்தளிப்போம் பைங்கிளியாள்மின்னொளிக்கு
உந்தன்திருவுளத்துக் கொக்குமோஆச்சியென்றாள்
தோருவடிவழகி துரோபதையாள்தான்கேட்டு
என்மனதிலெண்ணினதுபோல யிருந்ததேயுன்மனதில்
ஆனபடியால்சீமை ஆள்வதும்வெல்வதும்
உந்தனிடபுத்திக்கு வொப்பானொருவரில்லை
மற்றொருவர்தந்தமக்கு மதிவருமோதங்கையரே
ஆச்சியரேபெண்பெருமா ளருச்சுனனார்செய்தபிழை
என்னென்றுசொல்லுவே னெழில்விசையன்செய்தபிழை

அவள்-சிவபசைவேளையிலே சென்றாம்தேர்விசையன்
சரசங்கள்செய்து தையல்கொங்கைதான்பிடித்து
அவள்கையைத்தான்பிடித்து அழும்புபண்ணும்வேளையிலே
அவள் அறிவழிந்துமெய்சோர்ந்து அவர்முகத்தைத்தான்பார்த்து
சிவபூசைதான்குலைந்து சிந்தைதமூாம்வேறுபட்டு
கோபித்துக்கண்சிவந்து கொம்பனையுங்கூறிவிட்டாள்
மின்னொளிக்குவேண்டாத வேம்பென்றுஊதிவைத்தாள்
காரிழைக்குவேண்டாத கணவனென்றுஊதிவைத்தாள்
ஆகையினாலே அசந்தார்காணர்ச்சுனரும்
என்றுமிவளுரைக்க யேந்திழையாளல்லியரும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுவாள்
துரும்பசையத்தேன்சொரியும் சோழன்திருமடந்தை
தாழம்பூவாலே மடைதிறந்துநீர்குடித்து
தாமரைப்பூவாலே மடைதிறந்துபாய்கிறது
சேற்றால்மடைதிறந்தால் செல்வங்குறையுமென்று
பணத்தால்மடைதிறந்தால் பாசிபிடிக்குமென்று
சோற்றால்மடைதிறக்கும் சோழன்திருமடந்தை
அப்படிக்கொத்த அழகுள்ளநாயகியும்
வாழாதிருக்கவந்த காரியமேனேந்திழையே
ஆரணங்குசிறையிருக்க காரியமேன்வாழ்வரசி
தேனிங்குழலாளும் சிறையிருக்கலாகாது
என்றுஉரைத்தாள் யேந்திழையாளல்லியரும்
அவ்வார்த்தைதான்கேட்டு அனலிற்பிறந்தவளும்
தோகையந்தஅல்லியரும் சுரோபதையுமேதுசொல்வாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகமே
மயிலனையாள்மின்னொளியை வாழ்க்கைநிசமானால்
அரண்மனைக்குப்போகாமல் ஆச்சியரேயிங்கிருந்து
பொற்கொடிமாதே பூங்காவனமிருந்து
அர்ச்சுனரையிங்கே யழைத்துவரச்சொல்லி
அருச்சுனரைக்குறவேடம் ஆகவேதான்போட்டு
குறக்குலத்தில்வாழுகிற குறமாதரைப்போல
மின்னொளியாள்வாசலிலே வேண்டுங்குறிசொன்னால்
வலிய அழைப்பாள் மாதுகருங்குழலும்
மின்னொளியாள்வாசலிலே வேண்டுங்குறிசொன்னால்

இதங்கியந்தமின்னொளியாள் மிளவிசையன்சேதிகேட்டால்
கூடிசுகப்படுவாள் குறைதீர்ந்துவாழ்ந்திருப்பாள்
இந்தட்சணத்தி லிப்பொழுதேசெய்வோமென்றான்
அப்படியேசெய்யுமென்று ளாரணங்குஅல்லியரும்

அல்லியும்திரௌபதையும் அருச்சுனரை
அழைத்துவரச்சொன்னது.

அல்லிப்பெருமாளும் அலங்காரநாயகியாள்
தன்னருகேநின்ற தாதியைதானழைத்து
நான்குபேர்தாதிகளை நாயகியாள்தானழைத்து
கூறுவாள்கொம்பனையாள் கொஞ்சுங்கிளிபோல
ஆணழகுமன்ன னருச்சுனராசாவை
பரமசிவனிடத்தில் பாசுபதம்பெற்ற
பாசுபதப்பெற்ற பார்த்தனருச்சுனரை
எங்கேயிருந்தாலும் யெவ்விடத்திற்சென்றாலும்
சந்தனவடிவழகர் தருமரண்டையிருந்தாலும்
சிங்கக்கொடிபடைத்த ஜெயமுடையவீமரவர்
வெற்றிமதயானை வீமரண்டையிருந்தாலும்
நாமக்கொடியுடைய நகுலரண்டையிருந்தாலும்
சாஸ்திரத்தில்வல்லதொரு சகாதேவராசரண்டை
அங்கேயிருப்பாரே அருச்சுனவீரரும்
மந்தாரக்குந்தியம்மாள் மாதாவிடமிருந்தாலும்
ஸ்ரீராமன் தங்கையிடம் சேர்ந்துயிருந்தாலும்
விலைமாதர்வீதியிலே வேந்தரிருந்தாலும்
தேவடியாள்வீதியிலே தெருக்களெல்லாமாராய்ந்து
ஆலயங்கடோறும் ஆராய்ந்துபாருமென்றான்
கண்டதேயுண்டானால் கைப்பிடியாய்தான்பிடித்து
ஏதொன்றுஞ்சொல்லாம லழைத்துவாதாதியென்றாள்
நானழைத்தேனென்று நீயழைத்துவாருமென்றாள்
என்றதுசொற்கேட்டு யெழுந்தார்கள்தாதியர்கள்
விசுங்கவரியை மிகவொருத்திகைபிடித்து
நான்குபேர்தாதிமார்கள் நடந்தார்விசையுடனே
அருச்சுனரைத்தேடி அரிவையர்கள்போனார்கள்
வீதிதெருவெங்கும் மெல்லியர்கள்தேடுகிறார்
தருமர்கொலுவிலும் தம்பிமார்வீதியிலும்
வீமர்கொலுவிலும் விலையாதர்வீதியிலும்

குந்திகொலுவிருக்கும் கொம்பனைமார்வீதியிலும்
ஆலயம்வீதியிலும் ஆரிழைமார்வீதியிலும்
எங்கெங்குங்கேடி இனியவிடமாராய்ந்
ஸ்ரீராமன் றங்கை சிற்றிடையாள்வீதியிலும்
தேடிவருகிறார்கள் தேர்விசயனருச்சுனரை
சுபத்திரையானவீதியிலே சுந்தரவாழ்மார்பன்
முத்தானவாழ்மார்பன் முறையிட்டுதானெழுந்து
வாசமுமிழுந்து மலர்குழலில்பூவுதிர
கைகாலுஞ்சுத்திபண்ணி கனிவாயுங்கொப்பளித்து
வாயோடுபல்லும் மதிமுகமுஞ்சுத்திபண்ணி
ஆணழகன்வாழ்மார்பில் ஆடைவிரித்துடுத்தி
ஆலகாலவிஷமுண்டா ரருளியவெண்ணீறு
சிவனுடையவெண்ணீறு திருநீற்றுக்காப்பணிந்து
தருமரடிவணங்க தனஞ்சயன்வேண்டுமென்று
அம்புவில்லுங்கைபிடித்து ஆனந்தவாழ்மார்பன்
தங்கமிதியடிமேல் தானசைந்துமன்னவனும்
வேந்தர்பெருமாளும் வீதிபுறப்பட்டார்
தோளிலிடும்பச்சைவடம் துப்பட்டிதொங்கிவர
காயாரக்காய்த்ததொரு கமுகிளம்பாக்கும்
வாயாரத்தின்று வலதகையில்சுருள்பிடித்து
தென்றற்பெருமாளும் தெருவிலேபுறப்பட்டார்



### தாதியர்கள் அர்ச்சுனரை யழைத்துவருதல்.

கட்டழகிதோழிமார் கண்டார்களர்ச்சுனரை
விஜையர்க்கெதிராக மெல்லியர்கள் காலடைந்து
பார்த்தன்திருவடிக்கு பாவையர்கள்தெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாழ்மார்பன்கண்ணிற்கண்டு
யார்பணிதாதிகீள் அறியவுரையுமென்றார்
நான்-யார்பணியுமல்ல வடியேன்திருப்பணிகாண்
தீயிற்பிறந்தவளும் தென்னாடன்பாவையரும்
மலரிற்பிறந்தவளும் வைகைவாழ்நாட்டாளும்
இருவருங்கூடி இணைக்காவில்வந்திருந்து
மலர்க்காவில்வந்திருந்து வண்டார்கருங்குழன்மார்
உம்மை-ஏகோசெரியாது இட்டுவரச்சொன்னார்கள்
பிடித்தபிடியுடனே அழைத்துவாருமென்றார்கள்
இருவர்பணிநாங்களென்று இரக்கிரேபதெண்டனிட்டார்

### அர்ச்சுனன் பூங்காவனம்வந்தது.

இருவர்பணியென்றலுமே எழில்விஜையனுளமகிழ்ந்து
சந்தோஷப்பட்டாரே காமந்தவாழ்மார்பன்
உள்ளங்குளிர்ந்தாரே உடம்பெங்கும்பூரித்து
சரீரங்குளிர்ந்தாரே சருவாங்கம்பூரித்து
தருமர்கொலுவை தனஞ்செயனுந்தான்மறந்து
வீமர்கொலுவை விசயனுந்தான்மறந்து
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
பூங்காவனந்தாண்டி போரானேவாழ்விஜையன்
தூரவருகையிலே தேன்மொழிமார்கண்டார்கள்
சுந்தரப்பூமுடியை தூரமேகண்டார்கள்
துலங்குமதிமுகமுஞ் சுந்திரப்பேரழகும்
வடிவழகுகொம்பனையும் வாழ்மயிலாள்கண்டாளே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
தோராவடிவசிகி தரோபதைக்குவந்துசொல்வாள்
பார்த்தீரோயாச்சிபரே பார்த்திபன்வடிவடிவை
அழித்தழியாச்சந்தனமு மஸ்துகிரிபொட்டழகும்
பிரிந்தபுரிநூலழகும் பொருந்தும்விழியழகும்
தோளில்துளசிமாலை தொங்கிவருகிறதும்
பச்சைநிறமும் பவழம்போல்பல்லொளியும்
மொச்சைகருங்குழலு முறுவல்கனிவாயும்
மணியவளோட்டிய மஞ்சளதவணியும்
மஞ்சலதவணியும் மையற்றவாசங்களும்
காவிரங்களோதும் கனிவாயுங்கண்மலரும்
இணையொத்தமங்கையரை இணைநின்றவாழ்மார்புஞ்
சேவேக்கிரன்மகன் செம்பட்டுடையழகும்

கண்டீரோவாச்சியரே கட்டழகன் தன்வடிவை
வாழ அதிஷ்டமில்லான் மின்னேரிடையாளும்
ஏழையென்றன்னிடையா ளிளங்கொடியாளவேண்டேனென்றார்
ஸ்ரீராமன்றங்கையவள் செய்தவதிஷ்டமிது
மாயவனார்தங்கையவள் வல்லாண்மைகண்டீரோ
மண்ணளந்தானதங்கையிட மாயமிதுகண்டீரோ
இவர்தோளில்சார்வதற்கு என்னதவஞ்செய்தாளோ
மன்னர்கிசையாது மதிமகத்தைப்பார்த்திருந்தாள்
அவ்வளவில்பார்த்திபன் ஆரணைக்குமுன்னேவந்தார்
இருளடைந்தசாலையிலே எழுந்துவந்தசூரியனைப்போல்
நடந்துவந்தாரருச்சுனரும் நான்குதிசைகடுகக
தீயிற்பிறந்ததொரு தேன்மொழியாளருகில்வந்தார்
அல்லிப்பெருமாளி னருகாகவந்தனார்
பாண்டிப்பெருமாளும் பராமுகமாய்தானிருந்தாள்
காமிவரைப்பார்த்து நகைத்தோமேயாமானல்
மிகவுமிலேசாக வீரியத்தைப்பேசிவரார்
காரியமல்லவென்று கண்சாயலாயிருந்தாள்
பாதச்சிலம்பழகை பார்த்துநகைத்திருந்தாள்
காண்டாவனமெரித்த காளையவர்கண்சிவந்து
கோபித்துக்கண்சிவந்து கோபாலன்மைத்துனரும்
கச்சைப்பிறைதனிமேல் கைபோட்டான்காவலனும்
பரிசைமேல்கைபோட்டு பாக்குடருவினனே
கரணங்கள்போடுகிறான் கைலாகுபோடுகிறான்
முன்கந்துபின்கந்தால் முன்னவீரனபாயுகிறான்
கண்டந்ததாதிமார் கடுகிப்பேயோட லுற்றார்
சூரியனைக்கண்ட பனிபோல்கலங்கினார்
கண்டாளேயல்லிபெருமகாற்றசைந்தாற்போல்குதித்து
மச்சத்தைவிச்சுளி வந்தொருக்காலபாய்ந்தாற்போல்
வாளுனக்கேனென்றுசொல்லி வாம்பாணமநாட்டாளும்
கைவாளைப்பிடிவலிகக்கொண்டு கலுக்கென்றுநகைத்தாளே
கண்டீரோயாச்சியரே கட்டழகன்சேவகத்தை
பார்த்தீரோஆச்சியரே பார்த்திபன்சவுரியத்தை
இன்றேயறிந்தேனே எழில்விசையனசவுரியத்தை
அன்றேயறிந்தேனே அருச்சுனனாண்மைகளை
பாஞ்சாலன்பந்தலிலே பிரமனைப்போலேவந்து
வில்லைவளைத்ததுவு முடிக்குந்தலுக்குகளும்
முன்னேவரவொட்டாமல் வெட்டியிருந்ததுவும்
எனக்காகவில்வளைத்து எந்தனைமாலையிட்டு
தானாளமாட்டாமல் சவுரிபாராசதிரை
ஐவருக்கும்பெண்ணாக்கி அமர்த்திவைத்தவண்மைகளை

அன்றேயறிந்தேனே ஆணழகன்சவுரியத்தை
என்றுநகைத்தாளே இளங்கொடியாள் துரோபதையும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
அதுவேயல்லாமல் ஆறுயிரம்பாண்டியர்முன்
அன்றுமொருஆண்மைபைப்போ லாணழகன்வடிவெடுத்து
கையில்மடல்பிடித்து கண்கெட்டான்போலிருந்தார்
அன்றேயறிந்தேனே அர்ச்சுனர்வீரியத்தை
என்றுநகைத்தாளே ஏலப்பசுங்கிளியும்
அப்போது அர்ச்சுனரும் ஆணழகரேதுசொல்வார்
அன்னமேதேனே அமுதேபசுங்கிளியே
இருவருமாய்நீங்க ளிந்தவனத்தில்வந்து
என்னையழைத்தது ஏதுகருமமடி
எதுக்குமாதேநீங்கள் இட்டுவரச்சொன்னீர்கள்
வரவழைத்தகாரியத்தை வாய்திறந்துசொல்லுமென்றார்
அப்போது அல்லியவள் ஆரணங்குமேதுசொல்வாள்
உன்மச்சினியாள்வாழ்வைப பறிக்கவென்றுநினைக்கவில்லை
சுபத்திரையாள்வாழ்வைப் பறிக்கவந்தார்யாருமில்லை
கோபங்களேன்காணும் கொற்றப்போர்வீரியரே
தோளுவடிவழகி துரௌபதையாளேதுசொல்வாள்
மச்சினியாள்வாழ்வை பறிக்கவந்தோம்வாழ்விசையா
சுபத்திரையாளவாழ்வை சுகம்பறிக்கவந்தோமோ
அத்தைமகளென்றுசொல்லி ஆதரித்தகன்னியரை
மையல்கொண்டகன்னியரை வாழவொட்டோம்வாள்விசையா
செப்பிடுங்காரியத்தை செய்யீரோமெனறுசொன்னால்
கொற்றவனேநீரும் குருவாணையிட்டாக்கால்
அப்போதுநாங்க ளுரைபம்போங்காணருச்சுனரே
இல்லாமல்நாங்க ளுரைம்போங்காண்ஆணழகா
என்றதுகேட்டுமவா ஏதுரைப்பாருச்சுனரே
தீயில்பிறந்தவளே தென்னுடன்பாவையரே
அனலில்பிறந்தவளே ஆரணங்குதுரோபதையே
அல்லியிற்பிறந்தவளே அலர்மலர்நாயகியே
வையைவளநாட்டாளே வாழ்வரசியல்லியரே
அரிவையரேநீங்க ளருளியகாரியத்தை
மீறிநடக்கதுண்டோ வேல்பொருதுங்கண்ணாளே
தருமர்திருவாணை தம்பிமார்தன்னாணை
வீமர்திருவாணை விமலனார்தன்னாணை
குந்தியம்மாள்தன்னாணை குருக்கள்திருவாணை
சககவதிதன்னாணை சுவாமியார்தன்னாணை
தென்னாட்டிதன்னாணை தீயில்வந்தாள்தன்னாணை

பெருமான்திருவாணை பிள்ளையுமறிவேனே
பிறவாமுத்தரித்த பெண்பெருமாள்நாயகியும்
ஆணைபெரிதுகண்டீர் அமையுமமையுமென்றான்
ஆணைவிட்டோர்க்குதோஷமில்லை அருச்சுனரேகேளுமென்றாள்
கொம்பிலிருந்து குதித்தகிளிபோலே
அன்னம்போல்வாய்திறந்து ஆரணங்குமேதுசொல்வாள்
எங்களோடொத்த ஏந்திழையாள்பொற்பாவை
காவேரிநாடன் பயின்றெடுத்தகட்டழகி
விளங்கியசீர்மாதவத்து மின்னிடைமெல்லியல்லாள்
அணியிழையாள்வாழா திருப்பதென்ன ஆணழகா
குடியில்பெண்வாழாதே கொற்றவரேயிருந்தாலும்
முந்தாணிபோட்டு முடங்கினளானாலே
பழிப்பதல்லோதன்குடிக்கு பார்த்தர்பெருமாளே
அதையெண்ணிநாங்களும்மை அழைத்தோங்காணழகா
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார்
என்னாலேவாழா திருந்தாளோஏந்திழையாள்
தன்னாலேவந்த வசமல்லோதையலர்க்கு
வாயாலேபல்லோ வாழ்விழந்தாள்மின்னிடையாள்
தோருவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
குடியாள்சிறையிருந்தால் குற்றங்கள்வந்துவிடும்
மாதுசிறையிருக்க மன்னவனேயாகாது
காண்டாவனமெரித்த காளையவர்கூறுவார்
பொற்கொடியாள்கோயிலுக்கு போகாதநேரமுண்டோ
எப்போநான்போனாலும் ஈஸ்வரனார்பூசையென்பாள்
மின்னொளிக்குவேண்டாத கணவனென்றுஊதிவைத்தாள்
காரிழைக்குவேண்டாத கணவனென்றுஊதிவைத்தாள்
ஊதிவைத்தாள்கோவிலுக்கு உத்தமியேநான்போகேன்
மணமாலைசூட்டலையா மண்டலங்கள்தானறிய
மதியாமல்ஊதிவைத்தாள் வையகங்கள்தானறிய
இதுவொருகாரியம்போல் என்னையிங்கேவரவழைத்து
ஆணையிடவைத்தது அரிவையரேகாரியமென்
என்றுமிகச்சீறி எழுந்திருந்தாரருச்சுனரும்
சீறியெறிபறந்து சிங்கக்குட்டிபோலெழுந்தான்
தோருவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
விசயரைகையமர்த்தி மெல்லியவளேதுரைப்பாள்
ஆதிசிவன்பூசையிலே அருச்சுனரேசென்றீரோ
சங்கரனார்பூசையிலே போய்ச்சென்றுதார்வேந்தர்

பூசைசெய்யும்வேளையிலே போயவளைபகந்தைசெய்து
வாடிபென்றும்போடியென்றும் வம்புசொல்லநியாயமுண்டோ
அதனாலேமின்னிடையும் ஆகாதவம்பனென்றாள்
மங்கைமாரெல்லவரு மாளிகைக்குவந்தார்கள்
தட்டிலேபாக்கும் தனிக்கையிலேவெற்றிலையும்
அள்ளியளித்தேன்பான் ஆரணங்குபாவையற்கு
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியுந்தீண்டேனென்றாள்
வடிவழகுமேனியிலே மஞ்சளும்பூசாமல்
அஞ்சனமுந்தீண்டாதே அலர்தாமரைக்கண்ணாள்
பவளச்செவ்வாயில் பாக்குதரிக்காமல்
சலவையுடுக்காமல் சந்தனங்கள்பூசாமல்
மனதுகலங்கியே வந்திருந்தாள்சபைநடுவே
இது-ஆகாதுகாணும் அரசர்பெருமாளே
பழுதுகள்வந்திடுமே பார்த்திபராசாவே
எண்ணறக்கற்றும் எழுத்தறப்படித்தாலும்
பெண்மதியாலல்லோ பிழைமோசமாகிறது
பெண்ணின்பிழையை பொறுத்தவர்புண்ணியர்காண்
பெண்சாதிசெய்தகுற்றம் பெரிதென்றுபார்ப்பாரோ
எங்களைப்பற்றி இளவிசையாபோய்வாரும்
கூடியணைந்து குறைதீர்ந்துவாருமையா
அவள்சிறையைத்தீர்த்து ஆணழகாவாருமென்றார்
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார்
உங்களிடசொற்படிக்கு வுத்தமியேபாடுசென்றால்
மாதரிடகோட்டையிலே வலியநான்போனக்கால்
இன்னமொருதிறம் வம்பனென்றாலென்னசெய்வேன்
ஆகாதவம்பனென்றால் ஆரணங்கேஏதுசெய்வேன்
நான்போவதில்லையென்று நகைத்தவருங்கூறினார்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குமேதுசொல்வாள்
கண்டீரோஆச்சியரே கட்டழகன்தருக்கத்தை
பார்த்தீரோஆச்சியரே பார்த்திபன்தருக்கத்தை
இன்றோயறிந்தேனோ எழில்விசையன்தருக்கத்தை
ஆறாயிரவர் அடிவணங்கும்வாசலிலே
வையகத்துமன்னவர்கள் வந்தேறும்வாசலிலே
தேசத்துமன்னவர்கள் சென்றேறும்வாசலிலே
அரசிலைத்தோரணம் ஆர்க்குந்தலைவாசலிலே
சீதேவிநின்று திறைகொள்ளும்வாசலிலே
செம்பொன்னெழுத்தும் திருவுமரசிலையும்

அப்பொன்னுமுத்தும் ஆர்க்குந்தலைவாசலிலே
காற்றடித்தால்மின்னும் சாந்தாரிவாசலிலே
தக்கையுங்காராவும் தன்னிற்பசுங்கிளியும்
ஒக்கவிளையாடும் உத்தமியாள்வாசலிலே
ஆறுபிரக்காரம் அகலமுள்ளவாசலிலே
அலைகடல்சூழ்வையகத்து அரையர்கள்வந்திருக்க
எல்லையுள்ளராசாக்கள் இளவரையர்வந்திருக்க
முத்தின்முடிதரித்த மூமன்னவர்வந்திருக்க
வச்சிரமுடிதரித்த மகாமன்னர்வந்திருக்க
மாணிக்கமுடிதரித்த மகாராசர்வந்திருக்க
ஐந்நூறுகோடி அரசமன்னர்வந்திருக்க
எழுநூறுகோடி இளவரையர்வந்திருக்க
எள்ளுபோட்டால்எள்ளுவிழா இளவரையர்வந்திருக்க
அப்பெரியமண்டபத்தில் அருமிரவர்முன்னே
வெட்கங்களில்லாமல் வேந்தர்பெருமாளும்
அன்றமொரு ஆண்டிபைப்போல அதிதிபரதேசியைப்போல்
பரமசிவன்போலே பார்த்தன்வடிவெடுத்து
கையில்மடல்பிடித்து கண்கெட்டோர்போலிருந்தார்
எனக்குமயல்கொடுத்து என்னுட்டல்கண்டிருந்தார்
அன்றேயறிந்தேனே அருச்சுனனுண்மைதனை
என்றுபரியாசம் இயவுடனேதானுரைத்து
வாருங்காணருச்சுனரே வாள்விசையராசாவே
வையகத்தில்வாழுகிற மாதர்குறத்திபோலே
குறவேஷம்போடுகிறோம் கொம்பனையாள்விடுசென்று
வலிய அவளழைப்பாள் மாதர்சருங்குவிலும்
கட்டழகிமின்னிடைக்கு கைபார்த்தகுறியுரைத்து
கூடிக்கலந்துவாரும் கொம்பனையாள்மின்னொளியை
வணங்கியந்தமின்னொளியும் மாதுகலந்திருப்பாள்
கட்டழகிமின்னொளியின் காதலைத்தீர்த்தருள்வீர்
என்னாணைவாள்விசையா எனக்காககடந்திடுவீர்
போய்வாருமென்றாளே பொற்கொடியாள்மங்கையரும்
காண்டாவனமெரித்த காளையருந்தான்கேட்டு
அவளாணைபெரிதென்று ஆனந்தவாழ்மார்பன்
நீசொன்னபடியேனான் நேரிழையேபோகிறேனென்
ஆணையிடுமென்றார் அரையர்பெருமாளும்

விட்டேன்காணுமேனயென்றான் மெல்லியருமப்போது
என்றதுகேட்டு இசைந்தாரேவாள்விசையன்
சந்தோஷப்பட்டாரே தாமந்தவாழ்மார்பன்
அல்லியர்க்கும்துரோபதைக்கும் ஆரணங்கு இருவரிலே
நடுவாகவந்தமர்ந்தார் ஞாயிறுதித்தாற்போல
குன்றின்மேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
இருளடைந்தசாலையிலே எரிக்குங்கதிரவன்போல்
இருவர்நடுவாக இளவிசையன்வந்தமர்ந்தார்
அப்போததாதிமார் ஆரணங்குமோடிவந்தார்
நாற்காலிபோட்டார்கள் நல்லமணையுமிட்டார்
முக்காலிபோட்டார்கள் முன்னேமணையுமிட்டார்
வட்டமணைமேலே வந்தமர்ந்தாரருச்சுனரும்
அருச்சுனர்க்குபின்னாலே அல்லியரும்வந்தமர்ந்தார்
முறைகழகுந்தோளழகும் முறுகில்மச்சரேகைகளும்
மீசைமுறுக்கழகும் விழிநல்லபார்வைகளும்
சச்சுகட்டுமுளமருங்கும் கத்திசுறுக்கழகும்
இடையழகும்நடையழகும் இசைந்தவடிவழகும்
கூந்தலழகுகளும் கொண்டைசகதாகளும்
கண்டுமயங்கினாள் கட்டழகிமூர்ச்சையானாள்
கண்டார்கள்தோழியர் கடுகிப்பயந்தெழுந்து
வெண்சாமரைகொண்டு வீசினாரல்லியரும்
விசனங்களைதெளிந்தாள் மெல்லியிளங்கொடியாள்
தோருவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
இராசாத்தியாயிருந்து நாயகியேபெண்மயிலே
வையகத்தையாண்டிருந்த வாழ்வரசிராசாத்தி
கண்டுமயங்குவரோ கட்டழகன்ராசாவை
பார்த்துமயங்குவரோ பார்த்திபராசாவை
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனமகிழ்ந்து
அருச்சுனனார்கூந்தலே மகிழ்ந்தாள்செகந்தாவை
ஆணழகுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வார்
காண்டாவனமெரித்த காளையவர்கூறுவார்
சோர்ந்துவிழுந்தீரோ சுந்தரப்பூமுடியே
மதுரைவளநாட்டாள் மச்சினியேசோர்ந்தீரோ
இராச்சியத்தையாளுகிற இராசாக்கள்சோர்வாரோ
நல்மகுடம்பூண்ட ராசாக்கிசோர்வாரோ
நிக்காலையாண்டவர்கள் சோர்மயிலேசோர்வாரோ

ஆறுயிரவர்கள் அணிதிரளாம்பாண்டியர்கள்
பொன்னின்மலைநாடாளும் பேரெழுதியண்ணருக்கு
தலையிரக்கக்கொண்டுவந்து தார்குழலேவந்திரோ
வடிவில்லாவம்சத்தில் வடிவுவைத்தீர்நாயகரே
இப்படிபரியாச மிய லுடனேதானுரைத்தார்
குங்குமத்திண்டோளன் குலுங்கநகைத்தார்காண்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
அர்கானுமருச்சுனரே அதிசயமாபெண்ணுதே
தானேயழகென்று நல்முடனேபார்த்திரோ
சோர்ந்துவிழுக்காளென்று சொல்லுகிறீருச்சுனரே
கொத்தார்குழலியவள் கொலுவிருக்குங்கண்களுக்கு
தூக்கங்களில்லாதே துன்னுங்கருங்குழலும்
துய்யக்கருங்குழலாள் தூங்கிவிழுந்தாள்காண்
ஆகடியம்பேசுகின்றீர் ஆணழகனருச்சுனரே
ஆஆஆவென்று அலைந்தபலைத்துகிறீர்
உம்முடையதோல்வாயை யுள்ளடக்குமர்ச்சுனரே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்பார்த்து
காளிதனைகுறத்தியாக காகைச்சமைக்கவேண்டும்
வழல்லோதாரனே இந்திரனார்புத்திரனே
கொற்றவரைமாதுகன்னி குறக்கோலமர்த்தவென்று
மயிராவிழ்த்துப்பின்போட்டு வாரிமுடிக்கலுற்றார்
ஏத்தயஞ்சள்நின்று உறுமெத்தபூங்குழலே
வண்டுமுதுகோடுபோலே மயிரைநிறமாக்கி
விட்டுவிரித்தாற்போலே விடுதும்பைபூத்தாற்போல்
வந்துவிழுக்கது மன்னவனார்தோஷயங்கள்
எல்லாத்தலைமயிரும் ஒருசாணிறுசானு
எல்லாத்தலைமயிரும் ஒருமுழமிருமுழம்
அர்ச்சுனனார்கூந்தலது அறுபத்துமூன்றுமுழம்
வந்துவிழுந்தது வண்ணனுடகேஷயங்கள்
காவேரிவந்துக் கவிரகோர்த்தநின்றுப்போல்
கழுவுர்கடங்காத தணிகொண்டகேஷயங்கள்
ஒறிவகுத்தாளே கிளிபவளச்செவ்வாயால்
முடியைவகுத்தாளே முதுகெங்குந்தோன்றுதே
கைகளசைந்தாலே காண்டீபன்தோள்சேர்ந்தாள்
சிற்றிடையாள்மாது சிறுவிரல்கோகுமென்று
மற்றுமசைந்தாளே மயிராற்றவொண்ணுதே
மாகந்த அல்லியர்க்கு மதிமுகத்தில்வேர்வைபிட
கண்டார்கள் தாதிமார் கடிகியேவோடிவந்து
வெண்சாமரையெடுத்து வீசுகிறுள்ல்லியர்க்கு

தாமக்கருங்குழல்மார் தாதியர்களேது சொல்வார்
அருச்சுனனார்க்குந்தலை யலங்காரஞ்செய்வதற்கு
அகத்தினதுள்ளாக அடியார்களாகாதோ
எங்களாலாகாதோ என்றுசிலரோடிவந்தார்
யானடியேனடியேன் என்றுபலரோடிவந்தார்
காண்டாவனமெரித்த காளையவர்கூறுவார்
வண்டார்குழலாள் மலர்க்கரங்கள்நோகுதென்று
உண்டானதாதிமார் ஓடியிங்கேவரலாமோ
இவள்-எழுபிராயத்தில் எதிர்த்துவந்தநீண்முகனை
வாளெடுத்துவேலெடுத்து வளைசக்கரந்தானெடுத்து
கத்தியெடுத்து கனத்தவில்லுங்கைபிடித்து
ஈட்டியெடுத்து எரிபாணந்தானெடுத்து
அப்பெரியசேனைகளும் ஆனைகுதிரைகளும்
வந்தெதிர்த்தராசாக்கள் மந்திரிகளுள்ளவரை
கண்டதுண்டமாகக் கண்டித்தான்பாணத்தினால்
நீண்முகனைமயிர்பிடித்து நேரிழையாளப்போது
தன்னுடையசேரின்கீழே நீண்முகனையிரடினாளே
இத்தனைசேனைகளை ஏதாய்ஜெயித்தாள்காண்
மயிர்முடிக்கநோகுதே மாதரிடகைத்தலங்கள்
பச்சைபசப்போ பசப்புநீர்பைங்கிளியே
மற்றொருவர்வந்து மயிர்வருக்கலாகாது
சிற்றிடையாள்வீட்டுக்கு தேன்மொழியேபோகேன்
அல்லியேயுன்னாணை அனலில்வந்தாள்தன்னாணை
என்றதுகேட்டு ஏதுசொல்வாள்துரோபதையும்
வீணானவார்த்தைகளை வேண்டாங்காண்வாள்விசையா
எங்களுக்காகவே இத்தனையுஞ்செய்கிறது
எங்களிடகாரியத்தை நிறைவேற்றப்போகிறீரே
நீரோசுகப்படுவீர் நேரிழையாள்வீடுசென்றால்
பார்ராளமைந்தன் பாக்கியந்தான்பெறுவீர்
தருமத்தைதானினைந்தோம் காமந்தவாழ்மார்பா
மற்றொருவர்வந்து மயிராற்றக்கூடாதோ
பின்னொருவர்வாசலுக்குப் போகிறவால்லவே
மற்றொருமங்கையர்கள் வந்தணுகக்கூடாதோ
நானேநானென்று நடந்தீர்குறியாக
ஆணழகாவுந்தனுக்கு ஆகாதோமற்றொருவர்
நானேவருகிறேன் நல்விசையாவுந்தனுக்கு

## அருச்சுனனை குறவேஷந்தரித்து அலங்கரித்தது.



என்றந்தமாதரும் இளவிசையன்மயிராற்றி
ஒவ்வொருமயிருக்கு ஒவ்வொருபொன்னிதழும்
ஒவ்வொருமயிருக்கு ஒவ்வொருபூவிதழும்
பொன்னிதழும்பூவிதழும் பூட்டியலங்கரித்து
வாரிமுடித்தாளே வாள்சவுரியுள்ளேவைத்தாள்
மல்லிகைத்தாழை மணமுள்ளசெண்பகமும்
இருவாட்சிமல்லிகையும் உவாக்குமதிசெண்பகமும்
கொன்றைகுடமல்லிகையும் கொத்தலரிமந்தாரை
வைத்துமுடித்தாளே மயிருக்கழகாக
குச்சுகளுங்கட்டியே குப்பியலங்கரித்தாள்
செம்பொன்சரட்டாலே சேர்த்துத்திருமணியும்
கொங்குமதயானை நெருங்கக்குழல்முடிந்து
மங்கையரைப்போலாகச் சொருகினாள்மன்னனுக்கு
மாதரைப்போலாக மங்கைநல்லாள்தான்முடித்தாள்
வயிரக்கடுக்கனை வாங்கியவர்காதிலிட்டு
காதுக்குப்பொன்னோலை கட்டழகிசாத்தினாள்
கொந்தளோலையிட்டாள் கொப்பியிட்டாள்வாளியிட்டாள்
பக்கப்புகடிகளும் பச்சைக்கல்முருகுமிட்டாள்
முத்தணிந்தமார்பில் முத்தாவிக்கைபோட்டாள்
நாய்க்கரைப்பொன்னோலை நடுக்கழுத்தில்சாத்தினாள்
ஒற்றைச்சரடுகளாம் ஒருபுறமாம்பொற்சரிகை
இரட்டைச்சரடுகளாம் இரத்தினபொன்தாலி
முத்துமணித்தாழ்வடமு மார்நிறைந்ததாழ்வடமும்
வட்டப்பதக்கமும் மார்நிறைந்ததாழ்வடமும்
மூன்றும்பிறைபோலே முத்துகண்டிதாழ்வடமும்

ஐந்தாம்பிறைபோலே அழகானதாழ்வடமும்
சந்திரகாரஞ்சரப்பளியும தரித்தாளே ஙிசையருக்கு
மூக்குத்திசிந்தாக்கு முன்கையில்மூதாரிகளும்
பத்துவிரலுச்குப் பதிந்தகணையாழிகளும்
காலாழிகல்லணையும் மீளாழிபில்லணையும்
பாலாடையுள்ளுடுத்தி பட்டாடைமேல்சாத்தி
மூத்துசுருக்கிவிட்டு முந்தாணிதொங்கவிட்டு
அக்குமணிகொக்குமணி அழகானபவழமணி
பச்சைமணிபாலமணி பாங்காய்கழுத்திலிட்டு
வையகத்தில்வாழுகிற மாதுகுறத்தியைப்போல்
சிங்காரக்குறத்தியைப்போல் சிராகச்சோடித்தாள்
நாமந்தரித்து கற்சாந்துபொட்டுமிட்டாள்
தாதியையழைத்து தையலருமேதுசொல்வாள்
குறக்கூடைகொண்டுவர கொம்பனையேதேன்மொழியே
அப்போதுதாதியரும் ஆரணக்குதானெழுந்து
முத்துபச்சையாலே முழுவயிரந்தன்னாலே
மாணிக்கக்குறக்கூடை மாதர்கள்சொப்பனிட்டு
குற்றமகளில்லாதே குறக்கூடைசொப்பனிடடு
குறக்கூடைதன்னிலே குள்ளநரிக்கொம்புவைத்தார்
எண்ணைகுடுக்கையொன்று இயலுடனேவைத்தார்கள்
குழந்தைகள்விளையாட கிலிகிலிப்பையைவைததார்கள்
கூத்திகளுக்காகவே கூடையில்மருந்துவைத்தார்
நரைபோயிளமைவர நல்மருநதுவைத்தார்
வேசிக்குமருந்துகள் விதமுடனேவைத்தார்கள்
குமாரருக்கேற்ற மருந்துவைததார்கூடையிலே
உரிக்கயிறுதாம்புகயிர உஞ்சல்கயிறுவைத்தார்
வக்காமணியும் மலைவேப்பங்கொட்டைகளும்
சித்துருண்டைவைத்தாள் சிறுநரியின்கொம்புவைத்தாள்
இந்திரரும்வானவரும் இசைந்ததொருகூடையிலே
சந்திரருமசூரியரும சந்தித்தகூடைபோலே
மூவுலகந்தான்மதிக்கும் முத்துரத்தினகூடைபோலே
செம்பொன்குறக்கூடை தேன்மொழியாள்முன்னேவைத்தாள்
அல்லிப்பெருமாளும் ஆரணங்கேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
விண்ணின்குறத்தி வீரானகட்டுவச்சி
என்னுகுறககூடை என்றாளேயல்லியரும்
வாள்விசையனருச்சுனரும வாங்கிக்குறக்கூடைதன்னை
குறமாதுபோலக் கூடையிடுக்கினார்
தாங்கிக்குறக்கூடை தன்மருங்கிலேயிடுக்கி

ஒற்றையிட்டகைத்தலத்தில் பொற்பிறம்புகோல்பிடித்து
வஞ்சியிடைதுவள மாதுஸ்தனங்குலங்க
கடுகிகடக்தாளே கட்டழகிகட்டுவெச்சி
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுவாள்
ஆச்சிதுரோபதையே அருச்சுனரைப்பாருமென்றாள்
ஒக்குமோகலாமிது உத்தமியேசிரமழகும்
கட்டழகிமாதரை கண்ணிட்டுப்பாருமென்றான்
விசையனார்தன்னழகை மெல்லியருக்தான்பார்த்து
சரியவிளமுலேமேல் சன்னல்பின்னல்தாழ்வடமும்
கட்டழகன்கைதலத்தில் கரிவளேயல்தன்னழகும்
கடைக்கண்ணிலஞ்சனமும் கட்டழகன்கருங்குழலும்
அஞ்சனப்பொட்டுகளும் அழகானநாமங்களும்
வாள்விசையன்பெண்கோல மானதொருதன்மைகளும்
தென்னடிவாவென்று திருமுகத்தைதான்பார்த்து
வளாடிவாவென்று மதிமுகத்தைதான்பார்த்து
கன்றிற்றேகன்றிற்றே காண்டீபனர்ச்சுனர்க்கு
அல்லியர்க்குமர்ச்சுனற்கும் ஆலாத்திசுற்றுமென்றாள்
தாமக்கருங்குழல்மா தாதியர்கள்தான்கேட்டு
ஆயிரம்பெண்களவர் ஆலாத்திகழுப்பெடுத்தார்
சிரானபொற்கலத்தில் செஞ்சோறும்வெண்சோறும்
காட்டிச்சுழற்றியே கதிரோனமுன்விட்டெறிந்தார்
திக்குச்சுழற்றியே திசைநான்கும்விட்டெறிந்தார்
கற்பூரமுத்துதிரக் காராவிகெய்சேர்த்து
குகதுவிளக்குதனைக் கொழுந்துபடவேற்றினர்கள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
இக்திரகட்டுவச்சி ஏற்றமுள்ளபூங்குறத்தி
மந்திரக்கட்டுவச்சி மலேயாளப்பூங்குறத்தி
விண்ணனகட்டிவச்சி விருதுடையபூவகுறத்தி
எங்களகுறக்கூடை தருவிரிளககொடியே
சிங்காதனத்தைவிட்டுத திகழக்குதித்திறங்கி
அம்பொன்சிங்காதனத்தை ஆர்ககக்குதித்திறங்கி
குறக்கூடைதான்பரித்துக் குலுங்ககளைகநகைத்தார்
குறக்கூடைதான்பரித்துக் கொம்பனேமாரேதுசொல்வார்
வாருங்காணர்ச்சுனரே வார்த்தைபொன்றுநீர்கேளும்
பாமசிவன்கையிலே பாசுபதமபெற்றேனென்றீர்
ஆதிசிவனிடத்தில் அதிகவரம்பெற்றேனென்றீர்
நாங்களறிக்ததில்லே இராசாவேஅந்கடக்கை
இப்போ-ஆதிசிவனேநோக்கி அடிபணிந்துவாள்விசயா

சிவனையடிபணிந்து குறக்கூடைவாங்குமென்றார்
அப்போதவாள்விசையன் அருச்சுனரேதுசொல்வார்
அல்லியிற்பிறந்தவளே அரசாளும்நாயகியே
தீயிற்பிறந்தவளே தென்னுடன்பாவையரே
நீங்களிருவரு மருளியகாரியத்தை
நான்-மீறிநடந்ததுண்டோ வேல்புருவங்கண்ணாளே
அப்படியேயாகுமென்று அருச்சுனரும்போய்நடந்தார்
கோவிற்புறமாகக் கொற்றவனுமவந்துநின்று
ஈஸ்வரனார்கோவிலண்டை எழில்விசையன்வந்துநின்று
ஆண்டவரைத்தானினைந்து அருச்சுனனேதுசொல்வான்
சிவனாரைத்தானினைந்து தேர்விசையனேதுரைப்பான்
அத்திமுகத்தோனே ஐங்கரனேவிக்கினரே
சத்தியருள்புத்திரனே சரிந்தவயிற்றோனே
ஆரணியும்வேணி அரனார்திருமகனே
சீரணியுங்கங்கை நீளசடையோன்புத்திரனே
வேழமுகமுடைய விநாயகரேஉன்சரணம்
கந்தாகடம்பா கதிர்வேலாநான்சரணம்
வள்ளிதெய்வானைபங்கா வடிவேலாநான்சரணம்
அற்புதனேசோதி அகிலாண்டநாயகியே
சாம்பசிவனாரே சங்கரனேநானசரணம்
உம்பர்கள்போற்றும் உமையவளேநான்சரணம்
இலட்சுமிமனோகரனே நாயகனேநான்சரணம்
கொம்பனைமாதர்கள் குறக்கூடைதந்தார்கள்
கொடுத்தாப்போல்தானகொடுத்து கூடைபறித்தார்கள்
அற்புதமானதொரு அம்மன்குறக்கூடை
உற்பனமாயெனக்கு உகந்துடனேதருமென்றான்

அருச்சுனன் குறக்கூடை வாங்கின குறம்.

தினதெந்தினாதினதெந்தினா தினதெந்தினாதினனா
தென்னாதினாதெந்தினா தினதெந்தினாதினனா.

மகாதேவராயனே மதிசூடுஞ்சிவனே
மலைமகளையொருபுறத்தில் வைத்தமகாதேவா
திசையெட்டுமாண்டவரே திக்கெங்குநீரே
தீராதவினைதீர்க்கும் சிவனாரும்நீரே
ஆராருமளவிடுமோ அரனாரேயும்மை

ஐயனேயென்பாதம் போற்றியென்றுதொழுதான்
பூராயமாகவே குறக்கோலந்தவக்கு
புகழானகுறக்கூடை தரவேணுமையா
இந்திரனார்லோகத்து ஊர்வசியாள்கூடை
இமையவரும்முனிவர்களும் நிறைந்திருக்குங்கூடை
ஈஸ்வரரும்ஈஸ்வரியும் நிறைந்திருக்குங்கூடை
இயலானநான்முகனும் இசைந்திருக்குங்கூடை
இந்திரரும்வானவரும் நிறைந்திருக்குங்கூடை
இடைதனக்கும்நடைதனக்கும் இசைந்திருக்குங்கூடை
நினைத்தாற்போற்குறியுரைக்க நிச்சயமாங்கூடை
நீலமயில்வாகனரே வள்ளியருளவேணும்
குறித்தால்போல்குறியுரைக்க கூடவருளவேணும்
குமரராருளாலெனக்குக் கூடைதரவேணும்
அப்பர்மலை ஆதிமலை பொன்மலையிற்குறத்தி
அரனேயுன்பொன்மலையில் அடியிணைநான்சரணம்
அன்றுமக்குகுறிகள்சொன்னேன் ஐயமில்லைகுறத்தி
அரனேயுன்திருவடிக்கீழ் அருச்சுனன்நான்சரணம்
திருவேங்கிடமாயனுக்குச் சிந்தையுள்ளகுறத்தி
செங்கழுநீர்மாலைபூணும் தெய்வநல்லகுறத்தி
சிரானவிசையனுக்கு கூடைதரவேணும்
சிவசங்கராவென்றுசொல்லி தேர்விசையன்தொழுதான்
பார்த்தனுக்குப்பாசுபதம் கொடுத்தாற்போலெனக்கு
பரிதானகுறக்கூடை தரவேணுமையா
விசையனார்முறையிடவே விமலனார்தாமும்
வீறானகுறக்கூடை அருளினார்மிகவே

வேறு.

பார்த்தனதுகைக்கொடென்று பரமசிவன்தானனுப்ப
கொண்டுவந்துகைகொடுத்தார் கொப்பெனவேதூதர்கள்
சந்தோஷப்பட்டாளே தாமந்தவாழ்மார்பன்
ஆணலழகுமன்னன் அருச்சுனனூரேதுசொல்வார்

குறம்.

அர்கராசிவமகாதேவா ஆண்டவனேசரணம்
அற்புதனேயுன்திருவடிக்கீழ் அருச்சுனநான்சரணம்
திரிபுரத்தைநகைத்தெரித்த சிவனேயுந்தன்சரணம்
திங்கள்பிறைதரித்தகொரு தேவாயுந்தன்சரணம்
மங்கையுடன்தங்கையுமாய் மதிசூடுஞ்சிவனே

மான்மழுவுந்தரித்ததொரு மகதேவாசரணம்
காமனைக்கண்ணாலெரித்த கைலங்கிரிவாசா
கண்மூன்றுடையவரே கர்த்தனேநான்சரணம்
அர்ச்சுனர்க்குபாசுபதம் தந்தாற்போலெனக்கு
அன்புவைத்துகுறக்கூடை இன்பமுடன்தந்தீர்
கூடைகளைகானிடுக்கிக் குறிகள்மிகநினைக்க
குறித்தாப்போல்குறியோட குமாராருளவேணும்
என்றவனுங்கூடைதனை இடுக்கினான்விசையன்
இயலானதுரோபதையாள் அருகேவந்துநின்றாள்

வேறு.

தீயிற்பிறந்தவளே தென்னாடன்பாவையரே
அல்லிற்பிறந்தவளே அல்லிமலர்நாயகியே
கொடுத்தாப்போல்கூடைவந்து கூடைபறித்தீர்கள்
கூடையிதோவாங்கிவந்தேன் என்றானேகொற்றவரும்
அப்போது துரோபதையாள் அல்லியருமேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
இந்திரக்கட்டுவச்சி இயலானபூங்குறத்தி
மந்திரக்கட்டுவச்சி மலையாளப்பூங்குறத்தி
எங்கிருந்துவந்தாய் இளங்குறத்திகூறுமென்றார்
மின்னிடைக்குச்சொல்லி உரைக்குங்குறிகளொன்று
எங்களுக்குச்சொல்லி உரைப்பாயிளங்குறத்தி
காண்டாபுரமெரித்த கானைமனமகிழ்ந்து
உங்களுக்குகுறியுரைத்தால் ஏதுதரப்போகிறீர்கள்
மார்பில்தரித்ததொரு மணிப்பதக்கந்தருவீரோ
முத்துமணித்தாழ்வடத்தைத் தருவீரோமொய்குழலே
அப்படியேசெய்கிறோம் ஆனந்தவாழ்மார்பா
என்றதுகேட்டு ஏதுசொல்வானருச்சுனனும்
அங்கவள்காலே மடித்துப்புரந்தணிந்து
வண்ணக்குறக்கூடை வைத்துவொருபுறமாய்
பொற்புறப்பன்கோல்பிடித்துப் பூங்குறத்திவந்தார்கள்
பெண்ணங்கூசோவே பொற்கொடியாள்வீற்றிருந்து
வாடைக்கிளிபோலே வண்ணமயில்போலே
தென்றற்கிளிபோலே தீவில்மயில்போலே
சற்றேநகைத்தவனும் கனிவாயைத்தான்திறந்து
கூறுவான்பார்த்தனவன் குறமாதரைப்போலே
ஏற்றகுறிதானுரைப்பான் இயலான அருச்சுனனும்

## பெண்களுக்குக் குறிசொல்லுகிற குறம்.

(தின) எந்தன துதிருநாடு கேட்கிறையோபெண்ணே
எற்றமுள்ள இந்திரனு ராஜனுமெந்த நாடு
நாகத்திலே அரியுரையும் எந்தனது நாடு
நான்மறைநனோ துவதும் எந்தனது நாடு
பொற்சவலைவளநாடு எந்தனது நாடு
பொங்குகடல்திரைசூழும் எந்தனது நாடு
இந்திரனு லோகமும் எந்தனது நாடு
எற்றமுள்ளபாஞ்சால னுமெந்த நாடு
பச்சமலைபவழமலை எந்தனது நாடு
பாண்டியர்களாள்கிறது எந்தனது நாடு
கொச்சிமலைகுடகுமலை எங்களது நாடு
கொற்றவர்கள் ஆள்கிறது மெந்தனது நாடு
வெள்ளிமலைபொன்மலைகள் எந்தனது நாடு
விண்ணவர்களாள்கிறதும் எந்தனது நாடு
பாய்போட்டுமுத்தளக்கும் எந்தனது நாடு
பாண்டவர்களாள்கிறதும் எந்தனது நாடு
தோல்போட்டுமுத்தளக்கும் எந்தனது நாடு
துரியோதனனுள்கிறதும் எந்தனது நாடு
வலைபடிந்தால்முத்தொதுங்கும் எந்தனது நாடு
அல்லியிட திருநாடும் எந்தனது நாடு
எட்டெழுத்தையுட்பொருளா யோதுமந்த நாடு
எற்றமுள்ளதீவுகளும் எந்தனது நாடு
ஐந்தெழுத்தையுட்பொருளா யோதுமெந்த நாடு
அரியனே அயனுறையும் எந்தனது நாடு
திசைதிசையங்கொண்டுவரும் எந்தனது நாடு
சிலைவிசையன்பெயர்கொண்ட குறத்திநான்பெண்ணே
பஞ்சவர்களைவருடநாடுமெந்த நாடு
பார்த்தனதுபெயர்கொண்ட குறத்திநான்பெண்ணே

### வேறு.

தோராவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவேச்சி
விண்ணின்குறத்தியரே விதுடையகட்டுவேச்சி
நாட்டுவளப்பமெல்லாம் நன்றாயுரைத்தாயே

சீமைவளப்பமெல்லாம் சீராயுரைத்தாயே
உன்பெயரும் ஊர்பெயரும் உச்சிதமாய்த் தோன்றுதடி.
தெய்வகுறத்தீ தெளிவானகட்டுவச்சி
எந்தனது கைபார்த்து இன்பக்குறியுரையும்
கண்டதகண்டார்போல் கட்டுவச்சிகூறமென்றாள்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தேதசொல்வாள்

துரோபதைக்குக் குறிசொல்லுகிறது.

தின-வட்டமதிமுகத்தாளே நீயில்வந்தபெண்ணே
வலக்காரத்தைநீகேட்டால் நான்குறிகள்சொல்வேன்
எழில்விசையன்தேவியரே பாஞ்சாலன்பெண்ணே
இடர்காத்தைநீகேட்டாய் இசைந்தகுறிசொல்ல
செங்கமலக்கைத்தலத்தைத் தீண்டியேநான்பிடித்தால்
திருவணியேஉகனேலே குடிப்பழுதாமண்டோ
மங்கையர்க்கும்மங்கையர்கள் கைகள்தனைப்பிடித்தால்
வாழ்பாஞ்சாலன்மகளரே குடிப்பழுதமுண்டோ
பங்கயஞ்சேர்கைத்தலத்தைப் பார்த்தனுமேபிடித்து
பாவையுடமுகம்நோக்கிப் பல்காலுஞ்சிரித்தான்
கட்டமுகிகைத்தலத்தைக் கண்ணிலொத்திக்கொண்டாள்
கண்மலரோபெண்மலரோ கைத்தலங்களென்பான்
சங்குசெறிகைநலது உன்குலமுநலது
ஸ்தனத்தில்மிருமறுநலது தனழந்துமிகவாழ்வாய்
அருச்சுனரைமாலையிட அருந்தணவிலுதித்தாய்
அழகுடையபாஞ்சாலன் உனைவளர்த்தான்பெண்ணே
பார்த்தனைத்தான்மாலையிட பக்கரையில்வளர்த்தாய்
பவமுடன்நீவளர்த்த நாளையிலேபெண்ணே
அருச்சுனனுடைந்தபேராம் அரசாண்டதுரைகள்
அரக்குமாமாளிகையில் அவரிருந்தாரொன்று
வில்வளைக்கபேர்களுக்கு மெல்லியரைக்கொடுக்க
வீரமரசுதிவந்து விருதுபறைபறைதந்தாள்
அவ்வார்த்தைமிகவரிந்து அருச்சுனர்தாமும்
அன்றுமொருபாப்பான்போல் அந்தசபையில்வந்தான்
இராசாதிராசாக்கள் நாணிதலைசாய்க்க
நலமுடனேவில்வளைத்து உனை மணந்தான்பெண்ணே
எட்டாதவில்வளைத்து எழில்விசையன்தனக்கு
இணையரியதேவியராய் நீயிருந்தாய்பெண்ணே
மங்கிலியம்விசையனுர் தரித்தநாண்முதலாய்
மன்னவர்களைவருக்கும் தேவியருமானாய்

தருமர்பெருந்தேவியென்று தனிமாலைசூட்டி
தன்சொல்லேமேலாக இருந்திருந்தாய்பெண்ணே
ஒருவருடம்ஓராண்டு உனைப்பிரியான்விசையன்
உண்மையடியென்குறிகள் தன்மைபடிபெண்ணே
தயவுள்ளபெண்ணரசே சகலகுணரதியே
சம்பத்துமென்னாளும் தவறாமல்வாழ்வாய்
என்றவளைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநகைத்தாள்

வேறு.

வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
தெய்வக்குறத்திகண்டாய் தெளிவானகட்டுவச்சி
பார்த்ததுபார்த்தாப்போல் பட்சமாய்நீயுரைத்தாய்
கண்டதுகண்டாற்போல் கட்டுவச்சிகூறிவிட்டாய்
உன்னைப்போல்கட்டுவச்சி உலகத்தில்கானறியேன்
என்தங்கைஅல்லியற்கு யேற்றகுறிசொல்லுமென்றாள்
பரிகலத்திற்சோறிடுவாள் பாலுமிகவூரிப்பாள்
மதுரைவளநாட்டியற்கு வகைபுரிவாய்மலைக்குறத்தி
அழகியபூமாது அல்லியரைத்தான்பார்த்து
காண்டாவனமெரித்த காளையவர்கூறலுற்றார்

அல்லிக்கு குறிசொல்லுகிற விதம்.

தின-ஆறுயிரம்பாண்டியர்கள் அறிபதவஞ்செய்ய
அன்றலர்ந்ததாமரையில் வந்துதித்ததிருவே
ஆண்மலடாய்பெண்மலடாய் அரியதவஞ்செய்ய
ஆணழியப்பெண்பிறந்து அவர்களைதீர்த்தாய்
சிறந்தகுலபாண்டியர்க்குச் செங்கோலுஞ்செலுத்தி
தென்னாட்டைதிறமையு ளாளவந்தாய்பெண்ணே
ஏழாம்பிராயத்திலே இளவயதாய்நீயும்
எதிர்த்துவந்தநீசமுகனை தலையறுத்துப்போட்டாய்
தேர்வண்டிக்காலிலே நீசமுகனையிரடி
செங்கோலரசாண்டாய் திறமையுள்ளபெண்ணே
மதிப்புடனேதென்மதுரை வளநாட்டையாள
வாழ்விசையனுனையழகாக கண்டேமடலூர்ந்தான்
மற்றொருவன்தன்திறமோ ஏழுநிமடலூர
அச்சுதனார்கிருபையினால் விசயரும்தாமும்
அல்லியரேசாழிமடலூர்ந்துமணஞ்செய்தான்
சொக்கரிடகிருபையினால் செங்கோலுஞ்செலுத்தி

திரமையுடனிராச்சியத்தை யாளுகிறாய்பெண்ணே
பரிவுடனேபாண்டியர்கள் பயின்றெடுத்ததிருவே
பார்த்தனுக்குமயிலனையே பண்புள்ளரதியே
உன்னழகையொருவரா லெழுதவல்லாருண்டோ
ஒருவருடம்உன்மனையில் உனைப்பிரியான்விசையன்
அடியளந்தமைத்துனனு ரானபடியாலே
அதிசயமாயுன்வடிவை எழுதிகளைத்தீர்த்தான்
கும்பமுலைஸ்தனத்தாளே கோகநகையாளே
குவலயத்தோர்கொண்டாடும் குஞ்சரமேபெண்ணே
அமிர்தமென்னுங்குணத்தாளே அன்னநடையாளே
அரசமுடிதானணிந்த அமுர்தபசுங்கிளியே
கொங்கைரெண்டுந்தான் ததும்ப செங்கரத்தால்பிடித்து
சேர்ந்தணையவிசையனிப்போ வருவானடிபெண்ணே
என்குறிகளொருநாளும் பொய்யாதுபெண்ணே
எழில்விசையனொருநாளு முனைபிரியான்மயிலே
கொம்பனையேயென்குறிகள் பொய்யலவென்று
கொங்கியம்மையாணையென்று கூடையின்மேலடித்தாள்
இக்குறிகள்பொய்யாமோ வல்லியரேயென்று
என்னாணைஉன்னாணை என்றவளுஞ்சிரித்தாள்

வேறு.

நீலக்கருங்குழலி நிகரில்லாப்பெண்பெருமாள்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
தெய்வக்குறத்தி தெளிவானகட்டுவச்சி
நீசொன்னகுறியிலே ஒன்றும்பழுதயில்லை
கண்டதுகண்டாற்போல் கட்டுவச்சிசொல்லிவிட்டாய்
பார்த்ததுபார்த்தாற்போல் பட்சமாய்நீயுரைத்தாய்
உன்னைப்போல்கட்டுவச்சி உலகத்தில்கானறியேன்
எங்களுக்குச்சொன்ன நிலைசந்தகுறிகளைப்போல்
எங்களதுபுத்திரர்க் கிசைந்தகுறிசொல்லுமென்றாள்
மைந்தன்மேல்பாடுமென்றாள் மாலைக்குறத்தியரை
பிள்ளைகள்மேல்பாடுமென்றாள் பூங்குறத்திநாயகமே

மைந்தர்மேல் பாடுகிற குறம்.

தின-வைபைபெரும்பாண்டியர்கள் செய்தபெருந்தவத்தால்
வாடாததாமரையில் வந்துதித்ததிருவே
பொய்யாதவில்மாரி சொரியவல்லாற்புதல்வன்

போர்விசையன்பயின்றெடுத்த புதல்வனுந்தன்பிள்ளை
நுதிமுகனைவரன்வாண்டி உந்தனிட புதல்வன்
திக்குசெயங்கொள்வாண்டி தேர்விசையன்புதல்வன்
ஜெயவீரபாண்டியர்கள் தம்முடையபேரன்
பொன்னின்மலைகாடாளும் பேரரமுதிமருகன்
பெருமையுள்ளபஞ்சவர்கு புத்திரனுமவனே
பேர்பெரியபுகழான புனர்திரனுர்பெண்ணே
என்றவளைத்தான்பார்த்து யிணைவிழியால்மிரட்டி
அவ்விபரைக்கொண்டாடி யாடியேதான்பார்த்து
சிற்றிடையேசெந்தணலில் வந்துதித்ததிருவே
ஜெகமேழுமாள்வார்கள் உந்தனிடபுதல்வர்
அழகுடையபாஞ்சால வைவர்களதுபேரர்
அன்னமேவுங்கலியைத் தீர்க்கவந்தபுதல்வர்
பாடியந்தேதனுங்களைகான் பாஞ்சாலன்மகளே
பட்டாடைநீதருவாய் பவமணியுந்தருவாய்
பாஞ்சாலன்மகளேநீ பைங்கொடியேசிதாய்
பந்துஸ்தனமேலிருக்கும் பதக்கமுநீதருவாய்
சிற்றுடைநீதருவாய் சிறுமணிகள்தருவாய்
செந்தணலில்வந்துதித்த சேயிழைநல்லாளே
என்றவளைத்தான்பார்த்து யிணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போல யிடைதுவளநடந்தாள்

## வேறு.

தோழுவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
அமையுமமையும் ஆணழகி சொன்னகுறி
உன்பொருட்டினாலே பிழைப்பாண்டியுன்கணவன்
குங்குமத்திண்டோன் குலுங்ககலைகைத்து
போதனையும்போதாச்சு யெழுதேன்றல்போகுதுகாண்
மின்னிடையாள்வாசலுக்கு விசையரேபோங்காணும்
அடியார்கள்சாயநல்ல வருச்சுனரேதுசொல்வார்
நீங்கள்-அன்னமுந்தாராவும் அழகுமல்லரேலிருக்க
உங்கள்-இருவரையும்விட்டு பிரியமனம்வருமோ
உங்களைப்பார்க்கிலு மதிசயமோமின்னிடையாள்
எப்படிபோவேன்கா னிளங்கொடியேஉன்னைவிட்டு
போவென்றசொல்லி பொற்கைப்பிரம்பெடுத்து
பொற்கைபிரம்பெடுத்து போர்விசையன்றனையடித்தான்

முடிபட்ட அருச்சுனனும் ஆலித்தெழுந்திருந்து
சிவமுறுவலுற் றன்பன் தேவிமுகம்நோக்கி
சிறியடித்திரே தியில்வந்தென்னமுதே
சிறியடித்திரே தெய்வகுலநாயகரே
சிறியடித்திரே சிங்கவரிப்புலியே
ஆறிற்றோகோபம் என்றான்சிலைவிசையன்
தேறிற்றோகோபம் என்றான்சிலைவிசையன்
தோளுவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
எய்யுமதனம்போல மெய்யாகவாள்விசையா
மைக்கலந்தகண்ணாலே மயக்காதேவாள்விசையா
எங்கள்கவலையைநீர் உத்தரிக்கப்போகிறீரோ
ஆர்க்காகப்போகிறீர் ஆரணங்குவாசலுக்கு
எனக்காகப்போகிறீரோ இந்திரனார்புத்திரனே
நீரேசுகப்படுவீர் நேரிழையாள்வாழ்ந்திடுவாள்
நீர்-மதப்பட்டயானைப்போல் நின்றுமயங்காதே
அக்கமாரேகேட்டீரோ ஆரணங்குகுறத்தியவள்
முத்தைநிகர்பல்லும் மூக்கணிந்தசெவ்வாயும்
ஒற்றையிடைமருங்கும் ஒவ்வியஞ்சிர்பட்டுடையும்
பொற்கொடியாள்பேரழகும் பொற்பிரப்பங்கோலழகும்
பார்த்தாற்குறத்திபரைப் பங்கயஞ்சிர்கண்ணானே
மன்னவனார்சிந்தையது மயங்கிறதைக்கண்டீரோ
வாழ்விசையன்சிந்தையது மயங்கிறதைக்கண்டீரோ
வாள்விசையராசாவை வாருமென்றுதானழைத்து
மற்றொருவர்வாசலுக்கு போகாதேமன்னவனே
பின்னொருவர்வாசலுக்கு போகாதேசுந்தரனே
சித்தாயன் றங்கையந்த சிறிக்கிமனைபோகாதே
மின்னிடையாள்வாசலுக்கு விசையரேபோயிருந்து
ஓராசனத்திற்கு உடனாகியிருந்து
மூத்தானமின்னிடைக்கு மூன்றுதிங்களானபின்பு
ஸ்ரீமந்தமென்றுசொல்லி வாருங்காண்தேர்விசையா
கலியாணமென்றுசொல்லி காவலனேநீவாரும்
என்றதுகேட்டுமேவ ரேதுசொல்வாரருச்சுனரும்
தனலிற்பிறந்தவளே அரசாளும்நாயகியே
நீங்களிருவரும் அணிந்திருந்தபொற்பதக்கம்
கூடப்பிறந்ததொரு பதக்கம்கொடுத்திரானால்

என்றதுதான்கேட்டு யேதசொல்வாள் துரோபதையும்
கொடுத்தானேயல்லாது சொற்றவனேபோகிறீரோ
என்று-கழட்டிக்கொடுத்தாளே கட்டிழகிபொற்பதக்கம்
அவள்பிறந்தபோதே கொம்பனையாள்பொற்பதக்கம்
கூடப்பிறந்ததே கொம்பனையாள்பொற்பதக்கம்
கழட்டிக்கொடுத்தாளே கட்டழகிபொற்பதக்கம்
மின்னொளியாள்வாசலுக்கு விசையரேபோங்காணும்
மற்றொருவர்வாசலிலே மன்னவனேசென்றிரானுல்
பின்னொருவர்வாசலிலே மன்னவரேசென்றீரானுல்
வேட்டையிலேகண்டாலே கண்குத்திபோட்டிடுவேன்
காட்டிலேகண்டாலே கண்குத்திபோட்டிடுவேன்
என்சமர்த்தும்சேவகமும் எல்லாந்தெரியுமே
போய்வாவிசையாவென்று பொற்கொடியுங்கூறிவிட்டாள்

குறத்தி தனித்துப்போகிறது.

மாணிக்கப்பொற்பதக்கம் வாங்கிகழுத்திலிட்டு
மாதர்குறத்தியைப்போல் வாள்விசையன்தானடந்தான்
தாங்கிக்குறக்கூடை தன்னிடுப்பில்வைத்தவும்
முழக்கையால்தானிடுக்கி மூக்குமேல்கையைவைத்து
அசைந்துநடந்தாள்காண் ஆரணங்குகுறத்தியரும்
பொற்பிரப்பங்கோல்பிடித்து போய்பிடித்தாள்கட்டுவச்சி
கண்டவர்கள்சோர்ந்துவிழக் கட்டுவச்சிதானடந்தாள்
வாசலும்வாசலது படியேழுந்தான்கடந்து
தெக்குகடந்தாளே தெருவீதிபோகலுற்றாள்
அன்னநடைதுரோபதையும் அரசாளும்நாயகியும்
அருச்சனன்போனபின்பு அலங்காரநாயகியும்
காதிபிருவர்களைத் தையல்மார்தானழைத்து
அருச்சனனுர்பின்னாலே ஆரணங்கேபோங்களடி
அவர்-எங்கெங்கேபோனாலும் எத்திசையிற்சென்றாலும்
எவ்வாசல்போய்நுழைவார் என்றறிந்துவாங்களடி
மின்னிடையாள்வாசலுக்கு விசையனார்போனபின்பு
அருச்சுனனையறியாமல் அறிந்துவா காதியென்றாள்
அவ்வார்த்தைகேட்டுமே ஆரணங்குபோகலுற்றாள்
அறியாதுபோலாக ஆணழகன்பின்றொடர்ந்தார்

குறத்திபெண்கள் வீதிவருகிறது.

அப்போமலைக்குறத்தி அத்தெருவுந்தான்கடந்து
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
பவளக்கொடிமாது பத்தினியாள்வீதிவாருள்
அந்தத்தெருகடந்து அப்புரயேபோகலுற்றாள்

போகவதிமாது பொற்கொடியாள்வீதிவாறாள்
நாகமடந்தையத்த நறுநுதலாள்வீதிவாறாள்
அந்ததெருக்கடந்து அப்புறம்போகலுற்றாள்
அத்தெருவுந்தான்கடந்து மற்றொருவீதிவாறாள்
சோரவனமாது சுபத்திரையாள்வீதிவாறாள்
அன்னம்போலேநடந்து அவ்வீதிவருகிறாளாம்
வாடைக்கிளிபோலே வாறாளே அக்குறத்தி
வஞ்சியிடைதுவள மாதுஸ்தனங்குலுங்க
மின்னற்கொடிபோல மெல்லிவருகிறாளே
அழகுகுலுங்குது ஆனந்தங்கொஞ்சுது
வடிவுங்குலுங்குது மாணிக்கங்கொஞ்சுது
மயில்போல்தலைவளைத்து மாதுவருகிறாளே
சுபத்திரைவாசலிலே தோழிமார்பார்த்திருந்தார்
இந்தக்குறத்தியரை யெங்கிலுங்கண்டதில்லை
செய்வக்குறத்தியோ திக்கெட்டில்கண்டதில்லை
மின்னிற்பிறந்தவளோ மேகவர்ணன்மச்சினியோ
கன்னிதிருப்பாற்கடலில் வந்தவளுமிவளோ
மாதர்குறத்தியரைக் கண்டதில்லைவையகத்தில்
அடி-வாடிமலைக்குறத்தி மாதருக்குகைபார்க்க
சுவாமிபிடதங்கையவள் சுபத்திரைக்குகைபார்க்க
உண்மைக்குறியுரைத்தால் உச்சிதம்தான்கொடுப்பேன்
ஆடைகள்முத்துரத்னம் ஆபரணந்தான்கொடுப்பாள்
வாடிகுறத்தியென்று வருந்தினார்தாதியர்கள்
போகமணமுண்டோ பொற்கொடியாள்வாசலுக்கு
அல்லிப்பெருமாளும் அறிந்தாளேயாமானால்
மின்னிடையாளாணபடி வம்பனென்றுமூதிவைப்பாள்
அப்படிக்கேளாலே அல்லிமலர்நாயகியாள்
தீன்முகனைக்கொன்று தீவிபிட்டபெண்பெருமாள்
வெட்டத்துணிவாளே வீரியத்தைச்செய்வாளே
கனைவனென்றுப்பாராளே கண்டித்துப்போட்டிடுவாள்
யாரென்றும்பாராளே அல்லிப்பெருமாளும்
சேர்த்துவுடல்தடிப்பாள் சேவகத்தைக்காட்டுவாளே
வரித்தவுடல்பிடிப்பாள் வல்லமையைக்காட்டுவாளே
உயிரிருந்தானுக்கால் உப்புவிற்றுண்ணலாம்
பொற்கொடியாள்வாசலுக்கு போவதுநல்லதல்ல
நாளைவருவோமென்று நாயகியும்போய்நடந்தாள்

சகாதேவன் வீதிவருதல்.

அத்தெருவீதிவிட்டு மற்றொருவீதிவாறாள்
தாமமுடிய ஞானசகாதேவன்வீதிவாறான்
அந்தத்தெருவிலே அணைந்தபேர்பார்த்தார்கள்
மின்னிற்பிறந்தவளோ மேகவர்ணமச்சினியோ

கன்னிதிருப்பாற்கடலில் வந்தகருவிளமே
எழுதவொண்ணு வடிவழகி இவ்வீதிவந்தாள்காண்
இவளைப்போல்கட்டுவச்சி இவ்வுலகில்கண்டதில்லை
காய்க்கும்பிராயமவள் கன்னிகட்டுங்காலமவள்
பூக்கும்பிராயமவள் பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சம்பிராயங்கண்டீர் கொழுந்தெல்லாம்பிஞ்சுகண்டீர்
பாதிவயதுகண்டீர் பக்கமெல்லாம்பிஞ்சுகண்டீர்
மையல்பெருகியே மயங்கியேயோடிவந்தார்
சுத்திவளைத்தார்கள் சூழ்ந்தார்கள்குறத்தியை
வாடிமலைக்குறத்தி மாளிகைக்குக்கொண்டுபோறோம்
மெத்தைமேல்வைக்கிறோம் வெண்பணிபூட்டுகிறோம்
வருவீரோகட்டுவச்சி என்றுவளைத்தார்கள்
மாதுகுறத்தியவள் மலைக்குறத்தியேது சொல்வாள்
மயில்போல்தலைவளைத்து மங்கையருமேது சொல்வாள்
வண்ணக்கிளிபோலே வாய்திறந்தேது சொல்வாள்

## சகாதேவன்வீதியில் குறம்.

(திண) தருமர்பெருங்காட்டுக்குள்ளே தழைத்தோங்கிவாழ்ந்தோம்
தனிவழியேபோறனென்னை வழிமறுக்கலாமோ
இச்சையுடனிவ்வுலகில் பிச்சைக்குப்போறேன்
இஷ்டமுடனோடிவந்து இச்சைசெய்யலாமோ
ஐவருடசீமையிலே அதர்மங்களுண்டாச்சோ
அதிதிபரதேசிகளை அகடுசெய்யலாமோ
கந்தருக்குங்கைபார்க்குங் கானகக்குறத்தி
கண்டவர்க்குப்பெண்டாக பெண்டுகளாசொன்னீர்
வண்டாடுகொண்டையின்மேல் கண்டாசைப்பட்டு
மயங்கியேவிழுந்தாலே மனப்பழுதுவருமே
மிண்டுகளைப்பேசாமல் விரைந்தோடிப்போங்கள்
கொண்டவனறிந்தாலே குடிகேடுவருமே
வம்பருமாய்தம்பருமாய் வழிமருத்துளன்னை
மனையாட்டியாக வழிமறுக்கலாமோ
சாத்திரத்தில்மிகுந்தவொரு சகாதேவராகில்
சூத்திரமாய்ப்போயுரைத்து தெண்டனைகள்செய்வேன்
என்றவரைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைவளநடந்தாள்

## வேறு.

வந்தவந்தமன்னரெல்லா மையல்பெரிதாகி
காமவிகாரமது களைகள்பெரிதாகி
சகாதேவராசாவும் சற்றேயறிந்தாலே
பழுதல்லோநந்தமக்குப் பார்வேந்தமன்னவரே

ஆக்கினைசெய்வார்காண் அழும்புவருமன்னவரே
என்று-அவரவர்மாளிகையில் அசைந்தாற்போல்போனார்கள்

### நகுலன் வீதிவருவது.

அந்தத்தெருக்கடந்து ஆணங்குகட்டுவச்சி
மற்றொருவீதியிலே வாராளேகட்டுவச்சி
நகுலராதவீதியிலே நடந்தாளேகட்டுவச்சி
அந்தத்தெருவிலே அனந்தம்பேர்மன்னவர்கள்
கண்டார்குறத்தியரைக் கட்டுவச்சிதன்னழகை
பார்த்தார்குறத்தியவளைப் பங்கயஞ்சேர்கண்ணாலே
இதுபுதுமையிதுபுதுமை இதுநெடுநாள்கண்டதில்லை
கண்டுமறியோமே கதையிலுங்கேட்டறியோம்
பார்த்துமறியோமே படத்திலுங்கண்டதில்லை
இவள்போல்வடிவழகி எங்கிலுநாமறியோம்
இந்தக்குறத்தியரை எங்கிலுங்கண்டதில்லை
என்று-வம்பருந்தப்பருமாய் மந்தலைத்தார்கள்
மையல்பெருகியே மயங்கியேவந்தார்கள்
வாடிமலைகுறத்தி எங்களுக்குக்கைபார்க்க
வீதிவீதியாகவே விருப்பித்திரிவானேன்
கானலிலும்வெய்யலிலும் கடுகித்திரிவானேன்
உன்னாக்கால்கொப்பளிக்க உச்சிவெடித்துவிட
வேண்டிவிடாய்த்து வெளியில்திரிவானேன்
வாடிமலைக்குறத்தி மாளிகைகருகொண்டுபோறோம்
என்றதுகேட்டு யேதுசொல்வாளக்குறத்தி

### நகுலன்வீதியில் குறம்.

(திரு) நகுலராசர்வீதியிலே வாழுகின்றமன்னோர்
நலமிகுத்தகுணமுடைய ராசர்களேவாரீர்
இலகுமதிசடையணிந்த ஈஸ்வரனாருளால்
இத்தெருவில்குறம்பாட நத்தியிங்கேவந்தேன்
வித்தகராய்வந்தயென்னுச் சத்திக்கொண்டீர்நீங்கள்
மெத்தவேவழுத்துகிறீர் உத்தமரேநீங்கள்
மேனியின்மேலாசைகொண்டீர் ஆவியெல்லாமுருகி
எங்களுக்கும்பெண்டுகளோ உங்களுக்குக்கூத்தியாரோ
உகமையுள்ளமன்னவரே அகமகிழ்ந்தேகேளீர்
என்னைவந்து ஆளிக்கும் இராசமன்னனானால்
இயல்புரவேமனங்களித்து அரண்மனையிலபோவீர்
சிற்றிடையார்வாழுகிற தெருக்களெல்லாந்திரிந்து
சிருடனேகுறம்பாடி பேர்கேட்டுவருவேன்
இலகுபுகழ்வீதியிலே எனைமறுத்திருந்தால்
நகுலனதுசபைதனிலே நானுரைப்பேன்பாராய்

என்றவரைத்தான்பார்த்து இணைவிழிபால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநடந்தாள்

### வேறு.

அப்போதுமன்னவர்கள் அனைவருந்தான்பார்த்து
குறத்தியிவள் தன்னாலே குற்றங்கள்நேருமென்று
நகுலாதிகளாலே நமக்குவருமோசமென்று
மெத்தபயந்தவர்கள் வீட்டுக்குள்போய்நுழைந்தார்
அவரவர்மாளிகையில் அப்படியேபோய்ச்சேர்ந்தார்

### அருச்சனன்வீதி வருதல்.

அப்போகுறத்தியரும் அலங்காரக்கட்டுவச்சி
அந்தத்தெருகடந்து மற்றொருவீதிவந்தாள்
அருச்சனனார்வீதியிலே அழகாய்நடக்கலுற்றாள்
அந்தத்தெருவிலே அனந்தமானபேர்களெல்லாம்
வண்ணக்குறத்தியரைக் கண்டார்கள்மன்னரெல்லாம்
முத்தநிகர்பல்லும் மூக்கணிந்தசெவ்வாயும்
புருவச்சிலையழகும் பொருந்துவிழியழகும்
காமன்கடைந்ததுபோற் கலசந்திளமுலையாள்
ஈழத்துதச்சனவன் எழுதிவாவிட்டானோ
தானேசமைந்தாளோ தையலிளங்கொடியாள்
இவள்போலவடிவழகி எங்கிலுங்காமறியோம்
(என்று) வண்ணப்பசுங்கிளியை வந்துவளைந்தார்கள்
சுந்திரியைப்பார்ப்பார் சுரூபக்குறத்தியென்பார்
வாடிமலைக்குறத்தி மாளிகைக்குகொண்டுபோவோம்
மெத்தையின்மேல்வைக்கிறேனம்ம வேணபடிபூட்டுறேண்டி
என்றசிலபேர்கள் இளமாதைசூழ்ந்துகொண்டார்
வாடிமலைக்குறத்தி என்றுவழிமறித்தார்
அப்போகுறத்தியரும் ஆரணங்குமேதுசொல்வாள்
மயில்போலகலைவளைத்து வாய்திறந்தேதுசொல்வாள்

### அருச்சுனன்வீதியில் குறம்.

(திலை) சிலைநுதலாள்மலர்விழியாள் நேர்விசயன்தாமும்
சூழ்ந்தமன்னருக்கு சொல்வாளொருவார்த்தை
பாதிசடையணிந்த பரமசிவனருளில்
பாசுபதம்பெருபெற்ற பார்த்தன்வடிவுடையோன்
இனியேசகாளர்களை பிராட்சதரைக்கொன்று
இந்திரலோகம்பட்டங்கட்டி யிருந்தரசையாண்டார்
அச்சுதனார்தோழனவ னருச்சனமகாராசன்
அவருடையவீதியிலே அழும்புசெய்வாருண்டோ

சத்தியந்தவறாத தருமர்தம்பிவிஜயன்
தாக்குடையான்வீதியிலே வாக்குதப்பாமல்
அச்சமென்றுபாடவந்தேன் வையகங்கள்மீது
அருச்சுனனார்வீதியிலே அழும்புசொல்வாருண்டோ
பொதுவாநானுங்களுக்குப் பெண்டுகளாமென்று
புண்ணியனாருச்சுனர்க்கு போயுரைப்பேன்கண்டீர்
புண்ணியனார்குந்திமகன் போர்விஜயனருளால்
பெண்டாளவந்தீர்களோ பூங்குறத்திதனை
மண்டலத்துவீதியெல்லாம் பாடிவந்துயென்னை
மலையாளக்குறத்தியென்று சற்றறியாமல்
கொச்சக்குறத்தியென்று சற்றறியாமல்
கூடுகைக்குஆசைமனம் தோணுதடாவுனக்கு
என்கணவன்பொல்லாதவன் எழும்புபுலிகொல்வான்
எதிர்த்தவரைதலையறுப்பான் மலைக்குறவன்பொல்லான்
காட்டானைசிங்கங்களும் காடிபுலியானை
கண்டகண்டமிருகங்களைத் துண்டிடவேகொல்வான்
அண்டையிலேனில்லாத ஆகலப்போங்களென்று
அலங்காரக்குறத்தியவள் மிகநோக்கிவந்தாள்
என்றவரைத்தான்பார்த்து பிணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திகளைப்போல யிடைதுவளநடந்தாள்

வேறு.

வந்துநின்றமன்னரெல்லா மையல்பெரிதாகி
வக்கத்துப்பார்த்துயிருந்தார்களெல்லோரும்
கையருந்தயானையைப்போல் கலங்கியேநின்றார்கள்
சிறகுபறிகொடுத்த செம்பருந்துபோலானார்
கொண்டைபறிகொடுத்த கோழிபோலானார்கள்
ஓடுகிறமானுக்கு ஒருகாலொடிந்ததாப்போல்
மத்தயங்காய்தின்றாற்போல் மயங்கியேநின்றார்கள்
காமக்கணையாலே கனைதாங்கிநின்றார்கள்

வீமன் வீதியில் வருகுதல்.

அப்போமலைக்குறத்தி அந்தத்தெருக்கடந்து
மற்றொருவீதியிலே வாராளேகட்டிலச்சி
மன்னமதகரியான மகாராசன்வீதிவந்தாள்
மதகரிவீமனது மாடத்தெருவில்வந்தாள்
வெற்றிமதயானை வீமனதுவீதியிலே
அந்தத்தெருவிலே அனந்தம்பேர்கூடினார்கள்
வம்பராய்க்கூடினார்கள் வல்லார்சிறுவர்களும்
தம்பராய்க்கூடியே சூழ்ந்தார்குறத்தியரும்
ஒருவயதாய்க்கூடினார் ஒருகோடிராசாக்கள்
இளவயதாய்க்கூடினா ரிராசாக்களுள்ளவர்கள்
வந்தவனைத்தார்கள் மாதுகுறத்தியுடை

இந்தக்குறத்தியரை யெங்கிலுங்கண்டறியோம்
திக்கெட்டில்கண்டதில்லை தெய்வக்குறத்தியரை
இவள்-கட்டுவச்சியல்லவடா காமன்ரதியெனபாரும்
இளநிலவரைப்போல வேந்திழையாள்வடிவழகும்
சந்திபிறையென்பார் தார்குழலாள்வடிவழகும்
மின்னர்கொடியாளோ மேகவர்ணன்றங்கையரோ
கங்கிதிருப்பாற்கடலிற் வந்தகருவிளமோ
கிழங்கள்பழங்களெல்லாம் கிட்டிவந்துபல்திறந்தார்
வாருய்க்குறத்தியரே மாளிகையில்கொண்டுபோரேரும்
கானலிலும்வெய்யலிலும் கடுகித்திரிவானேன்
வெய்யலிலேதிரிந்து மெத்தவிடாயாவானேன்
சிங்காதனத்தில்வைத்து சேவித்துபார்க்கிறேண்டி
மெத்தையின்மேல்வைக்கிறேண்டி வேணபணிபூட்டுறேண்டி
பெண்களுள்ளபேரை பேணித்தொழில்செய்யவைப்போம்
ஆண்பிள்ளைகளுள்ளபேரை அடப்பம்பிடிக்கவைப்போம்
வாருய்குறத்தியென்று மாதரைச்சூழ்ந்துகொண்டார்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்துசொல்வாள்
கொம்பிலிருந்து கூவுங்கிளிபோல
கிளிபோலவாய்திறந்து கூவுவாள்கட்டுவச்சி

## விமனதவீதியில் குறம்.

(தின) சிறந்தகுலபஞ்சவர்கள் செங்கோலைச்செலுத்தி
ஸ்ரீராமர்கிருபையினால் ஜெகமேழுமாண்டார்
ஏழுபிராயத்திலே யிடும்பன்றனைக்கொன்று
எதிர்த்துவந்த பிராட்டதரை சங்கரித்தவீமன்
பத்துபிராயத்திலே பகாசூரன்றனை
பழுதரவேகிழித்தெரிந்த பாரதகசியான்
மதத்தயானைசங்கரிக்கும் மதவீரசமன்
வாழும்பெருவீதியிலே வம்பர்களுமுண்டோ
கொச்சைக்குறத்தினான் பிச்சைக்குவந்தால்
கூடிமயலாகியென்மேலாசைபடுவாரோ
இச்சையுடனிவ்வுலகில் பிச்சைக்குப்போரேன்
இஷ்டமுடனோடிவந்து பிலச்சைசெய்யலாமோ
ஐவரதபிமையிலே அதர்மங்களுண்டாச்சோ
அதிதிபரதேசிகளை அகடுசெய்யலாமோ
கந்தருக்குகைபார்க்குங் கானகக்குறத்தி
கண்டவர்க்குபெண்டாக மிண்டுகளாசொன்னீர்
வண்டாடுகொண்டையின்பேல் கண்டாசைப்பட்டு
மயங்கியேவிழுந்தாலே மனப்பழுதுவருமே
கொண்டவறிந்தாலே குடிகேடுவருமே
வம்பர்களுந்தும்பர்களும் வந்துவழிமறந்து

பணையாளாய்வருமென்றவேணையவழக்கலாமே
இவ்விதமாய்விமருடன் யானுரைத்தேனுனல்
மயக்கிவிழுடக்கணைத்தான் வதைத்திடுவார்போடா
இப்போதுபோயுரைப்பே னப்புறம்போதீரோ
என்றவரைத்தான்பார்த்து பிணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போல பிகடதுவவநகைத்தான்

வேறு.

அந்தண்டமன்னரெல்லாம் அசைந்தாற்போல்நின்றவிட்டார்
மையல்பெரிதாகி மயக்கிபேநின்றவிட்டார
மாணிக்கபொற்பதக்கம் மார்பிலசைந்தாட
ஏக்கற்றும்போல விருந்துவிட்டார்மன்னரெல்லாம்

தருபர் வீதிவருகல்.

அந்தத்தெருகடந்து அப்பாலேபோகலுற்றுள்
வீதியுபவீதி தெருவும்பலகடந்து
சந்தவடிவழகர் தருமாதுவீதிவந்தாள்
மின்னற்கொடிபோல மெல்லியருந்தான்வருவாள்
காபரூபவடிவழகி கட்டுவச்சிதன்னழகை
அந்தத்தெருவிலே அனந்தப்பேர்கண்டார்கள்
கட்டுவச்சிதன்னழகைக் கண்டார்சிலபேர்கள்
சுத்திவந்துபார்ப்பார் சொரூபக்குறத்தியென்பார்
கட்டுவச்சியல்லவடா காமனரதியென்பாரும்
சார்ந்தநடையழகும் தாழ்வடத்தின்முத்தழகும்
குறத்திவடிவழகை கொற்றவர்கள்தான்பார்த்து
யார்த்துமனமிரங்கி பல்லைதிறப்பாரும்
மல்லாட்டுங்கொங்கையின்மேல மனங்களித்துபார்ப்பாரும்
பின்னழகைக்கண்டு பிரமித்துநிற்பாரும்
முன்னழகைக்கண்டு மூர்ச்சையாய்விழுவாரும்
வாடிகுறத்தியரே மதனகலைபைத்தீராயோ
முத்துநிகர்ப்பல்லும் முருக்கனிச்செவ்வாயும்
இருண்டெழுந்தசோலையிலே சிவந்தெழுந்தசந்திரன்போல்
அந்தகுறத்தியரை அனந்தம்பேர்பார்த்திருந்தார்
கட்டுவச்சிநாயகியை கண்டுமயலானர்
கிழங்கள்பழங்களெல்லாம் கொட்டிவந்துபல்திறந்தார்
வாடிமலைக்குறத்தி மாளிகையிலிட்டுபோறேம்
மெத்தையின்மேல்வைக்கிறேம் வேணபணிபூட்டுகிறேம்
சிங்காதனத்தில்வைத்துச் சேவித்துபார்க்கிறேம்
பொன்னடிக்கீழ்தெண்டனிட்டு புட்பமலர்கரிப்போம்
மன்மதபாணமது மார்புருகிப்போகுதடி
கூடியணைத்தாலே குறைதீருங்கட்டுவச்சி
மெத்தையுண்டுமேடையுண்டு வீற்றிருக்கச்சோலையுண்டு
சுத்திஉலாவுதற்கு சிங்காரச்சோலையுண்டு

கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
படுக்கவிடமுமுண்டு பள்ளிகொள்ளத்தாவுமுண்டு
தின்னநல்லபாக்குமுண்டு செம்பொன்னனகைகளுமுண்டு
அணியப்பரிமளமும் அள்ளிதரப்புனுகுமுண்டு
வாருமோகட்டுவச்சி மாளிகைக்கழைத்துப்போனாரே
என்றதூதர்க்காரர்கள் மயிலனையகுறத்தியரை
மாதுகுறத்தி மலைக்குறத்தியேது சொல்வாள்
குறமாதர்போலாக கொம்பனையாளேது சொல்வாள்

## தருமர்வீதியில்குறம்.

(தின) கொன்றைமல்லிமுல்லைசூடுங் குமரேசர்நாட்டில்
தொங்குவங்களமதில குடியிருக்குங்குறத்தி
கொச்சிமலைகுடகுமலை வாழுகின்றநாங்கள்
குமரேசர்வள்ளியற்கும் குறியுரைக்குங்குறத்தி
பச்சமலைபவழமலை வாழுகின்றநாங்கள்
பசிகாலமானாலே பழக்கூறிவருவோம்
சந்திரகுலம்விளங்கவந்த தருமர்பெருநாட்டில்
தாரணியில்குறம்பாட தனித்துவந்தேனிங்கு
பிச்சைகுறத்தியர்மேல் இச்சைபட்டீர்நீங்கள்
புண்ணியனார்தருமருடன் போயுரைப்பேன்பாராய்
தருமர்பெருவீதியிலே அதர்மங்களுண்டாச்சோ
சற்றெனவேபோயுரைத்துத் தலைதரிப்பேன்பாராய்
பொன்முழுகுந்துறைதனிலே போய்முழுகார்தருமர்
பொய்வசனமுறையாத புரள்வேந்தராசன்
உண்மையுடனெவருக்கு முரைத்தமதிதானே
உன்னுண்மையவர்க்கு வின்னுண்மைசொன்னீர்
வம்பர்களோதும்பர்களோ வழிமறிக்கவுன்னை
மனைவிடத்துசமுசாரி யென்றறியாச்சே
என்குறவனைபொல்லாதா னிதுவறிந்தானானால்
உங்களிடமானறிந்து வுயிர்வதைகள்செய்வான
உக்கமற்குப்பிறந்ததொரு புத்திரனானால்
பரிந்துவந்தென்னைமறிக்க நியாயமுண்டோசொல்வீர்
தேவதாசிமக்கள்கோவ ளாவபடியினாலே
தெருவில்போகுங்கன்னியரைத் தீண்டியழைத்தீர்கள்
அச்சமறநாட்டுக்குள்ளே சற்றுபயமில்லையோ
அப்புறம்போமென்றவளு மஞ்சிநடைநடப்பாள்

## வேறு.

மாதர்குறத்தியுட வார்த்தைதனைக்கேட்டவர்கள்
மெத்தப்பயந்தார்கள் விடைவிடென்றுதானடுங்கி
ஓடுகிறானுக்கு ஒருகாலொடிந்தாற்போல்

ஒருகாலொடிந்து ஓடிவந்தமுடவனைப்போல்
மையல்பெரிதாகி மயங்கியேநின்றுவிட்டார்
எக்சற்றூற்போல யிருந்துவிட்டாரெல்லோரும்
மத்தங்காய்தின்றூற்போல் மயங்கிநின்றுவிட்டார்

பள்ளிக்கூடத்துவீதிவருதல்.

அந்தத்தெருக்கடந்து அப்பாலேபோகலுற்றாள்
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
ஓதிவைக்கும்வீதியிலே உத்தமியாள்வாறாளே
பள்ளிக்கூடத்திலே வருகின்றபாதையிலே
வாத்தியார்வீதியிலே வருகின்றபாதையிலே
அப்போகடோர்கஜனும் அபிமன்னராஜாவும்
இந்திராசனவன் யிளவரையான்சேமான்
அரவானுக்கொத்திகெட்டி ஐவரிளம்பாண்டவர்கள்
இளம்பஞ்சபாண்டவர்கள் யிபலாவசிறுவருடன்
அண்டையசல்பிள்ளைகள் ஆயிரஞ்சிறுவருடன
சிறுவயதுபிள்ளைகள் தோழமார்தன்னுடனே
பள்ளிக்கூடத்திலே பகல்பாடமொப்பிவைத்து
கணக்குத்தொகைகளுடன் வாசகங்களொப்பிவைதது
பார்த்தன்புதல்வரெல்லாம் பகலமுதுவுண்ணவென்று
ஐயர்சிலவருளால் அரண்மனைக்குவாறார்கள்
மக்கள்வருகிறதை வாழ்குறத்திகண்டுவிட்டாள்
செண்டுபந்துவிளையாடி தெருவீதிவாறார்கள்
புத்திரர்தன்வரவைக் கண்டாளேபூங்குறத்தி
பிள்ளைகள்தன்வரவைக் கண்டவளும்பூரித்தாள்
உள்ளங்குளிர்ந்தவளும் வுடம்பெங்குபூரித்து
சரீரங்குளிர்ந்தாளே சர்வாங்கப்பூரித்தாள்
அபிமன்னன்தானறிந்தால் லாச்சியுடன்போயுரைப்பான்
ஆயனுடன்பிறந்தாள் அறிவையாள்தானறிந்தால்
சித்தசன்றங்கையவள் சுபத்திரையவள்தானறிந்தால்
காரியங்களல்லவென்று கடுகக்கடக்கலுற்றாள்
தெரியாதபோலேசென்று மிஞ்சியவள்கடந்தாள்
விளையாடிவாரபிள்ளை மெல்லியளைக்கண்டுவிட்டார்
பாலர்சிறுவரெல்லாம் பார்த்துவிட்டார்குறத்தியரை
தூரவருகையிலே துரைமக்கள்கண்டார்கள்
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுவான்
அண்ணேவகண்டீரோ அதிசயமானதை
கபமூரிதசூரியன் எங்குமயமாவான்காண்
ஆதித்தன்சூரியன் அவந்தயமானுக்கால்
கிழக்குதயமாகியல்லோ மேற்கேயடைந்திடுவான்
மேற்குதயமானாற்போல் விந்தையாய்த்தோன்றுகுது

வருகிறகுறத்திதன் வடிவழகைப்பார்த்திடுங்கள்
குன்றின்மேல்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
இவளழகும்பாவனையும் எங்கிலுங்கண்டதில்லை
மின்னற்கொடியோதான் மேகவருணன்மச்சினியோ
கன்னிதிருப்பாற்கடலிற் கருவிலமாய்வந்தவளோ
முத்துநிகழ்பலனும் முருக்கணிந்தசெவ்வாயும்
வண்டாடுங்கொண்டையது மயிரழதும்பாவனையும்
புருவச்சிலையழகும் பொருந்தும்விழியழகும்
கூரியமூக்கழகும் குளிர்ந்தமுகபழகும்
கன்னன்கடைந்தாற்போல் கலசத்திளமுலையும்
இடையழகும்நடையழகும் இடைக்கிசைந்தபட்டுடையும்
ஆபரணமினனு மலங்காரச்சோதிகளும்
ஈழத்துதச்சன் எழுதிவரவிட்டானோ
சித்திர திபோலே தெருவீதிவாராளே
பட்டணத்துவீதியிலே பார்த்திபர்காண்கிலேயோ
அஞ்சனம்போல்வாரவளை அருச்சுனனார்காண்கிலேயோ
கண்டால்விடுவாரோ காண்டீபருச்சுனரும்
ஐயருகாக வழைத்துப்போய்விடுவோமா
என்றதுகேட்டுமவ னேதுசொல்வானல்லரவான்
தம்பிகெடுத்தாயே தாழ்வானவார்த்தைசொன்னாய்
அருச்சுனனார்தம்மருகே வழைத்துப்போய்விட்டாலே
இந்தக்குறத்தியண்டை எந்நேரம்வாசமதாய்
விட்டுப்பிரியாமல் வீற்றிருப்பாருச்சனரும்
நமது-ஆச்சியர்பாடெல்லாம் பட்டல்லோ ஆணழகா
மூலைசிறைகாப்பார்கள் மொய்குழல்மார்தாயார்கள்
எந்நேரம்நம்மைவைத்து பிடியும்படையுமாகும்
என்னமதிசொன்னீர்காண் என்னுடையதம்பியரே
இத்தையறியேன்காண் என்பிறப்பேயண்ணாவே
அய்யாகுணமறிவோ மவர்கடக்கைநாமறிவோம்
நம்முடைய ஆச்சிமார் நாயகிமாரெல்லோரும்
அவரவர்கள்தன்வீட்டி லினைவரையும்போகவிட்டு
குறத்தியருக்காக குடிப்பார்நமதகப்பன் .
என்றிவர்கள்பேசி இசைந்துவருகையிலே
மாதுகுறத்தியிட மார்பில்பதக்கமது
தோருவடிவழகி திரௌபதைநாயகியாள்
அல்லிப்பெருமா ளரசாளும்நாயகியாள்
இவ்விருவர்பொற்பதக்க மிவள்கழுத்திற்கண்டார்கள்
கண்டுபுலத்திரனுங் கட்டழகனேதுசொல்வான்
அண்ணாவேகண்டீரோ ஆச்சிமார்பொற்பதக்கம்
ஆச்சிமார்பொற்பதக்கம் ஆரந்திருடிவந்தாள்
கன்னமிட்டுவந்தாள்காண் கட்டுவச்சிநாயகியாள்

விஷமக்குறத்தியரை வெட்டுங்களென்பாரும்
சில்லுபில்லென்று சிறுவரெல்லாங்கூடினார்கள்
வல்லக்குறத்தியரை வந்துவளைத்தார்கள்
கூடைசிலரிழுப்பார் ஆபரணஞ்சிலர்கொள்வார்
ஆடைபிடித்திழுப்பார் ஆபரணஞ்சிலர்கொள்வார்
கொண்டைபிடித்திழுப்பார் கூடைபறித்திழுப்பார்
பொற்பிறப்பங்கோர்லபறிப்பார் பூவாடைவலித்திழுப்பார்
குள்ளக்குறத்தியரை முட்டுங்களென்பாரும்
கள்ளக்குறத்தியரை காதறுப்பேமென்பாரும்
முல்லைக்குறத்தியரை மூக்கறுப்போமென்பாரும்
சில்லுபிலலென்று சிறுவராய்கூடினார்கள்
மலங்கமலங்கவே மடியைப்பிடித்திழுப்பார
மாலைக்குறத்தி மலைக்குறத்தியேதசொல்வாள்
வண்ணமலைக்குறத்தி வாய்திறந்தங்கேதுசொல்வார்

## பிள்ளைகள் இழுக்கிற குறம்.

(தின)வம்பியல்லதம்பியல்ல விலைமாதால்ல
வழிமறித்தழுனைகுலைத்தல் பண்ணவோவந்தீர்
நம்பிவந்தேன்பாண்டவர்கள் நாடுதனிலிரக்க
நடுவழியிலென்னைமறித்து புடவைதன்னையிழுத்தீர்
அம்புவிழியாள்மிரட்டி மடியும்பிடித்திழுத்தீர்
அறியாதபயல்களென்று நானும்பனம்பொறுத்தேன்
அல்லியிடதிருமகனே அசடியிடமகனே
அல்லாதுஎந்தனது வல்லாண்மைபாராய்
பயல்களென்றுகைதாழ்ந்தேன் நெறிமுறைமையாக
அருச்சுனனார்தன்மகனே ஐவர்திருமகனே
அறியாமல்மடிபிடித்தா யபராதம்வருமே
வல்லிடுப்புதன்மகனார் வளநாடிமகனே
மதியாமல்மடிபிடித்தாய் குடிப்பழுதுவருமே
அக்கினிநானுங்களுக்கு அனுகாபற்போடா
அல்லிதிருமகனே ஆண்மைகளுமறிவேன்
சொல்வசனமறியாத தருமரிதையறிந்தால்
தாறுவருமுங்களுக்கு வேறுபடப்போதீர்
இடபமதிலேறிவரும் ஈஸ்வரனார்மைந்தன்
ஈராறுகாமுடையான் யேழைபங்காளன்
திருத்தணிகைகந்தருக்கும் பாடியிடுங்குறத்தி
தெய்வலோகக்குறத்தியென்று தேசமெங்குமறியும்
மற்றொருத்திபோலவென்னை மடிபிடிக்கவந்தீர்
வரிசையெனக்குடன்பிறந்தார் நால்வருண்டுபொல்லச்
என்மடியைப்பிடித்திழுத்த வார்த்தைதன்னைக்கேட்டால்

இபலானவுன்மாது திரௌபதையாள்தன்னை
இக்கோரம்பிடித்திழுத்துப் பெண்டுவைத்துக்கொண்டார்
இடங்கெட்டபுத்திபெற்ற மகனேநீபோடா

பிள்ளைகள்கோபித்து சண்டைசெய்கிறது.

வேறு.

இந்திரராஜனவன் இளவரையனேதுசொல்வான்
அன்றேவேகண்டீரோ ஆகடியவார்த்தைசொன்னாள்
வாயிடும்புபேசினாள் மன்னவரேகண்டீரோ
சொலலாதவார்த்தையிவள் சொல்லினாள்கண்டீரோ
கொம்பனையாள்திரௌபதையைக் குறவர்பெண்டாயிகழ்வது
பத்தினியாளென்றுசொல்லி சற்றுமதியாமற்சொன்னாள்
வாயைக்கிழிப்பேன் மணிமுடியைநான் றுணிப்பேன்
நாக்கையறுத்திடுவேன் நாணங்குலைத்திடுவேன்
எட்டிபழம்போலே இருகண்ணுந்தான்சிவந்து
சவரிப்பழம்போலே தன்னிருகண்சிவந்து
உருகியசெம்பொனது உதிரம்போல்கண்சிவந்து
இடதுபக்கஞ்சதைகளது ஈட்டிப்போலேதுடிக்க
வலதுபக்கஞ்சதைகளது வல்லயம்போலேதுடிக்க
வாங்கினான்தன்சில்லை மண்ணும்விண்ணுந்தானதிர
வில்வளைத்துநாரிபூட்டி விசையுடனேபாணந்தொட்டான்
எடுத்தானேஅம்பு ஏற்றினானாணியிலே
நாணிபிகுவெடுக்க நாணோசைசப்தமிட
அண்டஞ்செவிடுபட ஆகாயந்தானதிர
தேவர்நடுங்கவே திக்குகளுந்தானடுங்க
சந்திராள்கெதிகலங்க சமுத்திரம்நீர்கள்வற்ற
பிரயோகம்பண்ணுகிறான் பெரிதானஅஸ்திரத்தை
ஒன்றுபத்துநூறு ஓராயிரங்கோடி
ஏற்றினானாணிதன்னை இராசாக்கள்தானடுங்க
நகரத்தரசர்கள் திடுக்கிட்டுநாவுலர
சொர்ணகிளாஞ்சியது செவிகள்செவிடுபட
கெர்ப்பங்கலங்கவேதான் கிளிகள்சாமாரிகொள்ள
கொற்றவனுமங்கே குணத்தொலிபண்ணினானே
அம்பைத்தொடுத்தானே ஆரணங்கைகொல்லவென்று
விட்டான்சரபாணம் மேனியெல்லாம்நீறாக
சரமேற்சரந்தொடுத்தான் சமர்த்தானஅல்லிமகன்
அம்புவேலம்பு ஆயுதமாய்ப்பொழிந்தானே
அஸ்திரம்வரும்விதங்கள் ஆர்க்கமுடிபோகாது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடிபோகாது
ஐப்பசிமாதத்திலே அடர்ந்தமழைவந்ததுபோல்
கார்த்திகைமாதத்திலே கனத்தமழைவந்ததுபோல்
சங்கோபசாங்கமாய்ச் சரமாறிதான்பொழிந்தான்

அஸ்திரம்வருகிற அதிவேகத்திறமையிலே
திக்கிலுள்ளஜனங்களெல்லாந் திகிலெடுத்துப்பார்த்துவைப்பார்
மாண்டாள்குறத்தியென்று வையகத்தார்சொல்லலுற்றார்
இந்திரபாணமது எப்படியுங்கொன்றுவிடும்
ஐயையோவென்றுசொல்லி அழுவார்சிறிதுபேர்கள்
அல்லிமகன்தொடுத்த அனந்தமானபாணமெல்லாம்
இந்திரன்விட்டதொரு பாணங்கள்தானெழும்பி
கொல்லவேவந்தது கோடானகோடிபாணம்
அருச்சுனரென்றுசொல்லி அஞ்சிப்பயந்தது
வாள்விசையனென்றுசொல்லி மனதில்நினைத்தது
ஆரென்றுசொல்லிவிட்டான் அல்லிமகனிந்திரனும்
தகப்பனைக்கொல்லவோ தான்தொடுத்தார்பாணமது
யாராலேயாகுமிந்த அருச்சுனரைக்கொல்லுகைக்கு
பரமசிவன்கையிலே பாசுபதம்பெற்றவரை
நம்மாலேயாகுமோ ராசாவைக்கொல்லுகைக்கு
என்றுபயந்ததுவும் இறங்கியடிபணியும்
தாளியிலையறக்கும் தாமரைப்பூவோரிதழும்
அட்சதையும்புஷ்பமும் அறுகுகெந்தந்தன்னுடனே
மாலைகளாய்வந்து வணங்குதவள்பாதம்
கண்டான்புலந்திரனுங் கண்கொள்ளாக்கோபமுடன்
அண்ணாவேகண்டீரோ அம்பைவணங்கவைத்தாள்
பாணத்தைதான்மயக்க மருந்தறிவாள்பாவியிவள்
சொக்குபொடிமருந்து தூவும்வித்தைகற்றவள்
வானஞ்சுழலவே மருந்தறிவாள்பாவியிவள்
பூமிசுழலவே பொடியறிவாள்தோஷியிவள்
கண்கட்டுவித்தைகளும் காரணமுந்தானறிவாள்
மாயப்பொடிமருந்து மாபாவிதானறிவாள்
மலையாளந்திரிந்தவள்தான் மந்திரமுங்கற்றவள்தான்
ஆனதால்ஆச்சியிட ஆரந்திருடிவந்தாள்
இந்தகுறத்தியை என்னசெய்வேன்அண்ணாவே
தெண்டாயுதத்தாலே சிலவதைபண்ணுகிறேன்
தெண்டாயுதமெடுத்து சுழட்டியறைகிறேன்
கைபறித்துதெண்டெடுத்தான் கனகமணிச்சிதைய
வெற்றிமதயானை வீமன்பயின்றெடுத்த
காளகடோர்கஜனும் கனகோபங்கொண்டானே
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரவீரியனே
நீ-அம்புக்குவல்லவன்தான் அருச்சுனனார்புத்திரனே
அம்பைத்தொடுத்தீரோ அனைவோரும்பார்த்திருக்க
தெண்டுடையான்வீமன்பெற்ற திறமையுள்ளான்நானிருக்க
மிஞ்சாதேதம்பியரே மெல்லியளைக்கொன்றிடுவேன்
என்றேயெழுந்தாயே இபல்வீமன்பெற்றமகள்

காளைகடோர்கஜனும் கடுகியேதெண்டெடுத்தான்
எட்டுதிசைகடுக்க யிராசாக்கள்குலையதிர
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துவிழுந்திடவே
மந்திர தூபமிட்டு வாங்கிச்சமுட்டிவிட்டான்
கண்டந்தமன்னரெல்லாம் கனகப்பயந்தார்கள்
மாண்டாள்குறத்தியென்று மண்டலத்தார்தான்புலம்ப
வருகிறகோதண்டம் வாள்விசையனைக்கண்டு
ஆரென்றுகொல்லுதற்கு அனுப்பினான்வாள்வீரன்
பார்த்தான்வடிவுடையான் பாசுபதம்பெற்றவனை
நம்மாலேயாகுமோ ராசாவைக்கொல்லுதற்கு
என்றுபயந்துமே யிறங்கியடி யில்விழும்
தாளியிலைபரிக்குந் தாமரைப்பூஓரிதழாம்
மாலையாய்வந்தல்லோ வணங்கிற்றவள்பாதம்
கண்டான்கடோர்சஜனுங் கண்சிவந்துகோபமுடன்
சத்திராதிபகையாளியைச் சங்கரிக்குங்கோபதெண்டு
வச்சிரகோபதெண்டு வணங்கவைசதாளிக்குறத்தி
மாயமறிவாள் மருந்தறிவாள் கட்டுவச்சி
இந்தக்குறத்தியரை யென்செய்யவேணுமென்றான்
இந்த-மந்திரவாளாலே யிம்மாதரைவெட்டவேண்டும்
என்றுபதைத்தவனும் யெடுத்தானேவாள்தன்னை
கண்டானேநல்வீமன் கடுகிவந்துதான்மறித்தான்
அபிமன்னன்வாளுக்கு ஆருமெதிருமல்ல
கனமோசம்வருகுதென்று கடுகியவனோடிவந்து
இந்திரசாலவித்தையாலே யெழும்பிவந்துவாள்பிடித்தான்
வாளைபின்னை மதியில்லாத்தம்பியே
தூதரைக்கொன்றாலும் சூல்பசுவைக்கொன்றாலும்
வேதியரைக்கொன்றாலும விண்ணவரைக்கொன்றாலும்
நம்பினவனென்றவரை நாமவரைக்கொன்றாலும்
ஆதரித்துவந்தவரை அவரைநாம்கொன்றாலும்
மாதரைக்கொல்வதற்கு வாள்தானெடுப்பாரோ
எதிரிபகையாளியல்ல நமையெதிர்த்தசத்துருவல்ல
ஆரென்றுஆயுதத்தை அபிமன்னுநீயெடுத்தாய்
ஆரந்திருடிவந்த அதிசயத்தைநாய்கேட்போம்
தருமாருகாகத் தள்ளிப்போய்விட்டிடுவோம்
கோபத்தையாற்றிவிடு குறத்தியைநாம்கேட்போம்
என்று-மவனைவிலக்கியே மன்னவனல்லரவான்
மாதாகுறத்தியுடன் வாய்திறந்தங்கேதுசொல்வான்
வாடிமலைக்குறத்தி வாள்பெரியதருமரண்டை
தருமாருகாகத் தள்ளடாவென்பாரும்
கூடைபிடித்திழுப்பார் முன்காலேதள்ளிடுவார்
புடவைபிடித்திழுப்பார் பின்காலேதள்ளிடுவார்

கண்ணால்சருகுவார் கையால்சிலசிழுப்பார்
கட்டுமடாவென்பாரும் கூதறப்போமென்பாரும்
நாக்கரிவோமூக்கரிவோம் நல்லஸ்தனமரிவோம
என்று-மலங்கமலங்க மடியைப்பிடித்தார்கள்
மாதுகுறத்தியவள் மலைக்குறத்திகூறுவாள்

குறத்தி புலப்புகிற குறம்.

(தின) கூடையைப்பிடித்திழுத்தீர்கூகூ கு
கொல்லப்போறானென கணவன்கூகூ கு
தாடையிலேசாம்பவாரீர்கூகூ கு
தலைமயிரைப்பிடித்திழுத்தீர்கூகூ கு
பின்முன்னேயென்னைமேலேகூகூ கு
கையைப்பிடித்திழுக்கவாரீர்கூகூ கு
நன்றிநடுவில்லையோகூகூ கு
நீங்கள் நாடாளும்ராசாக்கள்கூகூ கு
அண்ணர்பொலலார்நால்வருண்டுகூகூ கு
அறிந்தால்குறைவருமேகூகூ கு
மண்ணளந்தான் தன்மதியேகூகூ கு
மடியைப்பிடித்திழுக்கவாரீர்கூகூ கு
குண்ணெடுத்ததினமதியேகூகூ கு
கூடைதனைப்பரிக்கவாரீர்கூகூ கு
தருமரிட தன்மதியோகூகூ கு
தாடையிலேசாம்பவாரீர்கூகூ கு
வீமரிட தன்மதியோகூகூ கு
விழியால்மிரட்டுகிறீர்கூகூ கு
அருச்சுனனார் தன்மதியோகூகூ கு
அடிக்கவாரீர்பிடிக்கவாரீர்கூகூ கு
இரட்டையர்கள் தன்மதியோகூகூ கு
செட்டித்தள்ளுகிறீர்கூகூ கு
மிஞ்சிமிஞ்சியோடிவாரீர்கூகூ கு
மேல்விழுந்துதள்ளுகிறீர்கூகூ கு
ஆளன் குலைக்காரன் கண்டீர்கூகூ கு
அறிந்தால்குறைவருமேகூகூ கு
அதோவாரானென்கணவனகூகூ கு
அசல்நாட்டையோடிப்போங்கள்கூகூ கு
அதோவாரானென்கணவன்கூகூ கு
எங்கேயாளுலேடிப்போங்கள்கூகூ கு
அம்பலத்தாரேநீங்கள்சாட்சிகூகூ கு
நான்பண்ணினபாவமிதோகூகூ கு

பசங்களைமதிக்கிறீர்கள்கூகூ ௫
பறியாதேகூடைதனைகூகூ ௫

வேறு

பஞ்சவர்மேலாணையென்ன பயந்துநடுங்கினார்கள்
காளையறவானும் கட்டமுகனேதுசொல்வான்
தள்ளாதேகுறத்தியரைத தம்பியரேநில்லுமென்றான்
வடிமலைக்குறத்தி வார்த்தையொன்றநீர்கேளும்
அன்னையவள்கழுத்தி லாலித்தஆபரணம்
எப்படிக்குவாங்கிவந்தா யிளங்குறத்திசொல்லுமென்றான்
திருடியேவந்தாயோ செம்பொன்மணிப்பதக்கம்
கன்னமிட்டுக்கொண்டாயோ களவுசெய்துவந்தாயோ
மருமயக்கத்தாலே வாங்கியேவந்தாயோ
எப்படிவந்தாய் யிளங்குறத்திசொல்லுமென்றார்
வண்ணநடைகட்டுவச்சி வாய்திறந்தேதுசொல்வாள்
அனலிற்பிறந்தாட்கும் அல்லியிற்பிறந்தாட்கும்
இருவருக்குங்கையார்த்து பெற்றேனேயிப்பதக்கம்
உண்மைகுறிசொல்லி பெற்றேன்காணுத்தமனே
அப்படிப்பட்ட சமர்த்தியோநீகுறத்தி
ஆச்சியிடபொற்பதக்கம் ஆருக்குங்கொடுப்பதில்லை
ஆலைவாய்சொக்கரவ ரையரேவந்தாலும்
பிட்டுக்குமண்சுமந்த பித்தரேவந்தாலும்
நரியைபரியாக்கும் நாதரேவந்தாலும்
உரியில்வெண்ணைதிருடியுண்ட உலகளந்தார்வந்தாலும்
உரலோடுகட்டுண்ட மாயவனார்வந்தாலும்
ஆயிரங்கண்படைத்த தேவேந்திரர்வந்தாலும்
எழுதும்பிரமனும் யெமன்கூடவந்தாலும்
யெமனவர்வந்தாலும் எக்காலமானாலும்
வாங்காளொருநாளு மாணிக்கப்பொற்பதக்கம்
உனக்குக்கொடுத்தாளோ வுத்தமியாளென்தாயார்
அவள்பிறந்தவன்றே யழுத்தியசிராபரணம்
கூடப்பிறந்தது கொம்பனையாள்பொற்பதக்கம்
எப்படிவாங்கிவந்தா யெங்களுக்குசொல்லுமென்றார்
எங்கள் ஆச்சிக்குச்சொன்னகுறி யெங்களுக்குசொல்லடிநீ
இவ்வார்த்தைகேட்டா ளேதுசொல்வாள்கட்டுவச்சி
உங்கள்குணதிற்குக் குறிசொல்லவேணுமடா
கூடையைபற்றி யிழுக்கிறீரேகொற்றவரே
கூடையின்சேதமது கொடாமல்விடுவேனோ

பிள்ளைகளுக்குக் குறஞ்சொன்னது.

(தின)கூடையென்னுங்கூடைகண்டாய் கொந்தளப்பொன்கூடை
குமரேசர்வள்ளியர்க்கு குறிசொல்லுங்கூடை

சந்திரருஞ்சூரியருஞ் சந்தித்தக்கூடை
தவமுனிகள்ரிஷிகளெல்லாம் நிறைந்திருக்குங்கூடை
குறித்தாற்போலகுறியுறைக்கும் கூடையிதுகூடை
கோபாலயிலட்சமிக்கும் குறிகள்சொல்லுங்கூடை
ஆணியில்லாநல்வச்சிர மழுத்திறுக்குங்கூடை
பொற்களப்பெண்ணிட்டமன்னு கூடைதனையிழுத்தீர்
தயவுவந்ததுமேலே குறியுறைப்பேனோ—ா
என்குறவன்பொல்லாதவனெனைத்தேடிவருவான்
உங்களிடமாளிகைக்கு ளொதுங்கிடப்பீரே
அந்திபடுமவேளையாச்சு சந்தடிகள்வேண்டாம்
அரண்மனைக்குப்போங்களென்ற மிதவுரைத்தாள்குறத்தி

வேறு.

இவ்வார்த்தைதான்கேட்டு யேதுசொல்வான்நல்லரவன்
வாருமலைக்குறத்தி வார்த்தையொன்றநீர்கேளும்
ஆச்சிக்குசொன்ன குறியிலொன்றுயெங்களுக்கு
சொன்னுலேயல்லாது சுந்தரியேபோகவிடோம்
குறிசொன்னலல்லாது கொம்பனையேபோகவிடோம்
தருமாண்டையிப்போது தள்ளிக்கொண்டுபோவோமென்றார்
எட்டுநாள்சென்றாலு மிளங்கொடியேயுனைவிடோம்
இவ்வார்த்தைகேட்டுமவளேது சொல்வாள்கட்டுவச்சி
உங்களுக்குகுறிசொன்னு லேதுதரப்போறீர்கள்
தெய்வகுறத்தியென்று சிந்தையிலேயெண்ணுதே
வீண்குறிகள்சொல்லியே வெறுமையாய்ப்போவேனே
ஏற்றகுறியுறைத்தால் வுச்சிதங்கள் தாரோமடி
அல்லாதேயாமானல் அடங்கலும்பறிப்போமடி
பாலகர்வார்த்தைக்கு பார்த்தார்மிகமகிழ்ந்து
சந்தோஷமாகியே மைதயலருமேதுசொல்வாள்

குறம்.

(தின)குறத்திதனைவழிமறித்தீர் கூத்தாட்டக்கொண்டீர்
கொஞ்சமல்லவுங்களுக்குக் குரோகிதர்கேளீர்
பிரத்தியல்லகாணுனக்கு பேர்மிகுந்தவிசையன
பேர்கொண்டபூங்குறத்தி பேசாதேபோடா
கைபார்க்கவேணுமென்றால் கரமதைநீகாட்டாய்
காரியங்களுள்ளபடி வீரியமாயுறைப்பேன்
கைத்தலத்தைத்தான்பிடித்துக் கண்ணிலொற்றிக்கொள்வாள்
கண்மலரோபொன்மலரோ கைத்தலங்களென்பாள்
குமாரனிடகைத்தலத்தை கூடியின்மேலடித்து
கொச்சியம்மையைநினைத்துக் குலமார்பில்தைத்தாள்
மலையாலத்தஞ்சியே வந்துகுறிசொல்லும்

வள்ளிமலைநாயகியே யுள்ளகுறிசொல்லும்
வடவாசல்காக்கும்நல்ல மன்னுப்பிடாரி
மனையிடத்துதேவதையே வந்துகுறிசொல்லும்
மங்களமுதுகளா மடிச்சிலைகாரி
மகாபூசைவாங்கியுண்ணும் வனத்துகனிறரே
பிரியமுடன்குறிகளாக பத்திரமாய்காரும்
அலர்மேலுமங்கையம்மாள் அன்புகுறிசொல்லும்
இச்சையுள்ளதேவதைகள் எல்லோருமாக
கொச்சைக்குறத்தியிட கூடைதனிலமர்ந்து
குறிக்கோலைமுன்னடத்தி குறிகள்மிகவுரைக்க
குமாரரிடநெஞ்சமது மிகமகிழவேதான்
தெய்வங்களைநினைத்தாலே சிலிர்த்துக்கொள்ளுதுடம்பு
திரேகமெல்லாமயிர்க்குச் சிடுகுதடாதம்பி
வாடைமணம்வீசுதடா மயில்வந்தாப்போல
மயக்குதடாஎன்னுடம்பு சன்னதங்கொண்டாற்போல்
அரலவிருதுடிக்குதடா குறிகளுரைப்பேன்கேளும்
அருச்சுனனோடைவருக்கும புத்திரரும்நீரே
அல்லியரசாணியிட பிள்ளைகளும்நீரே
தனஞ்செயற்கும்இரட்டையற்கும் புத்திரருநீரே
மனைவில்வந்தபெண்கொடிக்கும் மைந்தரும்நீரே
மூன்னடந்தகாரியங்க ளொன்றுரைப்பேன்கேளும்
மாயவனாருகில் துரியோதிரனும்வந்து
அபிமருக்குயென்றிந்த ஆயன்மகளாரை
அன்பானலக்குணர்க்குச் சுந்தரியைக்கேட்டு
எம்பெருமாள்மகளாரைப் பரியமதுபொருந்த
எழுநூறுவெட்டகம்பொன் யீந்தானேதுரியன்
அந்தப்பொன்னையவர்கள் பதனவேதூற்றி
அளவில்லாத்திரவியத்தை அவரெடுத்துக்கொண்டார்
உபாயமாமுகூர்த்தமிட்டு உலகளந்தமாயன்
இன்றெட்டாநாளையிலே இசைந்துவாச்சொல்லி
இயல்வீமராசனண்டைத் தூதுநடந்தாரே
பார்ப்பானைப்போல்வந்து அபிமனுடன்சொல்லி
படைபொருந்திபணங்கள்செய்ய வகைகள்நினைத்தாரே
அரவானுந்தொந்திசெட்டி கடோற்கஜனபின்னவன்
அரசன்திரியோகிரனர் அவர்தளதில்புகுந்தார்
ஒருகோடியில்திரியோதிரன் சபையில்மன்னர்மடிய
புரவிசாந்திரர்மடிய ரதமொடியப்பொடியாய்
சிலைமுறிபவரைநடுங்க திரியோதிரனுடனே
வந்துன்னைவகைகள்செய்து சக்கிரகிரியுருள
துரிதமுடன்விற்றிருக்குஞ் சுந்தரியையுருள
குறிகளதுபொய்யடா கொற்றவனேயென்று

கொச்சியம்மையாளையென்று கூடையின்மேலடித்தாள்
பொய்யோடாவென்குறிகள் மெய்யோவிருப்புகல்வீர்
புண்ணியனே அல்லியிட புத்திரனேயென்றாள்
ளறவனைத்தான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போல இடதுவளநகைத்தாள்

பிள்ளைகள் குறத்திசொன்ன குறிசகுச் சந்தோஷித்துத்
தாங்களணிந்திருந்த ஆபரணத்தைக் கொடுத்தது.

வேறு

வாடிமயிலக்குறத்தி வண்ணநடைகட்டுவச்சி
ஆச்சியாத்தனூடைய ஆபரணமானதெல்லாம்
திருடிவந்தாயென்றுசொல்லி திட்டினோம்வைதோமே
தெய்வக்குறத்தியம்மா தெளிவானகட்டுவச்சி
கன்னமிட்டாயென்றுசொல்லி கட்டுமெனறோம்வெட்டுமென்றோம்
கண்டதுகண்டதுபோல் கட்டுவச்சிசெ லவிட்டாய்
பார்த்ததுபார்த்ததுபோல் பாங்காய்குறியுரைத்தாய்
அறியாமற்செய்தகுற்றம் ஆச்சியம்மைபொறுக்க
தெரியாமற்செய்தகுற்றம் சிந்தையிலேவையாதே
என்றுபாதம்பணிந்தார்கள் பாலர்சிறுவரெல்லாம்
அவரவர்கள்விட்டிருந்த வாபரணமுள்ளதெல்லாம்
ஆரஞ்சரப்பளியும் அழகுமுத்துத்தாழ்வடமும்
முத்தினகடுக்கனும் முருகுடனேமோதிரமும்
கழற்றியேமுன்னேவைத்துக் காலில்விழுந்தார்கள்
எடுத்துப்போமாச்சியென்று எல்லாருந்தெண்டனிட்டார்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
வாருங்களென்மகனே வார்த்தையொன்றுநீர்கேளும்
நீங்கள்திட்டினதும் வைத்ததுவும் தெத்திவில்லாலெய்ததுவும்
அத்தனையுமெத்தனுக்கு அதிபிரியங்காணுதடா
பார்த்தவன்துணையாலே படைமன்னநீங்களெல்லாம்
வாய்த்தான்மகனாகணும் என்றாள்மலைக்குறத்தி
ஆபரணந்தனையெடுத்து அனைவோர்க்குந்தான்கொடுத்து
பதியோடிருங்களென்று பாலகரேபோங்களென்று
அந்தத்தெருகடந்து அப்பாலேபோகலுற்றாள்

குறத்திவரும்போது பிராமணன் இச்சித்தது.

மற்றொருவீதியிலே வாரான்மலைக்குறத்தி
பிராமணர்வீதியிலே போகலுற்றாள்கட்டுவச்சி
மாடப்புறாப்போலே மயில்போலேதானடந்தாள்
அந்தப்பிராமணர்கள் அவளழகைக்கண்டார்கள்
வந்தப்பிராமணர்கள்மெல்லியளைக்கண்டார்கள்
மையல்பெரிதாகிமயங்கியவரோடிவந்தார்

சிவத்தைமறந்தார்கள் சிவத்தொழிலைத்தான்மறந்தார்
பூசைத்தொழில்மறந்தார் புட்பமெடுக்கமறந்தார்
தவத்தைமறந்தார்கள் றவத்தொழிலைத்தான்மறந்தார்
ஞானம்மறந்தார்கள் நற்பூசையும்மறந்தார்
கிழங்கள்பழங்களெல்லாம் கிட்டிவந்துயல்திறந்தார்
குடுமிவிடுத்தவர்கள் கொப்பெனவேவோடிவந்தார்
கண்ணுக்குநதெண்டமென்பார் காலுக்கடிமையென்பார்
வாடிமலைக்குறத்தி மாளிகைக்குகொண்டுபோறோம்
மெத்தையின்மேல்வைக்கிறோம் வேணபணிபூட்டுகிறோம்
ஆபரணந்தரித்து அலங்கரித்துப்பார்த்திருப்போம்
பெண்டுகளுள்ளவரைப் பேணித்தொழிலைசெய்யவைப்போம்
ஆணாய்ப்பிறந்தவர்கள் அடிமைதொழில்செய்வோம்
ஊழியங்களைசெய்திடுவோம் உத்தமியேவாசீரா
கண்ணுக்குத்தெண்டனென்பார் காலுக்கடிமையென்பார்
வாடிக்குறத்தியென்பார் மையல்பெரிதாகுமென்பார்
காமக்கணையாலே கணைதாங்கிப்போகுதென்பார்
மாரனவனெய்தகணை மார்பைப்பிளக்குதென்பார்
மோசனசிங்கமது மூகத்தையழிக்குதென்பார்
ஆறுருகுபாணமது மாறுருகிப்போகுதென்பார்
அழைநாழியெங்களுடன் அணைந்திருந்துபோடியென்பார்
சத்திஞர்மாதவைச் சூழ்ந்தார்குறத்தியரை
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தங்கேதுசொல்வாள்

குறத்தி பிராமணனுக்குச் சொல்லுங்குறம்

தின-கொச்சிமலைகுடகுமலை குடியிருக்குங்குறத்தி
கொக்குவக்காவுகளுங் கூட்டிகறிசமைப்போம்
பச்சமலைபவழமலை குடியிருக்குங்குறத்தி
பன்றிகளுமானுகளுங் கறியாக்கித்தின்போம்
காக்காய்தின்போம்கழுகுதின்போம் கறட்டோணுஞ்சுடுவோம்
கள்ளுவைத்தால்குடங்குடிப்போம் கானகத்துசாதி
காட்டானைசிங்கங்களும் கரடிபுலிதின்போம்
காட்டிலேகுடியிருப்போம் கள்ளக்குறச்சாதி
எச்சானசாதியல்ல எங்கள்குலசாதி
ஆமைதின்பேய்க்கீரித்தின்போம் அணிலடித்துச்சுடுவோம்
பூனைதுத்தின்றிருந்திடுவோம் பனக்குறவாகாக்கள்
நரையுநரியுமரணையும வெள்ளெலியலிதின்போம்
குறச்சாதியானதெல்லாம் அரசாதிகேண்டாய்
கொச்சைகுறதாம்மைது குமட்டலேயோவுனக்கு
என்னை-கூடியணைபமனம்தானுதேவேகியரே
என்றவளைத்தான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதன்னைப்போல இடைதுவளநகைத்தாள்

வேறு.

வாருங்கள்பிராமணரே வார்த்தையொன்றுநீர்கேளும்
என்னைவைத்துயாதரிக்கும் வேதியருமானுமே
சிற்றிடைமார்வீதியிது தெருக்களெல்லாந்திரிந்து
கொம்பனைமார்வீதியெல்லாங் குறிகள்சொல்லிவாரேனையா
பாடிவருகிறேன பத்தினிமார்வீதியெல்லாம்
நாளைவருகிறேன் நாயகமேநம்புமென்றாள்
அத்தெருவுவீதிவிட்டு அப்பாலேபோகலுற்றாள்
எக்கத்தாற்போலே யிருந்தார்கள்பிராமணர்கள்
மையல்பெரிதாகி மதிமயங்கிநின்றுவிட்டார்
அப்போகுறத்தியவள் அலங்காரகட்டுவச்சி
வீதியும்வீதி தெருவுப்பலகடந்து

குறத்தி மின்னொளிவீதி வந்தது.

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையாள்வீதியிலே
பாடிவருகிறாள் பத்தினியாள்வீதியிலே
கூறிவருகிறாள் குறமாதரைப்போல
உறிகொள்வீர்காம்புகொள்வீர் கோரோசனைவுண்டைகொள்வீர்
குழந்தைகள்விளையாடக் கிலுகிலுப்பைக்கொள்வீரே
பச்சைமணிகொள்வீரோ புருஞ்சிலங்கைகொள்வீரோ
நரைபோவிளமைவர நல்லமருந்துண்டைகொள்வீர்
வாழாதபெண்களுக்கு வாழ்மருந்துண்டைகொள்வீர்
சோராதபெண்களுக்கு சேரமருந்துண்டைகொள்வீர்
கூத்திகளுக்காக மருந்துகொள்வீர்கொற்றவரே
வேசிக்கிடுமருந்து கொள்வீரோவேந்தர்களே
கைபார்ப்பேன்குறியுரைப்பேன் காரியங்களுள்ளபடி
கூடைமுறங்கட்டுவேன் குறிகள்மிகவுரைப்பேன்
பச்சைபொட்டுகுத்தலையோ பைங்கொடிமாதர்களே
என்று-பாடிவருகிறாள பத்தினிமார்வீதியெல்லாம்
விளங்கியசீர்மாதவத்து மின்னிடைவாசலிலே
காத்திருக்குந்தோழிமார் கன்னியர்கள்கேட்டுவிட்டார்
ஆய்ச்சி-வாழ்ந்திருக்கிறாள பாதுகெடுநாளாக
கூடாதிருக்கிறாள் கோதுகெடுநாளாக
அவள்-மன்னன்வருங்குறியைச் சொல்வாள்மலைக்குறத்தி
பிச்சைகுறிபொய்யாது மெய்யாகுமாச்சியரே
நாமிட ஆச்சியர்க்குச்சொல்வோ மென்று ஆரணங்குமோடிவந்தாள்
விளங்கியசீர்மாதவத்து மின்னிடைக்குகெண்டனிட்டார்
ஆச்சியரேகேளீர் அடியேன்வாய்விண்ணப்பம்
காணுவதிசயங்கள் கண்டேனுன்வீதியிலே
தெய்வக்குறத்தியவள் தெளிவானகட்டுவச்சி

மின்னற்பிறந்தவளோ மேகவர்ணமச்சினியே
கன்னிதிருப்பாற்கடலில் வந்துதித்தகருவிளமோ
எழுதவொண்ணாவடிவழகி இவ்வீதிபாடிவந்தாள்
கைபார்த்துகுறிசொல்வாள் கட்டுவச்சிராசகியாள்
மன்னன்வருங்குறியைச் சொல்வாள்மலைக்குறத்தி
பிச்சைக்குறத்திகுறி பொய்யாதுமெய்யாகும
அகத்தினிலுவளாக அழைக்கத்திருவுளமோ
இவ்வார்த்தைதான்கேட்டு வேகசொல்வாள்மின்னிடையாள்
புதுமைபுதுமையிது பொற்கொடியேயுன்பேச்சு
நானும்மனுஷியோ நாட்டிலேயுங்கூட்டுறமோ
எனமனதில்குறைகளெல்லா வடிமயங்கிறதேன்
துக்கந்துயரமென்ன சிறையிருக்குந்தன்மையென்ன
நன்னாலுபேரைப்போல் நலமாகவாழ்கி றனே
அத்தனையும்போட்டுவைத்துக் கைபார்த்துக்கொண்டாலே
நகையாரோகம்மையிந்த நாட்டிலுள்ளபெண்களெல்லாம்
வாழ்கின்றபெண்களெல்லாம் மாதேதகையாமோ
மனங்களித்தபெண்களெல்லா தாழ்வுகளைச்சொல்வாமோ
எழுத்துப்படியுனக்கு மிட்டுமிருந்தால்
கட்டுவச்சியென்னசெய்வாள் காரிழையேபோடியென்றாள்
தாய் பாலவளர்த்தெடுத்த தாதியவள்கூறுவாள்
இப்புவியில்வந்தகொரு இளங்குறத்திதானல்ல
மந்திரமுந்தந்திரமும் வண்ணமருந்துண்டைகளும்
இந்திரஜாலவித்தையெல்லாமறிந்தாள்காண்
அவள்வந்துகைப்பார்த்தால் மனதில்குறைதீரும்
பார்த்தர்வரும்படி பகரவல்லாள்பைங்கிளியாள்
வாள்விசயனிங்கேதான் வருங்குறியைச்சொல்லவல்லாள்
ஆச்சிகுறத்தியரை அழைக்கசெலவருளும்

## மின்னொளியாள் வீட்டுக்குக் குறத்தி வந்தது.

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுக்கூறுவாள்
வாழாதார்வாசலுக்கு வருவாளோகட்டுவச்சி
அதனாலென்னையுமென்று அன்னநடைமாது
சிறைச்சாலைமண்டபத்தே தேசமின்னொளியாள் வீட்டெழுந்து
அலங்காரமண்டபத்தி லாரணங்குவந்தமர்ந்தாள்
அப்போதாதிமா ராயணைக்கும்போடிவந்து
வாடிமலைக்குறத்திபெண்கள் மாதுவையழைக்கிறாள்
எங்கள்-ஆச்சியர்க்குக்கைபார்க்க ஆணைதேவாருமென்றாள்
தாதியழைக்கையிலே சந்தோஷமாயவளும்
வந்தேன்வந்தேனென்றுசொல்லி மலைக்குறத்தியுள்ளுழைந்தாள்
இந்திரக்கட்டுவச்சியேத்தமுள்ளபூங்குறத்தி

மந்திரக்கட்டுவச்சி மலையாளப்பூங்குறத்தி
வண்ணக்குறத்தியவள் மலைக்குறத்தியுள் நுழைந்தான்
ஓடமலர்க்கண்ணாளும் உள்வாசலபோய் நுழைந்தாள்
அல்லியிற்பிறந்தாளும் அலையிற்பிறந்தாளும்
இருவரானுப்பிவைத்த இளங்கொடித்தாதியரும்
மின்னிடையாள் வாசலுக்கு விசையனார் போனபின்பு
அன்னநடைமாதர் அவர் திரும்பியோடிவந்தார்
அல்லியர்க்குந் திரௌபதைக்கும் ஆரணங்குதெண்டனிட்டு
பார்த்தன்பிறகாகப் போனோமே மயங்கொடியே
கண்டமுடிமன்னர் கனத்தமயலானார்
தெண்டனிட்டுப்பார்ப்பாரும் சேவித்து நிற்பாரும்
சுபத்திரையாள் வாசலிலே தாதியழைத்ததுவும்
பள்ளிக்கூடத்துப் பசங்களிழுத்ததுவும்
பண்ணுதும்பண்ணியவர் பரமழித்ததுவும்
கொவ்வைக்குறத்தியைப்போல் குறிசொல்லுரைத்ததுவும்
மின்னிடையாள் வாசலுக்கு விசையனார்போனதுவும்
ஒன்றுமொழியாமல் உரைத்தார்கள் தாதியர்கள்
இருவருங்கேட்டார்கள் இன்பங்களைப்பூண்டு
சந்தோஷமானார்கள் சரீரமதுபூரித்தார்
அன்னநடைமின்னிடைக்கு அனந்தஞ்சிறைதீர
எத்தனைநாட்சென்றது இளங்கொடிமின்னிடைக்கு
இத்தனைநாளுமிருந்தகுறைதீர
மன்னவனைநன்றாய் மனமுருகத்தனையவல்லாள்
கூடியணைந்திடுவாள் குறைகளைத்தீர்ந்திடுவாள்
என்று-குங்குமத்திண்டோள் குலுங்கநகைத்து
சிவிகையின்மீதேறி தேன்மொழிமாரபோகலுற்றார்
மையெழுதாக்கண்ணனும் மலர்ச்சொருகாக்கேசமும்
பாக்குதின்னாவாயும் பத்தினியாள்தன்முகமும்
வெற்றிலைதின்னாள் விரும்பாய்விடாய்முகமும்
மஞ்சளணுகாத வடிவுடையாள்மார்பழகும்
என்தேவியாயிருந்தாயிவள் சிறையாவானேன்
இவள்-பொன்னானமேனியது பழுதிபடக்காரணமேன்
தங்கத்திருமேனி தழும்புபடக்காரணமேன்
இவள்-வாய்மதத்தினாலேயல்லோ வாழ்விழந்தாள்மாதுகன்னி
என்ற-பொங்காரமெல்லாம் அடக்கியொருபுறமாய்
சிங்காரக்கட்டுவச்சி போலேசிரித்துவந்தாள்
மங்கையரைப்பார்த்து உரைப்பாள்மலைக்குறத்தி

மின்னொளியைப்பார்த்துச்சொல்லுங்குறம்.-

(திரு) திருத்தமதிமுகத்தாளே மின்னொளியேகேளும்
உன்-செயபொன்மணிமாளிகைக்கு செயலாகவரச்சே
தலைப்புறத்தில்தெவுளிநின்று சொல்லுதடிபெண்ணே

மலைக்குறியான்வாழ்விசையன் வருவாண்டிபெண்ணே
மனைக்குறியான்வாழ்விசையன் வருவாரேயானால்
எனக்குநல்லகறிசோறு மிடுவாயோடிபெண்ணே
ஆக்கினைச்சோறுகறி பாக்குமெனக்கருள்வாய்
அருகட்டுச்செக்கூமுழம் பழந்தணியுந்தருவாய்
அருளுஞ்செல்வமுண்டுவுந்த னுளன்வரப்போமுன்
அருமுகவன்திருவருளா லாளன்வருவாண்டி
பேருமுண்டுபெருமையுண்டு பெண்மயிலேகேளாய்
பெருவயிரன்திருவருளால் புருஷன்வருவாண்டி
இந்திரன்குமாரனவன் சந்திரமுகத்தாண்டி
இளவேனரமவரப்போமுன் மிளமயிலேகேளும்
நல்மருந்துகுளிசமிது நாடன்முடிபெண்ணே
கைமருந்துசவும்மெத்த கையுமடிபெண்ணே
விற்பொருதம்விழியாளே மின்னொளியேகேளாய்
அக்குமணிகொக்குமணி சொல்வயடிபெண்ணே
கந்தருக்கு வள்ளியர்க்கு முகந்தகுறிசொல்ல
எத்தகுலமோழவன காட்டுக்குறத்திலைப்போல்
இச்சைகொள்ளவகையறியேன் ஈஸ்வரனறிய
வக்காவுடகொக்கவும் நின்றிறவளலல
வபபுபசிமனைதோறும் போயவருநல்ல
கைபார்ப்பேன்கண்டுரைப்பேன கடுகிவனம்போறேன்
கறிசோறுதுகிலாடை காக்கிவம்பர்லே
மெய்குறிகளனைத்துரைப்பேன் மின்னிடையேகேளாய்
கைக்குழந்தைவச்சிக்கெண்ணே குதகுளிவார்ப்பார்
இக்காட்டில்வாழுகிற குறத்தியல்லபெண்ணே
எப்போதமிந்திமறகும் கைபார்க்குங்குறத்தி
இந்நாடுபெண்களுக்குப் பொன்னுடுண்டாய்
என்னுடனே உன்னுடனே பென்றவளுரைத்தாள்
அல்லியர்க்குந்துரௌபதைக்கு மலபுருறிசொன்னேன்
அவர்களெச்சிபெத்தனுக்கு ஆபரணங்கொடுத்தார்
உச்சிதமய்குரியுரைத்தல மெச்சிவரெனக்கு
அவாபிறந்தநாளையிலே அழுத்தியகோர்பதக்கம்
ஆபரணந்தான்கொடுத்து அனுப்பினார்பெண்ணே
மின்னிடையாளெந்தனுக்கு மிகவுங்கதியுரைத்து
மிகவுமவர்குறத்தியென்று மிகவணக்குமுரைத்தார்
நன்றாகயுன்மனைக்கு நான்வரும்போது
நலமுகூர்த்தஞ்சொலகிறது எண்ணத்தொலையாது
வாசல்பல்லிபளபளென்று நேசத்துடன்சொல்ல
வருவாண்டியுன்கணவன் வள்ளியம்மையருளால்
குவிமுலையாளேயென் குறிகளும்பொய்யாது
கொச்சியம்மையாணையென்று கூடையின்மேலடித்தாள்

### வேறு.

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
ஏதடிகட்டுவச்சி யெந்தநாடுந்தனது
எந்தவூருங்களது யெனக்கறியச்சொல்லுமென்றாள்

### மலைக்குறத்தி தன்வரலாறுசொன்ன குறம்.

தினை-எந்தனிட திருநாடு கேட்கிறையே பெண்ணே
ஏதசமுள்ளாயிந்தி ஞாரமுமெந்தநாடு
கொங்குமலையாளமது யெங்களிடநாடு
வங்காளம்சிங்காளம் மராட்டியமெங்கள்நாடு
வள்ளிசையன்பெயர்கொண்ட குறத்திநான்பெண்ணே
எங்களிடதிருநாடு கேட்டையோபெண்ணே
மேலவைக்கு ஊமைசிக்கம் அதிசமுள்ளபெண்ணே
சந்திரர்கள்சூரியர்க ளுதிக்குமெந்தநாடு
தானைகருப்பம்புரியுந் தவமுள்ளநாடு
அன்னக்கொடிநின்றசையும் மெந்தனிடநாடு
அதிசயமாய்வாழ்கிறதும் யெந்தனிடநாடு
அதில்-துரும்பசையத்தேன்சொரியு மெந்தனிடநாடு
கரும்புவிளாசோலைசூழ் மெந்தனிடநாடு
விரும்புமுல்லைமணஞ்சூ ழெந்தனிடநாடு
வேலருடன்வள்ளியம்மை வாழுமெந்தநாடு
பச்சைமலைபவழமலை யெந்தனிடநாடு
பனிகாலமானதே பழங்கூறிவருவோம்
கொச்சிமலைகுடகுமலை யெந்தனிடநாடு
குளிர்காலமானதே குறப்பாடிவருவோம்
பஞ்சவர்களாளுவது யெந்தனிடநாடு
பார்த்தனென்றும்பேர்கொண்ட குறத்திநான்பெண்ணே
கச்சணியுமுலையாளே கனகாங்கியாளே
கைத்தலத்தைநீர்காட்டாய் கனத்தகுறிசொல்ல
என்றவளைத்தான்பார்த்து மீனைவிழியாள்மிரட்டி
இளங்குறத்திதனைப்போல மிடைதவளநகைத்தாள்

### வேறு

விளங்கியசீர்மாதவந்து மின்னிடையாளேதுசொல்வாள்
திருமாலவர்பொருட்டால் திருமாதோபூமாதோ
நகரிசோதனைக்காக வந்தாறமுதலோ
கட்டுவச்சிவீற்றிருக்க வட்டமணையிடுங்கள்
பொற்கொடியாள்வீற்றிருக்கப் பூம்பலகையோடு
வட்டமணைபோட்டார் மணித்தடுக்குதான்போட்டார்
வாடிமலைக்குறத்தி வட்டமணைமேலே
வளநாடிகைகாட்ட வனக்குறத்திஉள்மகிழ்ந்தாள்

இட்டமுகூர்த்தமது லட்சமென்றுசொல்லி
இட்டமணைமேலே வந்திருந்தாள்பூங்குறத்தி
ஒருகால்மடித்தாளே ஒருகால்புறத்தணிந்தாள்
கூடைபொருபக்கம்வைத்து கொம்பனையாள்தானிருந்தாள்
கூறுவாள்கொப்பினது மரத்தின்கிளிபோலே

## குறத்திமின்னொளிக்குக் கைபார்க்குங்குறம்.

தின-கனத்தகொருஸ்தனத்தாளே கைத்தலத்தைக்காட்டாய்
உன்கணவனிப்போவருங் குறியைக்கண்டுநான்சொல்ல
பங்கபஞ்சிர்கைத்தலத்தைப் பார்த்தனுமேபிடித்து
பாவையிடமுகம்நோக்கிப் பல ரனுஞ்சிரித்தாள்
இடக்கரத்தைதான்பிடித்து இளங்கொடியேயென்பாள்
இளங்கொடியாள்கைத்தலத்தைக் கண்ணிலொத்திக்கொள்வாள்
கண்மலரோபொன்மலரோ கைத்தலங்களென்பாள்
மங்கிலியம்வரம்பெறுவாய் மைந்தர்களைப்பெறுவாய்
மனமகிழகணவனிப்போ வருவாணடிபெண்ணே
உண்மையெந்தன்குறிகளது வுண்மையிதுபெண்ணே
வண்மையுள்ளசோழனிட மனுநீதியாலே
மதியாமலரசாளும் மன்னவனமகளாரே
வாள்விசையன்மேலாசை தோணுதடிவுனக்கு
கூறுனவிழியாளே கொம்பனையேகேளாய்
கூடுவதஆசைமனந் தோணுதடிவுனக்கு
பார்த்தேண்டிவுன்கையி லட்சணங்களிப்போ
பவனிமுழுதாளுகிற சோழன்மகளாரே
தகதகெனசைவளையல்கை பிடிக்கநானும்
தயவுள்ளபுருஷனிப்போ வருவாண்டிபெண்ணே
மயலாகிமனதுருகி வடிவுள்ளபெண்ணே
நீர்-செயலாகிசெய்தகுறை சொல்லுகிறேன்கேளாய்
சங்கமரைப்பூசைசெய்யும் வேளைவந்தாரென்று
தனஞ்செயனார்வருகிறதைத் தள்ளிவிட்டாய்பெண்ணே
ஈஸ்வரனைப்பூசைசெய்யும் வேளைவந்தாரென்று
எண்ணுமல்விஜயனைத்தான் தள்ளிவிட்டாய்பெண்ணே
அன்றுமுதல்கெடுநாளாய் வாராதவிசையன்
அறுமுகவன்திருவருளால் வருவானேடிபெண்ணே
என்றவளைத்தான்பார்த்து விழியாலேவிரட்டி
இளங்குறத்திதனைப்போல இடைதவளநகைத்தாள்
வேறு-விளங்கியசிர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
முத்தணிந்தபல்லோன் முறுக்கணிந்தசெவ்வாயோன்
உநதிசுழிபழகன் உரோமத்தின்பேரழகன்
கூறியமூக்கழகன் குளிர்ந்தமுகத்தழகன்
தொந்தமிடுஆலிலைபோல் துய்யவயிரழகும்
நடையும்நடையழகன் நடைக்கிசைந்தஇடையழகன்

காய்க்கும்பிராயமடி கன்னிகட்டுங்காலமடி
பூக்கும்பிராயமடி பிஞ்சுவிடுங்காலமடி
சொஞ்சவயதல்லவோ கொழுந்தெல்லாம்பிஞ்சல்லவோ
சுவரிலெழுதலாஞ் சித்திரம்போல்பார்க்கலாம்
படத்திலெழுதலாம் பதுமைபோல்பார்க்கலாம்
இத்தனையழகான இளங்குறத்திகட்டுவச்சி
சித்திராதிபோலே தெருவீதிவந்தாயே
கொண்டகுறவனுனைக் குறிசொல்லவிட்டானே
மதிகெட்டுவிட்டானே மங்கையரேயுன்கணவன்
விட்டுப்பிரிந்தானே வெறியனேயுன்கணவன
கண்டால்விடுவாறோ காண்டீபங்கொண்டவரும்
அடங்காதழகையெல்லாம் கண்டாலழையாறோ
மானேயுனைக்கண்டால் மற்றொருதேவியரே
மற்றுமொருதேவியரை நத்தியேபோவாறோ
தேன்மொழிமாதர்களைத் திருஷ்டித்தப்பாராயோ
என்-வாணுளைவாக்குலைக்கு வந்தாய்மலைக்குறத்தி
என்றதுசொல்லி வுரைத்தாளிளங்கொடியாள்
மலைக்குயிலாள் மலைக்குறத்திகூறவாள்
குறம்-தின-எந்தனிடகுறவளமதி செட்டவனேயென்றாய்
எப்படிஉனக்குகுறி சொல்வேண்டிநன்றாய்
எங்களிடசாதிகளி லேர்வையிதுதாண்டி
எச்சானசாதியல்லோ எங்கள்குறச்சாதி
சந்திரனொடொத்ததொரு திருமுகத்திலழகன்
தாளம்போலொத்ததொரு தவளப்பூவழகன்
திருகண்கலொளியழகன் செங்கனிவாய்சிகப்பன
இத்தனைக்குமழகான இளங்கொடியேயுன்னை
இதுநெடுநாளுன்கணவன் ஏன்பிரிந்தான்சொல்வாய்
எச்சானசாதியல்லோ எங்கள்குறச்சாதி
இளங்கொடியேயுன்கணவன் யேனபிரிந்தாய்சொல்வாய்
உங்களிடகுலந்தனிலே யேர்வையிதுதானே
உன்னைப்போல்வாழாதா ருலகத்திலுமுண்டோ
இக்காலஞ்சிறையிருக்க மிக்கவரைதன்னில்
இளங்கொடியேவாழாம லிருந்தென்னசொல்வாய்
எங்களிடகுறக்குலத்தி லேர்வையல்லகண்டாய்
இசனுமேலபழுதுமில்லை கைபார்க்கநீவா
பங்கயஞ்சீர்முகத்தாளே கைதாராயென்று
பைங்கிளியாள்கைத்தலத்தைக் கண்ணிலொத்திக்கொள்வாள்
அங்கயஞ்சீர்கைத்தலத்தைக் கண்ணுலொத்திக்கொள்வாள்
அவனிமுழுதாளுகிற சோழன்மகளாரே
மங்கிலியமவரம்பெறுவாய் மைந்தர்களைப்பெறுவாய்
என்றவனைத்தான்பார்த்து விழியாலேமிரட்டி

இளங்குறத்திதனைப்போலே இயம்பேவள்சிரித்தாள்
வேறு-விளங்கியசீர்மாதவத்து மின்னிடையாளேதுசொல்வாள்
சிறையிருக்தோமானாலும் தினம்வாழ்க்தோமானாலும்
வாசற்படியகலோம் மற்றோர்மனைபுக்கோம்
வீதிதனிலேதிரியோம் வேல்புருவங்கண்ணாளே
நீ-அடங்காதமுருமாய ஆசைபசுங்கிளியே
வேசையர்கள்போலாக வீதிப்புறப்பட்டாய்
கண்டால்விடுவாரோ காண்டீபங்கொண்டவரும்
பார்த்தால்விடுவாரோ பார்த்தன்வடிவுடையோன்.
பாலேக்குறத்தி மலேகுறத்தியேதுசெய்வாள்
குறம்-தின-விஜையனார்கண்டாலே விட்டுவிடானென்றாய்
மின்னிடைநீயானாலே நாவெழுக்துசொன்னாய்
சிலேவிசையன் நீதிமிகு நெறிமுறைதவறான்
திக்குஜெயங்கொண்டவனார் சேவகனார்தமக்கு
மலேபோலுக்தெய்வகன்னி ஊர்வசியாள்ரம்பை
மலர்மாதுபோலேவடி வுடையகுணமாது
மயல்கொண்டுஊர்வசியாள் மயங்கியேதான்விழுந்தாள்
மகிழ்பார்த்தன்மாதாவே போமென்றுவிட்டான
அவன்வடிக்கொப்பான அறிவையர்களுண்டோ
ஆனாலுமருச்சுனனார் அவர்நீதிதவரார்
தன்தாரமல்லாமல் பிராதாரப்விருப்பார்
குலவரையன்மகளேயுன் மதத்தாலேநீயும்
கூசாமலபபென்று ஊழவைத்தாயவரை
நிலமையோடுநீயவரை வம்பனென்றுகுறிக்க
நிஷ்டூரப்பாவிகண்டாய் நீலிகண்டாய்நீயும்
கணவனைவேம்பனென்ப ருண்டோடியிவ்வுலகில்
கரியாமல்மைத்துனனா ரென்றுமறியாரே
சின்னமலர்குழலாளே மின்னொளியேகேளும்
செம்பொனதுமாளிகைக்குச் செயலாகவரச்சே
வலப்புறத்தில்கெவுளிநின்று சொல்லிற்றடிபெண்ணே
மனைக்குறியான்வாள்விசையன் வரப்போறான்பெண்ணே
தங்கத்திருமார்புதனில் ஆபரணமழுந்தி
சரசமுடனுனையணைப வருவாண்டிபெண்ணே
எந்தமுள்ளவிஜயனாரிக்கோவில்வந்தால்
எனக்குநல்லகரிசோறு இடுவாயோடிபெண்ணே
என்றவனைத்தான்பார்த்து விழிபாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநகைத்தால்
மின்னொளியால்-அருச்சுனன்செய்தகுற்றங்ஙத
குறத்திக்குச்சொன்னது வேறு
விளங்கியசீர்மாதவத்த மின்னிடையுங்கூறுவாள்
கொன்றைக்குறத்தியபே கொம்பனையேநீகேளும்

நான்-வம்பென்றசொல்லுகளும் மிகவும்பெரிதாச்சே
அவர்-விம்புகளுஞ்சேஷ்டைகளும் இங்கொருவர்கண்டிலேயே
நான்-நித்தஞ்சிவனையெண்ணி நீதியுடன்பூசைசெய்ய
ஒற்றையொருநாளி லுப்பதஞ்சீர்மண்டபத்தில்
சிவனை நினைந்துநான் சிவபூசைசெய்கையிலே
அரனைநினைந்துநான் குருபூசைசெய்கையிலே
கண்ணிரண்டுமூடியே கையிரண்டுமேந்திக்கொண்டு
சிந்தையில்நானினைத்து சிவனைநிலைநிறுத்தி
பூசைசெய்யும்வேளையிலே போர்விஜையர்வந்துவிட்டார்
அவ்வளவில்பார்த்தா அவர்முடிகியோடிவந்து
வேளையிதுகூடுகைக்கு மின்னிடையேயென்பதுவும்
நாளைவருமோயிளமை நாயகியேயென்பதுவும்
கண்ணைவிழியாயோ கட்டழகியென்பதுவும்
ஒன்றாகப்புல்கி யுறவணைவோமென்பதுவும்
சக்கட்டம்பண்ணுறது சற்றேநகைக்கிறதும்
கைகொட்டியாடி நகைத்தாண்டிகாவலனும்
கோபித்துகண்சிவந்து கொற்றவனைப்பார்த்துவிட்டேன்
சிறியகோபமதாய் விஜையனைப்பார்த்துவிட்டேன்
அவர்-பல்லழகும்பாவனையும் பார்த்துமயங்கிவிட்டேன்
மீசைமுறுக்கழகும் விழியில்கருப்பழகும்
கச்சுகட்டுவுள்மருங்கும் கத்திச்சுறுப்பழகும்
வில்லழகுக்கண்டுநான் விழித்துக்கொடுத்தேண்டி
சுவனைமறந்தேன் சிவபூசைநான் மறந்தேன்
அறனைமறந்தேன் அரிபூஜைநான்மறந்தேன்
வழிபடுமைந்தெழுத்தை மாதேமறந்துவிட்டேன்
செபிக்கும்செபமறந்தேன் சிந்தையில்மெய்மறந்தேன்
தேன்மொழிமாதேநான் சிவனைமறந்துவிட்டேன்
ஆவதால்வம்பனென்றும் உரைத்தேன்விருதோசை
மின்னிடைக்கும்வேண்டாத வம்பனென்றவூநிவைத்தேன்
அன்னமேகட்டுவச்சி ஆர்மேலேநோமடி
என்னைப்போல்பெண்பிறந்தார் யிவ்வார்த்தைசொல்லடி நீ
எனக்குப்புருஷனுண்டோ உத்தமியேசொல்லடி நீ

மின்னொளிக்கு புத்திசொன்னகுறம்.

தின-அன்னமேனுன்மின்னிடையே ஆரணங்கேநீகேளாய்
அறிந்தபடிசொல்கிறண்டி நெறிமுறமையாக
வனத்தமலரெடுத்தாலும் அரனைதொழுதாலும்
மகிழவொருநோன்புதனை தேர்ந்தாலுமாதே
நிட்டையோடிருந்தாலும் நீதிதானானாலும்
தெரியானலபூசை நீர்பண்ணினாலும்
கணவனார்தானாக வலியவந்தழைத்தாலும்
இவனுமிந்தவுலகிலுள்ளா ரெல்லார்க்குஞ்சொல்வேன்

ஏழையானாலுங்கணவ ரிருந்தானேயானால்
பின்னையொருதெய்வமென்ன ஒசந்திதானென்ன
பிதிர்க்கணங்கள்கோவில்கள் புகுவதுதானென்ன
எல்லாமுநீரேயென் றிரங்கிபேதொழுதால்
எல்லாம்பணிசெய்தவரே தேவரறியாரோ
நல்லநாளுமோவென்பார் சிதேவியரையும்
நன்மைமிகுத்தவளு மொருபத்தினியுமாவார்
சல்லாபசம்பத்து மைந்தர்களுமுண்டாம்
தையலரேநீருமிட்ட சாபங்களும்பலிக்கும்
பொல்லாங்கும்போக்கடிக்கும் இனிமேலுஞ்சொர்க்கம்
பூமியிலேயுண்டுகண்டாய் பொய்யல்லடிமாதே
விஸ்தாரம்பேசிடுவார் கணவனைநிந்திப்பார்
வெடபனுக்குமனையாட்டி யாகினேனென்பார்கள்
சற்றேபசட்டனுப் வீட்டுக்குள்ளேயிருந்தால்
தங் ளிடஅதிஷ்டமென்று தாமுமறியாரோ
பத்தாவைநொந்தவர்கள் பித்தாகச்சமைவார்
பரமனிடதன்னருளால் மயிலவனாருளால
சத்தியங்காணிவ்வார்த்தை யுனக்குமட்டுமல்ல
இத்தரணியில்வாழ்பெண்களுக்கு மனைவோர்க்குஞ்சொல்வேன்
அன்னமெனுமின்னிடையே ஆரணங்கேகேளாய்
அறிந்தபடிசொல்லுகிறே னெறிமுறைமையாக
வானஸ்தனம்காண்குழையு மருவியுன்னையனைய
மன்னவரும்போதாச்சு மின்னிடைபேசேளாய்
மகுடமுடிமன்னரிப்போ வருங்குறியைசொல்வேன்
விகடமொன்றுவார மல விநாயகரைதொழுவேன்
கபடில்லேமுறத்திலமுத்து கடுகளிசைந்திடுவோம்
முத்தாலேமிகப்பரப்பி குறியுரைப்பேன்பெண்ணே
வித்தானகணவனிப்போ விரைந்தோடிவருவான்
என்றவளைதான்பார்த்து விழிபாலேமிரட்டி
பிலக்குறத்திகன்னேப்போலே இடைதுவளநடைந்தாள்

மின்னொளியாள் புருஷன்வரகேட்டது வேறு.

விளங்கியமாதவத்து மின்னிடையுமேதுசொல்வாள்
எண்ணறவோதி யெழுத்தப்படித்தாலும்
பெண்மதியாலேயல்லோ பிழைமோசமாகிறது
மன்னவருங்குறியைச் சொல்வாய்மலேகுறத்தி
விஜையன்வருங்குறியைச் சொல்வாயநீமெல்லியரே
கூடையிலேமுத்தளந்து கொண்டுவந்துமுன்னேவைத்தாள்

குறத்தி அருச்சுனன் வருகிறதாய்ச்சொன்னகுறம்.

தின-கனகக்கும்பமுலேயாளே கன்னியரேகேளாய்
கணவனிப்போவருங்குறியைக் கண்டுநான்சொல்ல
கருணைவல்லிதாயேநீ உண்மைசொல்லவேணும்

கந்தரேஎந்தனுக்கு முன்னடக்கவேணும்
முத்துகளைமிகப்பரப்ப விழியாலேசிமிட்டி
மெத்தமுள்ளமின்னடைக்குக் காமவிடாய்தீர
அருச்சுனனரிவளைவந்து அணைவதுமெய்யானல்
நச்சுமலைகொச்சியம்மை நடக்குங்குறிசொல்லு
குற்றமறயெந்தனுக்குச் சற்றேகுறிசொல்லும்
குமரேசராருளாலே குறிநடக்கவேணும்
என்றவளைநதான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதன்னைபோலே இடைதுவளநகைத்தாள்
வேறு-வாராய்நீமின்னிடையே வார்த்தையொன்றுநீர்கேளும்
கூடையிலேமுத்தளந்து கொண்டுவாமின்னிடையே
நினைத்தகுறிமோசமில்லை நேரிழையேஎந்தனுக்கு
கண்டுகுறிசொல்லிடுவேன் கடுகமுத்தெடுத்துவாராய்
கன்றுதான்கேட்டு ஏதுசொல்வாள்மின்னிடையும்
முத்துமுத்தென்கிருய் நத்திபேசேட்கிருய்
மெத்தாசைபடுகிருய் வீணியடிநீகுறத்தி
நச்சுநச்சென்கிருப் நாபகமேகட்டுவச்சி
என்றுமுறத்தாலேமுத்தளந்து முன்னலேவைத்தார்கள்
சதிராய்மிகமெழுகி சாணிபிள்ளையாரும்வைத்து
அறுகுபுஷ்பஞ்சூடி அட்சதைகாப்புமிட்டு
தூபதீபந்தான்கொடுத்துத் தொழுதாள்குறத்தியவள்
குறம்-தின-குறத்திமுத்தைமிகப்பரப்பி குறியிதுவேயென்பாள்
கோலவிழியால்மயக்கி மிகநோக்கிநகைப்பாள்
ஐங்கரனேமுக்கணனே ஆனைமுகத்தோனே
அருச்சுனனரிக்கோயில் வருவாரோசொல்லும்
சங்கரனர்புத்திரனே சரஹணபவனே
தார்விசையனிக்கோயில் வருவாரோசொல்லும்
மனைபிடத்துதேவதைகள் மகிழுமஞ்சளமுகி
மடிச்சிலைக்காரிமுதல் வந்துநிற்கவேணும்
பொங்கல்மிகாயினரும் பொற்கொடியேதெய்வமே
பூவாடைகாரிமுதல் வந்துநிற்கவேணும்
மண்ணுப்பிடாரிநீ மழுவேந்துங்குறத்தி
வடவாசல்செல்லியம்மை வந்தருளவேணும்
ஆகாயதேவதைக ளையன்பிடாரி
அலைகடல்கன்னிமுதல் வந்தருளவேணும்
ஏழுகடற்கன்னிமுதல் இளையதஞ்சிமாரும்
இன்பமுள்ளகுறியெனக்குத்தந்தருளவேணும்
மலையாளகொச்சியம்மை வந்தனருள்வேணும்
வாள்விசையனிக்கோயில் வருவாரோசொல்லும்
தெய்வங்களைநினைத்தாலே சிலுத்துக்கொள்ளுதடம்பு
திரேகமெல்லாமயிர்க்கூச்ச லிடுகிறதேபெண்ணே

வாடைமணம்வீசுதடி மைவர்வந்தாப்போல
மாய்க்குதடியென்னுடம்பை சன்னகங்கொண்டாற்போல்
கூடைகொண்டுகவியுதடி கோமளமேபெண்ணே
கோலவிழிதுடிக்குதடி குறிகளிப்போகேளாய்
மங்கையரேகள்ளியிப்போ சொன்னதினாலே
வரவேணும்பார்க்கனிப்போ வள்ளியம்மையருளால்
இன்னமரைநாழிகையில் அருச்சுனமகாராசன்
வண்ணமுடனிக்கோயில் வரப்போறான்பெண்ணே
கொச்சைக்குறத்தியிட குறிகளும்பொய்யாது
கொச்சியம்மையாணையென்றுகூடையின்மேலடித்தாள்
வேறு-விளங்கியசீர்மாதவத்து மின்னிடையாளேதுசொல்வாள்
விசையரிதோவிதிவந்தா ரென்றீரேமெல்லியரே
விஜயராவந்தபிற்பாடு மெல்லியரேபோய்விடுவேன்
அந்தப்புறத்திலே ஆரணங்கும்போய்நுழைந்தாள்
உள்வாசல்வந்தமர்ந்தாள் பேடைமலர்கண்ணும்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தங்கேதுசொல்வாள்
இக்கோலமாயிருந்தாள் இங்கேவாரான்பார்த்தனவன்
மெக்கோலமாகிநீர் மஞ்சனமாடுமென்றாள்
மஞ்சனமாடாதே மங்கையரேநீயிருந்தால்
சென்மத்திலும்வாராண்டி தேர்விஜயனிக்கோயில்

மின்னொளிக்கு குறத்தி ஸ்நானஞ்செய்து வைத்தது.

எண்ணெய்கொண்டுவாருமென்று ளேந்திழையாள்கட்டுவச்சி
அருகிருந்ததாதியவள் நிடுக்கெனவேதானெழுந்து
பூவெழுதிசித்திரித்துப் பொன்மடலைத்தானெடுத்து
பூவாசயெண்ணைதனைப் பொற்கொடிமார்கொண்டுவந்தார்
வண்ணக்குறத்தியவள் மலைக்குறத்திதானெழுந்து
மின்னிடைக்குப்பின்னாலே மெல்லியரும்வந்துநின்றாள்
பன்னிரண்டாண்டுமுன்னே பின்னிவிட்டகேசத்தை
மாணிக்கக்கச்சரடவிழ்த்து மயிரைவிரித்துவிட்டாள்
நீக்கிவகிர்த்தாளே நெறிமுறைமையின்படியே
பூவாசயெண்ணையை ஏலமிச்சஞ்சார்வார்த்து
ஆறுய்வகிர்ந்தாளே ஆர்க்கத்தலைகிறி
குங்குமவார்குழலை கிறிகொண்டைபோட்டாளாம்
எண்ணையிடும்போதையிலே இளவிசையனர்ச்சுனனார்
தாதிகளறியவென்று தன்னொளியைக்காட்டினார்
பல்லொளியைக்காட்டினார் பார்த்தார்கள்தாதியர்கள்
மின்னொளியைப்போலவே பல்லொளியைக்கண்டார்கள்
பரசவீணைபார்த்தலவோ பயந்தார்கள்தோழியர்கள்
கானகக்குறத்தியல்ல காண்டீபரருச்சுனர்காண்
குறத்தியென்றுநாமிருந்தோம் கோதண்டபாணியவர்
வண்ணக்குறத்தியைப்போல் வடிகொண்டுவந்தாரே

பெறுமையாய்த்தானிருந்தால் தெண்டனைகள் நேருமென்று
மஞ்சனச்சாலை அமைத்து வைத்தார்கள்தாதியர்கள்
மற்றுஞ்சிலதாதி மடவாரெழுந்திருந்து
செம்பொன்னின்கட்டிலே அரைப்பரைத்துவைத்தார்கள்
சிக்காயும்நெல்லி சிறுபருப்புகஸ்தூரி
பச்சிலைமஞ்சள் பசுமஞ்சளரைத்துவைத்தார்
மற்றுஞ்சிலதாதி மடவாரெழுந்திருந்து
தட்டிவுரயமே தாளிணையிலதப்மடித்து
எங்குமலங்கரித்துச் சந்தனநீர்தெளித்து
கண்மூன்றுடைய கல்வபிரக்கட்டிலிட்டு
மெத்தைபிரித்திட்டு மேலேயணைகோலி
காம்பரிந்தயைங்கலப்பூ கட்டிலின்மேற்சொரிந்து
கால்கோட்டைகைகோட்டை பிட்டக்தகன்னியரும்
தங்கத்தலைகாணி சகலாத்துத்தழுவணையும்
சாரத்தலைக்காணித் தழுவணையும்போட்டார்கள்
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்குச்சுவிட்டு
பல்லிகைமுல்லைகளை வகைவகையாய்த்தூக்கேற்றி
பஞ்சவர்ணக்கிளியைப் பலதிசையுங்கட்டினார்
அத்தர்புனுகுகளும் அள்ளித்தெளித்தார்கள்
கதம்பகஸ்தூரியும கரைத்துத்தெளித்தார்கள்
சாம்பிராணிப்புகைபோட்டார் சந்தனப்புகைகொடுத்தார்
பஞ்சணையைச்சேர்ந்தார் பாங்கியர்களானவர்கள்
மற்றுஞ்சிலதாதி மங்கையர்களோடிவந்தார்
மஞ்சனச்சாலை சமைத்தென்றுதெண்டனிட்டார்
அப்போதுகுறத்தியவள் அலங்காரமாயெழுந்து
மஞ்சனச்சாலைக்கு வாருமென்றாள்மின்னிழையை
ஸ்தானங்களாட்டிவைக்க சற்றேயெழுந்திரென்றாள்
விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுயாள்
குறத்தியுடமையாலே குனித்துமுழுவேனே
அத்தண்டதாதியர்க ளனைவோரும்யோசனையாய்
அவரவர்தம்பணிக்கு அனைவோரும்போய்நடந்தார்
சிறிதுபேர்தாதியர்கள்சீக்கிரமாய்நடந்து

தாதிகள் அவளவள் வேலையைசாக்கிரதையாய்ச் செய்தது.

கோலமடப்பள்ளியைக் குச்சிட்டுத்தாள்திறந்து
எங்குமலங்கரித்துக் சந்தனநீர்தெளித்து
அடுப்புமெழுகுவார் அட்சதைக்காப்பிடுவார்
பானைகழுவப் பனிநீருலைசாய்ப்பார்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
போதச்சமைப்பார்கள் பொற்கொடிமார்தாதியர்கள்
மற்றுஞ்சிலதாதி மங்கையர்களோடிவந்து
வெள்ளிக்கிடாரத்தில் வேண்டியநீர்வார்த்து

பாண்டந்தொடலாமே பங்கயஞ்சீர் கண்ணாளே
கண்டாரநகையாரோ கலியுகத்தாரேசாரோ
சற்றேயிருகுறத்தி ஸ்நானஞ்செய்துவாரேனென்றாள்
வண்ணக்குறத்தி யலைக்குறத்தியேது சொல்வாள்
அல்லியிற்பிறந்தாட்கும் அனலிற்பிறந்தாட்கும்
இருவருக்குங்கைபார்த்து ஸ்நானங்களாட்டிவைத்தேன்
தாதிமார்தோழிமார் தையலமாரில்லாமல்
தனியாகநானிருந்து ஸ்நானஞ்செய்துவைத்தேனே
அவர்களைப்பார்க்கிலும் ஆடணங்குநீபெரிதோ
விசைபன்வருகிறதை மெல்லியரேபார்க்கிறேன்
ஆளன்வருகிறதை அறிகிறேமின்னிடையே
கூடையெடுத்தவளும எழுந்தாளேகொம்பனையாள்
வாடிக்குறத்திநீ மனதுசலியாதே
மனதுக்கிசைந்தபடி செய்வாய்நீவாடியென்று
மஞ்சனச்சாலையிலே வந்தாரிருவருமாய்
அத்தண்டதாதியரு அப்புறத்திற்போனார்கள்
அடியார்கள்போனபின்பு அக்குறத்திமாதருமே
மஞ்சனச்சாலை மணிக்கதவைத்தாள்போட்டாள்
பட்டாடைவாங்கியே பலபணியுந்தான்கழட்டி
சிற்றாடைவாங்கியே சிறுபறையுந்தான்கழற்றி
நாற்காலின்மேலாக நாயகியைத்தானிருத்தி
சிக்காயும்நெல்லி சிறுபறையுந்தானெடுத்து
ஆனந்தமாரிக்கு அரப்பிட்டுநீராட்டி
பச்சிலைமஞ்சள் பசுமஞ்சள் தானெடுத்து
கொம்பனையாள்முகத்திலேயுங் குங்குமமாரிலேயும்
மேல்விழுந்துமேலவிழுந்து மெல்லியற்குப்பூசினாள்
அப்போதுமின்னிடையு மாரணங்குமேதுசொல்வாள்
ஏதடிகுறத்திநீ யென்மேல்விழுகிறாய்
மயக்குதலையாவானேன் மாதேவிழுவானேன்
அல்லகாண்பெண்ணே யாரணங்கேநீகேளாய்
அல்லிபவள்கொலுவில் ஆண்டொளியைப்பார்த்திருந்தேன்
நேற்றிரவுநித்திரை இல்லாததன்மையினால்
கண்ணைவுறக்குதுகாண் கட்டழகிபெண்தனுக்கு
நித்திரைவருகுதடி நினைவைக்குலைக்குதென்றாள்
ஸ்நானங்களாட்டிவைத்தார் தாமக்கருங்குழலை
நீர்காட்டிவூதியே நிலங்கிள்ளிக்காப்புமிட்டு
ஈரமுலர்த்தி இழைசேர்த்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரிகப்பட்டுடுத்தி
அரண்மனைக்குள்ளாக அழைத்துவந்தாளாரணங்கு
வட்டமனைமேலே மாதரைத்தானிருத்தி

## குறத்தி மின்னொளியாட்கு ஆபரணமணிந்தது.

சம்பங்கியெண்ணைகொண்டு சடைசிணுக்கறுத்து
வாரிமுடித்து மாணிக்கக்கொண்டையிட்டாள்
சீவிமுடித்து சிமிள்போலேகொண்டையிட்டாள்
ஒவ்வொருமயிருக்கு ஒவ்வொருபூவிதழாம்
பொன்னிதழும்பூவிதழும பூட்டியலங்கரித்து
கொண்டைக்குத்தண்டைகளும் கொண்டைதாங்கிமாலைகளும்
சந்திரபிறைசூரியபிறை தரித்தாளேநெற்றியிலே
நெற்றியிற்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
கருங்குருமான்வாலதுபோல் கண்களுக்குமையெழுதி
நடுநெற்றியில்நாமமிட்டு நற்சாந்துபொட்டுமிட்டு
ஒட்டுக்கடுக்கனும் இணைசேர்ந்தநாகவடம்
அன்னகொப்புபின்னைவாளி அழகுமிகுஞ்சவுளி
பச்சைக்கல்முருகும் பதித்திருந்தவாளிகளும்
நாய்க்கறைதன்னில் நடுக்கழுத்தில்பூஷணமும்
ஒற்றைச்சரடுகளும் இருபுறமும்பொனசரிகை
முத்துசரப்பளியாம் மோகனமாலைகளும்
சந்திரகாசசரப்பளியாம் தாயித்தைப்பூஷணமாம்
உத்திரசஞ்சமது உத்தமற்குப்யோடலூற்றாள்
தோள்வங்கிலைகவங்கித் தேன்மொழிக்குச்சாற்றி
கடகஞ்சரிபவழம் கைநிறைந்தமோதிரங்கள்
மூக்குத்திசிந்தாக்கு முன்கைமுகதாரி
ஐந்துவிரலுக்கும் அழகானமோதிரமும்
பத்துவிரலுக்கும் பதிந்தகணையாழி
அரைக்கிசைந்தயொட்டியாணம் அழகுபெறச்சாற்றினாள்
தண்டைகொலுசுஞ் சதங்கையும்பாடகமும
காலாழிகல்லணையும் பீலாழிபில்லணையும்
தேர்ப்பிலிமீன்பிலி தரித்தாளாந்தேன்மொழிக்கு
அஷ்டாபரணம் அலங்காரஞ்செய்தாளே
சரிகைப்புடவையைத் தரித்தாளேமங்கையற்கு
முத்துரவிக்கை முருகுமுலிக்கிதரித்தாள்
கண்ணாடிகொண்டுவாடி கட்டழகிதாதியென்றாள்
கண்ணாடிகொண்டுவந்து கட்டழகிகைகொடுத்தாள்
கண்ணாடிதானெடுத்து கட்டழகிகாட்டவந்தாய்
மின்னொளியாள்தானெழுந்து வெம்பிமிகத்ததுமபி
அன்றுமுதலிவ்வரையி லாரணங்குபார்த்ததில்லை
கண்டபனுய்நானுமாய்க் கண்ணாடிபார்த்ததல்லால்
கண்ணாடிபார்த்ததில்லை கட்டுவச்சிநாயகமே
அவ்வசனங்கேட்டு அருங்குறத்தியேதுசொல்வாள்
மன்னவனானுன்புருடன் வருகிறார்காண்மாளிகைகள்

சுபத்திரையாள்வீட்டு வாருண்டிமின்னொளியே
காகத்தன்னிவிடுவிட்டு வாருண்டிமின்னொளியே
போகவதிவீடுவிட்டு வாருண்டிமின்னொளியே
துரோபதையாள்வீடுவிட்டு வாருண்டிமின்னொளியே
அல்லியிடவீடுவிட்டு வாருண்டிமின்னொளியே
பவளக்கொடிமாது பத்தியாள்வீடுவிட்டு
வாருண்டிமின்னொளியே மன்னனரைநாழிகையில்
அரனாரைப்பூசைபண்ணி அமுதுபொசித்தீரானால்
கால்நாழிகைக்குள்ளே காளையருந்தான்வருவான்
என்மேலேயானையாக வருவான்காண்மின்னொளியே
என்றுசொல்லிமின்னிடையும் எழுந்தங்கேயேதுசொல்வாள்
அத்தனைப்போற்றியென்று அணைந்துமேதானிருந்து
அந்தமுறைசெய்யவல்ல அந்தணர்களோடிவந்து

### மின்னொளி பூசைசெய்கிறது.

செம்பொன்குடத்தில் திருமஞ்சனங்கொண்டுவந்தார்
சேபமதுதிறந்து சிவனாரைப்பூசைபண்ணி
எண்ணெயபிஷேகம் ஏந்திழையாள்தான்செய்து
பாலாலபிஷேகம் பத்தினியாள்தான்செய்து
பொன்னால்மலரெடுத்துப் பித்தரையும்பூசைபண்ணி
சந்தவாசனையைச் சாத்தினாள்தையலரும்
தட்டிலேபோசனமுந் தாளிபிலேபால்பழமும்
அரனார்சிவபூசை யாரணங்குதாமுடித்தாள்
அறிவுடையநாயகற்கு ஆகாரந்தான்கொடுத்து
சிவனாரைப்பூசைபண்ணி சேபத்தினையுள்ளடத்தி
அரனாமர்ந்தபெட்டி ஆரணங்குதான்பூட்டி
சுத்தமுடன்மின்னொளியுஞ் செவியிலேபூச்சொருகி

### மின்னொளியும் குறத்தியம் போசனமுண்ணுதல்.

அமுதுண்ணுமண்டபத்தில் ஆரணங்குதான்சேர்ந்தாள்
போசனங்கொண்டுவா பொறகொடியேயுண்ணவென்றாள்
தாதிமாரோடியே தளிகையதுகொண்டுவந்தார்
தையல்குறத்தியற்குத் தலைவாழையிலைபோட்டார்
மின்னொளியாள்முன்னாலே முக்காலியிட்டார்கள்
பொற்கலத்தைமுன்னேவைத்துப் போசனம்பாவித்தா
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
நல்லபொரிக்கறியம் இராசாக்கள்போசனமும்
பொரித்தபொரிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
பச்சென்றகீரையும் பவழம்போல்நற்கறியும்
அடவியில்தொவையல்களும் அழகானபச்சடியும்
துவல்குழம்புகளும் சீராய்ப்படைத்தார்கள்
புத்துருக்குநெய்வார்த்து போசனமுண்ணுமென்றார்
மாதுகுறத்தியவள் மலைக்குறத்தியேதுசொல்வாள்

ஒக்கவேயுண்பதற்குப் பொருந்தாதோவுத்தமியே
விளங்கியசீர்மாதவத்து மின்னிடையாளேதுசொல்வாள்
குறமாதுடனுசக் கூடவேவுண்பாரோ
ஏசாரோவென்னையிந்த! இனத்திலுள்ளபெண்களெல்லாம்
சோரவளநங்கையவள் சுபத்திரையாள்கேட்டாக்கால்
தூற்றியேகாற்றிவைத்துச் சொல்வார்பலருடனே
என்னைத்தகுலமெல்லாம் இழிகுலத்தில தள்ளிடுவார்
சற்றுமறியார்கள் தரணியிலுள்ளவர்கள்
என்னைகட்டுவச்சி யென்பேரில்தயவுவைத்து
உனக்குவைத்தபோசனத்தை உண்ணடிமாதேயென்றாள்
பார்த்தனெனுங்கட்டுவச்சி பைங்கொடியாளேதுசொல்வாள்
அல்லியற்கும்துரோபதைக்கும் அன்பாய்க்குறியுரைத்து
இன்பக்குறியுரைத்து இருவருமுண்ணலையோ
அவர்களைப்பார்க்கிலும் அதிகமாயுன்சாதி
விசையன்வருகிறதை மெல்லியரைபார்ப்போமடி
அர்ச்சுனன்வருகிறதை அறிவோமடிமின்னொளியே
நீ-வாழ்கிறதைபார்ப்போமடி மாதிசன்னிமின்னிடையே
கூடவுண்டாலல்லாது கொம்பனையேநான்போறேன்
என்று-கூடையெடுத்துமவள் கொம்பனையாள் தானெழுந்தாள்
விளங்கியசீர்மாதவத்து மின்னிடையாளேதுசொல்வாள்
உன்னைவெறுக்கக் கணக்கில்லைவுத்தமியே
பார்த்தவனருச்சுனனார் பண்ணிவைத்ததோஷமிது
கொண்டவற்கெளிதானல் கண்டவற்கெளிதாகும்
எவரைநான்போவேனடி என்றலைவிதிப்படிகாண
பார்த்தனென்னைத்தள்ளிவைக்க படியல்லோகுறத்தியரே
உனக்குமெளிதாச்சோ வுதமுடியுங்காலமாமோ

மின்னொளியும் குறத்தியும் ஒருகலத்திலுண்டது.

கூடவேவுண்ணுதற்குக் கொம்பனையேவாருமென்றாள்
தலையிலெழுத்தைதயடி தள்ளிவைக்கக்கூடாது
ஒக்கவேவுண்டிடுவோம் உத்தமியேவாருமென்றாள்
அப்போதகுறத்தியவ ளதிகப்பிரியமுடன்
சந்தோஷமாகவந்தாள் தாமக்குழலாளும்
அமுதுண்ணுமண்டபத்தில் இருவருமாய்போய்புகுந்தார்
ஒருகலத்திலபோசனங்க ளுண்டாளிருவருமாய்
கூட்டிப்பிசைந்துக் குறத்தியருமூட்டினள்
பாதியடிசில பகிர்ந்துண்டாள்கட்டுவச்சி
போசன முண்டு பொடியிட்டுக்கைதிமிர்
காலோடுகையும் கனிவாயுஞ்சுத்திசெய்து
வைத்தபெரிவடிவைத் தொட்டுடந்தசைந்து
வட்டபணையேவே வந்தயர்ந்தாரிருவருமாய்
அடைக்காயும்வெள்ளிலையும் அருந்ததிமுன்னேவைத்தாள்

வாசமிலேயெடுத்து மலைக்குறத்தியற்களித்தாள்
கடடுவச்சிவாங்கியே கண்ணோடேதானணைந்தாள்
கம்மாறுவெத்திலையும் களிப்புள்ளதுவர்பாக்கும்
இந்தாருமென்று இளங்குறத்திதான்கொடுத்தாள்
மன்னனருச்சுனனார் வாள்விசையனென்கணவர்
வந்தாலொழிய மலைக்குறத்திநாயகமே
அங்கேயிருந்து அடைக்காய்கள்தின்னுவரோ
கட்டுவச்சிநாயகமே கடைக்காய்கள்நான்வேண்டேன்
பார்த்தீபரிலலாமல் பரிமளங்கள்நான்திண்டேன்
என்னுணைகட்டுவச்சி யெத்தனுககுவேண்டாமென்றாள்
என்றுமவள்சொல்லி யிவளுரைம்பாள்கட்டுவச்சி
மன்னரிதோவாரூர் வாழ்வுனக்குண்டாச்சி
அறுமுகவர்தன்னுணை அம்லயவெள்ளிதன்னுணை
அர்ச்சுனனுருன்கணவன் அரைகெடியில்வாரான்காண்
பள்ளியறைக்குப் பைக்கிளியேபோமென்றார்
மின்னொளியுங்கட்டுவச்சி மிகவெழுந்துகைபிடித்து
பள்ளியறைவாசற்படிக் கதவையேதான்திறந்து
ஒருத்தமஞ்சபஞ்சணை ஒளிவழகைத்தான்பார்த்து
சுத்தியெங்குந்தான்பார்த்து துன்னிலம்பூசண்ணாலே
பார்த்தாள்குறத்தியரும் பங்கயக்சிர்கண்ணாலே
மின்னொளியேபெண்மயிலே விசையனார்வருவாரோ
பார்த்தர்வருவாரோ பஞ்சணைசோடிப்பில்
பின் யுமுண்டோடி பக்குவங்கள்மின்னொளியே
பள்ளியறையுந்தனுக்கு பார்க்கச்சமைந்ததோடி
தச்சன்சமைத்தானோ தானேசமைந்ததோ
எப்போதுமுண்டோடி யின்றுபுதிதோதான்
சிறையிலிருந்தேனென்று தேன்மொழியேசொன்னீரோ
அடைக்காயருந்தேனென்றாய் ஆபரணம்பூணேனென்றாய்
மைபொட்டுடுவதிலலை மஞ்சள்குளிப்பதிலலை
பாரச்சிறையில்வைத்தா பார்ததனென்றுசொன்னீரே
மெய்யென்றிருந்தேனே மின்னொளிநாயகமே
சூதகளுமுண்டோடி சோமன்மகளாரே
ஆரணங்கேமின்னொளியே அறியவுரையுமென்றாள்
இவ்வார்த்தைதான்கேட் டேதுரைப்பாள்மின்னொளியும்
கானக்குறத்தியரே கட்டுவச்சிநாயகமே
ஆருமொருவரில்லை ஆள்வரவுந்தானுமிலலை
சுந்தரப்பூதாதிமார் சொற்பேச்சுங்கேளார்கள்
என்பேசசுகேளார்க ளிடமிக்குந்தாதிமார்கள்
தங்களிடபேச்சினல் தான்செய்வார்தாதியர்கள்
இருந்தசிறைகாணமல் இவர்கள்செய்பக்காரியமேன்
என்னசெய்வேனென்று எரிபறந்துகண்சிவந்து

கட்டுவெடத்தின் கயிறுருவிவிட்டாற்போல்
திரமொடுங்கியிருவிழியில் முத்துதிர்த்தால்
முத்துப்போற்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டாள்
சோழன்மகளாருஞ் சோர்ந்திமனந்தளர்ந்து
ஆறுதகோபம் அனலாகநிற்கையிலே
தாமக்குழலாள் தாதியவள்கூறுவாள்
வந்தார்விசையனென்று மலைக்குறத்திசொன்னாளே
மணவாளனிப்போ மலைக்குறத்திசொன்னாளே
மணவாளனிப்போ வருவானென்றுசொன்னாளே
மெய்யென்றநம்பியே மின்னொளியேஆச்சியே
சோடித்தலங்கரித்தோம் சுந்தரியேபஞ்சணைகள்
எங்கற்மேற்கோபமுண்டு இந்தபிழைதாருமென்று
தாதியர்களெல்லாருந் தான்றொழுதிதெண்டனிட்டார்
இவ்வார்த்தைதான்கேட்டேதுரைப்பாள்கட்டுவச்சி

அர்ச்சுனன் அரைநாழியில் வருவானென்று சொன்னகுறம்.

தின-வாடியம மின்னொளியே வாள்விசையன்தேவி
உன்-மணவாளனரைநொடியில் வருவாண்டிபெண்ணே
கணவனிதோவுன்மனைக்கு கால்நடையாய்வருவான்
கைபார்த்தேனுந்தனுக்குக் கண்டுகுறிசொன்னேன்
அஞ்சாதேமினனொளியே அணைந்துவிளையாடி
அழகானகதிரவன்போல் பெண்பெறுவாய்பெண்ணே
சிந்தனைகள்தேவையில்லை சிறையுமீண்டுபோச்சு
திருச்சோழன்மகளேயென்று செங்கரத்தைப்பிடித்தான
வேறு-கானக்குறத்தியவள் கட்டுவச்சிகூறுவாள்
சொற்பொருக்கப்போகாது சோழன்திருமகளே
வாள்விசையன்தேவியென்று வாழாதிருந்தாலும்
ஆண்காற்றுமயங்கிவர அஞ்சுமடி மின்னொளியே
கலியாணமுண்டல்லோ கன்னியரேயுந்தனுக்கு
கண்ணீர்பெருகிறதைக் கணவனார்வந்தாக்கால்
வாறான்மணவாளன் மதிமுகமுந்தான்பாரான்
வாடிமயிலேயென்று மலைக்குறததிகைபிடித்து
கொங்கையின்மேலே குறத்தியவள்முத்தமிட்டாள்
கானக்குறத்தியரே கட்டுவச்சிநாயகமே
அறியாதபாலகரை யணைக்குமடிமேலே
என்னைமையலாக்கி யென்னுடம்பைபுண்ணாக்கி
மாயமலைக்குறத்தி வந்துகுறியுறைத்தாய்
உன்னெச்சிற்கலந்தலவோ யெனக்கமுதலூட்டிவைத்தாய்
கூடவுமுண்டாயே கோட்டையில்வந்தாயே
மன்னவனொண்கணவர் வருவாருமென்றாயே
பொய்யாச்சேயுன்குறிகள் பூங்குறத்திநாயகமே
கானக்குறத்தியவள் கட்டுவச்சிதானெழுந்து

மின்னொளியைப்பார்த்து மெல்லியருக்கூறுவாள்
குறம்-வட்டமதிமுகத்தாளே மின்னொளியேசேரும்
வடிவுடையவுன்புருஷன் வந்தாண்டிவாசல்
கூர்ககங்கள்வைத்துருக கொங்கைதனைப்பிடித்து
கோவையிதழ்மின்னொளியே கோதியணைவாண்டி
குறததிகானருகிருந்தால் கோபம்வரும்பெண்ணே
குறமாற்றமருச்சுனற்கு சூமட்டியடியாதோ
இங்கேயிருநானவரை அழைத்தோடிவருவேன்
ன்றுசொல்லிகுறத்தியவ ளேகிநடந்தாளே
பெண்வடிவுதனைமறநது பணிதிகளைவாங்க
பொற்கூடைதனிலந்த பேர்விசையன்தானும்
அனலுதித்தாளண்டையிலே போய்வாருமென்று
ஆகாயம்போவென்றே அந்தாத்தேதட்ட
ஆகாயமாய்பறநது அந்தக்குரக்கூடை
அனலுதித்தாலண்டையிலே அமர்ந்ததுவக்கூடை

குறவேடம்நீக்கி அருச்சுனன் தன் சுயரூபத்துடன்வந்து
மின்னொளியாள்கண்ணை மூடினது

மின்னொளியாள்கண்மலரை விசைனவர்மூடினர்
கண்மலரைமூடவே கன்னியவளேதுசொல்வாள்
கானக்குறமகளோ கட்டுவச்சிநாயகமோ
என் பத்தாவருச்சுனரோ பாக்கியரேசொல்லுமென்றாள்
ஆரெனக்கண்மரைந்தாற் அச்சங்களில்லாமல்
தாதியவள்தான்பார்த்து தையளவலேதுசொல்வாள்
விசையனார்தேவியரே மின்னொளிநாயகமே
ஆரென்றுநீரும் அடையாளம்சொல்லுமென்றால்
என்று தாதியவளுரைக்கத் தானுரைப்பாள்மின்னொளியாள்
கண்ணைமரைத்துக் காத்தையவள்பிடித்து
முந்நூற்றுக்காதவழி முழக்கமுள்ளபந்தலிலே
முத்திழைத்தபந்தலிலே முடுகிவந்துமாலையிட்டு
சுண்டுவிரல்பிடித்த சுந்தரனென்றுரைத்தாள்
காண்டாவனமெறித்த கட்டழகாலகைவிடுங்காண்
மன்னர்மயங்கி மலர்விழியில்லைகவாங்கி
கானக்குறத்தியாய்க் கைபார்த்தகட்டுவச்சி
அந்தக்குறத்தி யழகைநான்பார்க்கவேணும்
வேடக்குறத்தியை மின்னொளியுந்தான்பார்த்து
விசையனல்லாச்சொல்ல மினனொளியுந்தானபார்த்து
பார்த்தாளேமினனொளியும் பார்த்தனவடிவழகை
விசையரேயும்முடைய வேஷங்களெங்கேநீரோ
பூட்டியேயவாபரணம் புதைத்துவைத்துவந்தீரோ
கொண்வடயினமேல்தொங்கலும் கோல்திரிபட்டுடையும்
முத்தைப்போற்பல்லொளியும் முருக்கிதழ்போல்செவ்வாயும்

ஒட்டியசந்தணமும் உலவியகண்மலரும்
சந்தனபொட்டழகும் சதிரானநெத்தியும்
உரியுங்கனிப்பழமும் ஊர்வசிநாட்டமும்
கொச்சக்குறக்கூடை குறமகளின் தன்னழகும்
உம்மிட-மாயஸ்தனபாரம் மறைத்துவைத்துவந்தீரோ
மைபொட்டுதான்கலைக்க மதிகெட்டுப்போனீரோ
நீதானெழுந்திருந்து நீக்கியிவ்வடிவாகி
ஆறுமறியாமல் அங்கொருவர்காணாமல்
கோலமறைத்தீர் குறமுறைத்தீர்சொற்றவரே
இக்கோலங்கொண்டென்னை யீடழிக்கோவந்தீரோ
இத்தனைகால மிருந்தேன்சிறையாக
மைத்துனன்முன்னேதான் வாழாமல்வைத்தீரோ
என்-சக்களத்திமுன்னே சதிபிழைசெய்தீரோ
இப்போ-வந்திங்கேபோக மனதாச்சோமன்னவரே
உம்முடையதேவிமார் உரைக்கவும்வந்தீரோ
நீரேதான்வந்தீரோ நிலவரத்தைச்சொல்லுமென்றாள்
மின்னொளியாள்தான்கேட்டு விசையனவனேதுசொல்வான்
மெய்யாகசொல்லுகிறேன் மெல்லியரேநீர்கேளும்
மாயனிடதங்கையரே மனதில்நினையாதே
நாகமடந்தை நறுநுதலைச்சொல்லாதே
ஆணழக னருச்சுனனார்தானுரைக்க
வாருமென்றுசொல்லி மணிக்கடகங்கைபிடித்தாள்
செம்பொன்கதவடைத்து சிக்கெனவேதாள்பூட்டி
தேவியருமயானுமாய் சேர்ந்ததிருவணையில்
வெற்றிலைதின்று விரும்பிவிளையாடி
ஒருவர்க்கொருவ ருகந்துவிளையாடி
பலகாலுமிவருடனே பழகியிருந்தாற்போல்
தழுவாதுபோல தழுவிவிளையாடி
மாலைமுடியாமல் மடிமேலேகொண்டிருந்தாள்
சந்தோஷமாகவே தனஞ்செயனுமின்னொளியும்
செங்கோற்செலுத்தி சீராசையாண்டிருந்தார்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்தன்கதையை
எழுதிப்படித்தவர்கள் இந்திரனைப்போல்வாழ்வார்
காலைகுறங்கற்றோர்கள் காசினில்வாழ்ந்திடுவார்
கன்னியர்கள்கேட்டால் கடுகமணம்பொருவார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்ற முசியாமல்வாழ்ந்திருப்பார்
இக்கதைகேட்டவர்க ளீன்றிடுவார்புத்திரனை
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனா

மின்னொளியாள் குறம் முற்றிற்று.